
SAMARASAM
# சமரசம்
மாதம் இருமுறை இதழ்
16 - 31 மார்ச் 2026 ₹25
Volume : 46 Issue : 19
www.samarasam.net



போர்களால்
வீழும்
உலகப் பொருளாதாரம்

**ஆயத்துல்லாஹ் அலீ கமேனி**
ஒரு புரட்சியாளரின் வாழ்வும்
உயிர்த் தியாகமும்



# ஈரானுக்கு எதிரான அமெரிக்க இஸ்ரேலியப் போர்

## உள்ளும் புறமும்

- ஈரான் மீது அமெரிக்காவிற்கு ஏன் திடீர் பகை?
- எண்ணெய் வளங்களுக்காகவா இந்தப் போர்?
- ஈரான் அணு ஆயுதங்களைப் பதுக்கியதுதான் தாக்குதலுக்குக் காரணமா?
- ஈரானில் ஆட்சி மாற்றத்திற்காகவா இந்தப் போர்?
- வளைகுடா நாடுகளை ஈரான் ஏன் தாக்க வேண்டும்?
- போரின் இறுதி முடிவு என்ன?

விரிவான அலசல்

# பாரத்
# டிரேடிங் கம்பெனி




எங்களிடம் லிப்டிங் எக்யூப்மெண்ட்ஸ்,
வெல்டிங் எக்யூப்மெண்ட்ஸ் டூல்ஸ்
பவர் டூல்ஸ், சேஃப்டி அயிட்டம்ஸ்
தரமாகவும், நியாயமான
விலையிலும் கிடைக்கும்.

நெ.77, மதுரை ரோடு, (நாதன் பில்டிங்),
ராஜா தியேட்டர் பஸ் ஸ்டாப் எதிரில்,
திருச்சி - 620 008.

0431-4011122
98424-70530
0431-2705319
shajahan_btc@yahoo.com

திருச்சியின்
பிரம்மாண்டமான
இண்டஸ்டிரியல்
சூப்பர் மார்க்கெட்



## உள்ளே...


**7** — **தலையங்கம்**
உலக மனசாட்சியின் குரல் உயர்ந்தெழட்டும்

**8** — **டாக்டர் J.முஹையுதீன்**
ஈரானுக்கு எதிரான அமெரிக்க இஸ்ரேலியப் போர் உள்ளும் புறமும்

**18** — **S.சாகுல் ஹமீது**
திருப்பரங்குன்றம் FILES தொப்புள் கொடி உறவும் மரபும்

**20** — **இப்னு ஜமால்**
ஆயத்துல்லாஹ் அலீ கமேனி ஒரு புரட்சியாளரின் வாழ்வும் உயிர்த் தியாகமும்

**24** — **அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது**
ரமளானைத் தொடர்ந்து அடுத்து என்ன?

**29** — **மௌலவி முஹம்மது ஹனீஃபா மன்பயீ**
நூறாண்டு கால எளிமையின் அடையாளம் : தோழர் நல்லகண்ணு

**30** — **கப்ளிசேட்**
போர்களால் வீழும் உலகப் பொருளாதாரம்

**42** — **முகம்மது கபீர்**
AI தொழில்நுட்பமும் எதிர்கால வேலைவாய்ப்பும்

**44** — **ஷிஹாபுத்தீன் இப்னு ஹம்சா**
ஆளுமை உருவாக்கம் குர்ஆனில்..!

**48** — **அ.முத்துக்கிருஷ்ணன்**
கவிதை
கண்ணீரின் வாசம்

● கடிதங்கள் ● திருக்குர்ஆன் விரிவுரை ● நபிமொழி விளக்கம் ● புதிர் போட்டி ● கடைசிப் பக்கம்



ஆசிரியர் - வெளியிடுபவர் : **H.அப்துர் ரகீப்**

பொறுப்பாசிரியர் : **வி.எஸ். முஹம்மத் அமீன்**

இதழ் வடிவமைப்பு : **M. முஹம்மது அபூபக்கர்**

*படைப்புகளை அனுப்ப :*
**samarasam.article@gmail.com**

*சந்தா - விநியோகப் பிரிவு*
*விளம்பரத் தொடர்புக்கு :*
**M.அப்துல் காதர் 95661 53142**

*விளம்பரங்களை அனுப்ப :*
**samarasam.advt@gmail.com**

**சந்தா விவரம்**

| | | |
|---|---|---|
| ஓர் ஆண்டு | : | ரூ.550 |
| அரையாண்டு | : | ரூ.280 |
| வெளிநாடு (ஓர் ஆண்டு) | : | ரூ.3500 |

பணவிடை, காசோலை, வரைவோலை அனுப்புவோர்: Creative Communication Chennai எனும் பெயருக்கே அனுப்ப வேண்டும்.

*கடிதங்கள், படைப்புகள்*
*அனுப்ப வேண்டிய முகவரி:*
பொறுப்பாசிரியர்,
சமரசம்,
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை 12
● 044-2662 0091
● samarasam.article@gmail.com
● www.samarasam.net

## நெஞ்சைத் தொட்ட வரிகள்

சான்று பகரும் நோன்பு தோழர் அப்துல் சத்தார் எழுதிய கவிதை வரிகள் நோன்பின் மாண்பையும் அதன் மகத்துவத்தையும் அருமையாக மனதில் பதியும்படி எடுத்துரைத்தது. பொருத்தமான தொழுகைப் படமும் கவிதைக்கு அழகு சேர்த்தது. குறிப்பாக கஸ்தூரி வாசமும் ரய்யான் வாசலும் என்ற வரிகள் எதுகை மோனையுடன் என் நெஞ்சைத் தொட்டது! வாழ்த்துகள்.

– கவிஞர் கடல் நாகராஜன், கடலூர்

## நாட்டு நிலைமையும் தீர்வும்

எப்ஸ்டீன் கோப்புகள் தலையங்கச் செய்தி மனதை உறைய வைத்தது. சிறுமிகளைக் கடத்தி பாலியல் வேட்டையில் ஈடுபட்ட கயவர்கள் எத்தனை பெரிய பதவியில் இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும். வடஇந்தியாவில் பல மாநிலங்களில் ஆயிரக்கணக்கான சிறுமிகள் காணாமல் போவது வாடிக்கையாக உள்ளது.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு உறுப்பினர்கள் மாநாட்டில் அகில இந்தியத் தலைவர் தனது உரையில் நாட்டின் தற்போதைய மோசமான நிலையையும் அதற்கான தீர்வையும் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்.

ரமளான் அருளப்பட்டது எதற்காக கட்டுரையை K.ஜலாலுத்தீன் நேர்த்தியாக மனதைத் தொடும் படி எழுதியுள்ளார். H.அப்துர் ரகீப் அவர்களின் கட்டுரை ஜகாத்தின் உயரிய நோக்கத்தைத் தெளிவுபடுத்தியுள்ளது. சிவாத்மா குருஜி சொன்னது போல் சமய நல்லிணக்கப் பேரவைகள் நாடு முழுவதும் தொடங்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயம்.

– சேயன் சேக் முகையதீன்,
கடையநல்லூர்



## வறுமையை ஒழிக்கும் திட்டம்

ஆட்சியாளர்கள், செல்வந்தர்கள், அறிவு ஜீவிகள் பலரும் எப்ஸ்டீன் ஃபைலில் சிக்கியது மிகுந்த வேதனையளிக்கிறது. ஏழைகளை ஜகாத் மூலம் எப்படி பணக்காரர்கள் ஆக்குவது எனும் அப்துல் ரகீப் அவர்களின் தொகுப்பு மிகச் சரியான வழிகாட்டல்கள். மக்கள் பின்பற்றினால் நிச்சயமாக வறுமை இல்லாத ஒரு சமுதாயத்தை உருவாக்க முடியும். சான்று பகரும் நோன்பு கவிதை வளமான வார்த்தைகள்.

– ஐ. சாந்த் உஸ்மானி, ஆலந்தூர்

## சிறப்பான பாடம்

அகத்தூய்மைக்காக அருளப்பட்ட கடமையே ரமளான். இது மனித குலத்திற்கே அமைதியைத் தரவல்ல பயிற்சி. மாநாட்டு உரை மிகச் சிறப்பு. வாழ்க்கைப் பாடம் பசித்திரு சிறப்பான பாடம். ஏழைகளைப் பணக்காரர்களாக்கும் ஜகாத் திட்டம் இஸ்லாத்தின் அற்புதம்.

– ப.குருசாமி, தேனி

## இரக்கத்தின் திறவுகோல்

ஜரினா ஜமால் எழுதும் அக்கரைப் பச்சை தொடர்கதை குடும்ப உறவுகளைக் கண்முன் நிறுத்தி நலம் விசாரிப்பது போல எழுத்து பிர(மாதம்)வாகம் நடை மிகச் சிறப்பு. H. அப்துர் ரகீப் அவர்களின் கட்டுரை இரக்கத்தைப் பூட்டி வைத்திருப்பவர்களுக்குத் திறவுகோலாக அமைந்துள்ளது. எல்லோரும் பணக்காரனாவது எப்படி என வழிகாட்டிக் கொண்டிருக்க, 'ஏழைகளையும் ஜகாத் மூலம் பணக்காரர்களாக்குங்கள்' எனும் இஸ்லாமிய மார்க்கம் காட்டும் உயரிய நெறி பாராட்டுக்குரியது.

– சோழா புகழேந்தி, கரியமாணிக்கம்

## பயிற்சிப் பட்டறை

ரமளான் சிறப்புக் கட்டுரைகளுடன் வெளிவந்துள்ள இந்த இதழ் பாதுகாக்க வேண்டிய கருவூலம். ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு உறுப்பினர்களின்

மாநாடு சிறந்த ஒரு பயிற்சிப் பட்டறையாக அமைந்தது. ஜகாத் குறித்த அப்துர் ரகீப் அவர்களின் கட்டுரை ஆழ்ந்து சிந்திக்க வைத்தது. ஹிதாயா பெண்கள் கல்லூரி போன்ற மகளிர் கல்லூரிகள் நம்முடைய பெண்கள் சிறந்த வழியில் நடைபோட உந்து சக்தியாக அமையும்.

– முஹம்மது ஆரிப், ஒசூர்

## சிறிய கட்டுரை; பெரிய வழிகாட்டல்

ரமளான் எதற்காக அருளப்பட்டது கட்டுரை எல்லாரும் புரியும் வண்ணம் அமைந்தது மிகச் சிறப்பு. அதுபோல பசித்திரு கட்டுரையும் ரத்தினச் சுருக்கமாக பெரிய வழிகாட்டுதலை வழங்கியது. தலையங்கம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. எப்படிப்பட்ட காலகட்டத்தில் வாழ்கிறோம் என்று எண்ணி வெட்கித் தலைகுனிய வேண்டியுள்ளது. அந்தப் பாவத் தீவில் நடந்த கொடூரங்கள் கேவலங்களை இனி தொடராமல் இருக்க இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? 2005லேயே விஷயம் கசிந்து விட்ட போதே ஐ.நா. சபை தலையிட்டு தகுந்த நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

– ப.சையத் அஹ்மத், துளசேந்திரபுரம்

## கைகோர்ப்போம்

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் உறுப்பினர்கள் மாநாட்டில் அகில இந்தியத் தலைவர் ஆறு பிரச்னைகளில் நாட்டின் நிலைகள் அனைத்தையும் கொண்டு வந்து விளக்கிய விதம் அருமை. பிரச்னைகளுக்குத் தீர்வையும் மிகச் சரியாகக் கூறியுள்ளார். வாசிப்பதோடு நின்று விடாமல் இன்றைய முரண்பாடான நிலைமையை மாற்ற முயற்சிப்பவர்களுடன் கைகோர்த்து நாமும் துணை நிற்க வேண்டும்.

ஜகாத் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளபடி சில இடங்களில் பைத்துல்மால் மூலம் கூட்டுமுறை ஜகாத் வசூலிக்கப்பட்டு விநியோகம் நடக்கிறது. இது போதாது. ஒவ்வொரு ஊரிலும் ஜகாத் கமிட்டி உருவானால்தான் ஜகாதின் நோக்கம் நிறைவேறும்.

– S.A. சபீர் அஹ்மது, ஆணைக்காரன்சத்திரம்

## தூண்டுகோல்

எப்ஸ்டீன் கோப்புகளின் எடை கூடிக் கொண்டே போகும் அபாயம் இருக்கிறது. மௌலானா அபுல்கலாம் ஆசாத், மௌலானா சத்ருத்தீன் இஸ்லாஹி ஆகியோரின் ஜகாத் குறித்த வேண்டுகோள் ஜகாத் கொடுப்பவர்களுக்குத் தூண்டுகோலாய் அமைந்துள்ளது. நோன்பின் மாண்பு கவிதை சிறப்பு.

– எம்.எஸ்.பாரூக், திருப்பாலத்துறை

## வாழ்வு முழுமைக்குமான பயிற்சி

ரமளானின் ராஜபாட்டையில் நடை பயிலும் நேரம் இது. அமைதி, அன்பு, ஒழுக்கத்தைக் கற்றுத் தரும் நோன்பு முப்பது நாள்கள் மட்டுமல்ல. நம் வாழ்வு முழுமைக்குமான பயிற்சி. இச் செய்தியைப் பரவலாக்குவது நம் கடமை.

– ப.பீர் இலாஹி, உத்தமபாளையம்

## ரமளான் தொடர வேண்டும்

ரமளான் மாதத்தில் முஸ்லிம்கள் பொய் பேசாத அறவாழ்வு வாழ்ந்து ஜகாத்தும் கொடுக்கிறார்கள். மத வேறுபாடின்றி நோன்புக் கஞ்சியை அனைவருடனும் பகிர்ந்து உண்கின்றார்கள். போதை, மது, லஞ்சம் போன்ற தீமைகளின் காலத்தில் ஓர் அருமையான பயிற்சி நோன்பு. ஆனால் இந்த மாதத்துடன் முடிந்து விடாமல் வாழ்வு முழுவதும் நல்லொழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். ரமளான் தொடர வேண்டும்.

– இரா.சண்முகவேல், கீழக்கலங்கல்

## உரையை எதிர்பார்க்கிறோம்

ரமளான் திருக்குர்ஆனின் மாதம். திருக்குர்ஆன் எனும் உயிர் நதி உலகம் முழுவதும் வளத்தைத் தர வேண்டும். ஆன்மிக விழாக் காலத்தைச் சரியாகப் பயன்படுத்துவோம். ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநாட்டுச் செய்தி சிறப்பு. மற்ற பேச்சாளர்களின் உரையையும் எதிர்பார்க்கிறோம்.

– S. மகுதனன், M. லைலாம்மா,
S. அஜிதா, தேனி

படிப்பது சுகமே ! கற்பது நலமே !

# RDB கல்வி நிறுவனங்கள்

RDB Educational & Charitable Trust

AIM HIGH AIM FAR

ISO 9001 : 2000 உலகத் தரச் சான்று பெற்ற கல்லூரி.

எண்:4, சாலியமங்கலம் ரோடு, பாபநாசம் - 614 205. தஞ்சாவூர் மாவட்டம்.

## ADMISSIONS OPEN

### RAJAGIRI DAWOOD BATCHA COLLEGE OF ARTS AND SCIENCE

Recognized by UGC under Section 2(f) & 12(B) | Affiliated to Bharathidasan University, Tiruchirappalli

**UG COURSES**

B.Lit. Tamil | B.A. English
B.B.A., | B.Com., | B.Com., (Commerce)
B.Com., (Computer Application)
B.Com., (Bank Management)
B.C.A., (Computer Application)
B.Sc., (Artificial Intelligence)
B.Sc., (Information Technology)
B.Sc., (Bio-Technology)
B.Sc., (Mathematics)
B.Sc., (Visual Communication)
B.Sc. Mathematics / Physics / Biotechnology
B.Sc. Biochemistry / Microbiology
B.Sc. Visual Communication
B.Sc. Hotel Management & Catering Science
B.Sc. Fashion Technology & Design *
B.Sc. Nutrition and Dietetics *
B.Sc. Psychology *
B.A. Islamic studies *

**PG COURSES**

M.B.A., (Hospital Management)
M.B.A., (General)
M.Com., (Commerce)
M.Sc., (Computer Science)
M.Sc. Information Technology

**RESEARCH COURSE**

M.Phil., (Computer Science)
M.Phil., (Commerce)
M.Phil., (Management)
Ph.D., (Management)
Ph.D., (Commerce)

### RDB MATRICULATION HIGHER SECONDARY SCHOOL

(Approved by Department of School Education, Govt. of Tamil nadu Approval No : 5353A.1/2.20)

**LKG to XII Std**

+1 COURSES OFFERED

1. Maths - Physics - Chemistry - Biology
2. Maths - Physics - Chemistry - Computer Science
3. Physics - Chemistry - Botany - Zoology
4. Physics - Chemistry - Biology - Computer Science
5. Economics - Commerce - Accountancy - Computer Application
6. Economics - Commerce - Accountancy - History
7. Economics - Commerce - Accountancy - Business Maths

### RDB COLLEGE OF EDUCATION

(Affiliated to Tamil Nadu Teachers Education University, Chennai) Accredited by NAAC with 'B' Grade

- B.Ed. (2 Year Programme)
- M.Ed. (2 Year Programme)

### RDB INSTITUTE OF MANAGEMENT

(Approved by AICTE, Affiliated to Bharathidasan University)

- M.B.A. (HR, Finance, Operation, Systems, Marketing)
- M.B.A. (Hospital Management)

**RESEARCH COURSE**

- M.Phil., Management
- Ph.D., Management

### RDB SCHOOL OF NURSING & PARAMEDICAL SCIENCE (ANM)

(Approved By Tamil Nadu Nursing Council Health and Family Welfare)

- Diploma in Auxiliary Nurses and Midwives (ANM)
(2 Year Diploma Programme)

### RDB COLLEGE OF NURSING AND PARAMEDICAL SCIENCE

OPENING SOON

*All Muslim Parents are Requested to Support us in Admissions*

HOSTEL AVAILABLE FOR GIRL STUDENTS

63809 80363 / 04374-222123

admissions@rdbcas.edu.in

சரம் : 46
மலர் : 19

وَقُولُوا۟ قَوْلًا سَدِيدًا

சொல்வதைத் தெளிவாக - நேரடியாகச் சொல்லுங்கள்

ஹிஜ்ரி 1447 ரமளான் 26 - ஷவ்வால் 11 ● 2026 மார்ச் 16-31

# உலக மனசாட்சியின் குரல் உயர்ந்தெழட்டும்

2026 பிப்ரவரி 28ஆம் நாள் தொடங்கி இன்றுவரை அமெரிக்க இஸ்ரேல் கூட்டுப் படைகள் ஈரான் மீது கடும் தாக்குதலைத் தொடர்ந்து வருகிறது. இத் தாக்குதலில் ஈரானின் உயர் தலைவர் ஆயத்துல்லாஹ் கமேனியும் அவருடைய மகள், மருமகன், மருமகள், பேரன் ஆகியோரும் கொல்லப்பட்டனர். ஈரானிலுள்ள பள்ளிக் கூடத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் 165 குழந்தைகள் கொல்லப்பட்டனர். இத் தாக்குதலுக்குப் பதிலடியாக ஈரான் இஸ்ரேலையும், வளைகுடா நாடுகளிலுள்ள அமெரிக்கத் தளங்கள் மீதும் கடும் தாக்குதலை மேற்கொண்டு வருகிறது.

ஃபலஸ்தீனுக்கு ஆதரவாகவும் இஸ்ரேலின் அராஜகத்திற்கு எதிராகவும் இருக்க வேண்டிய அரபு நாடுகள் உள்ளிட்ட இஸ்லாமிய நாடுகள் இஸ்ரேலுக்கும், அமெரிக்காவிற்கும் அடிபணிந்து வாய்மூடிக் கிடக்கும் வேளையில் ஃபலஸ்தீனுக்கு ஆதரவாக அமெரிக்காவையும், இஸ்ரேலையும் தீரத்துடன் எதிர்த்து வந்தது ஈரான் மட்டுமே. அதற்காகத்தான் இந்த அநீதியான தாக்குதலை அமெரிக்க இஸ்ரேல் கூட்டுப் படைகள் நிகழ்த்தி வருகின்றன. அத்துமீறி ஒரு நாட்டில் தாக்குதலைத் தொடுத்து அந்த நாட்டின் உயர் தலைவரையும், குழந்தைகளையும் கொலை செய்திருப்பது சர்வதேசப் போர் விதிகளை மீறிய கொடும் குற்றம். வன்மையான கண்டனத்திற்கும், தண்டனைக்கும் உரிய மனித உரிமை மீறல் இது.

பாதிக்கப்பட்ட மக்களின் பக்கமும், நீதியின் பக்கமும் நிற்க வேண்டிய வளைகுடா நாடுகள் தங்கள் நாடுகளில் அமெரிக்கப் படைகளுக்கான தளங்களை அமைத்திருப்பது வேதனைக்குரியது. அநீதியின் பக்கம் நின்று தங்களைத் தாக்குவதற்குத் தளம் அமைத்துத் தந்த துபாய், குவைத், கத்தார், பஹ்ரைன், சவூதி அரேபிய நாடுகளின் அமெரிக்கத் தளங்களை ஈரான் தாக்கி வருகிறது.

நட்பு நாடான ஈரானின் பக்கம் அறம் சார்ந்து நிற்க வேண்டிய இந்தியா இஸ்ரேலின் பக்கம் நிற்பது அநீதியானது. இந்திய பிரதமர் மோடி அண்மையில் இஸ்ரேலுக்குச் சென்று சர்வதேச போர்க் குற்றவாளியான நெதன்யாகுவைக் கட்டிப் பிடித்து உறவு பாராட்டியதும், இந்தியாவின் சர்வதேச கடற்பயிற்சியில் கலந்துகொண்டு திரும்பிய ஈரான் கப்பலை இந்திய பெருங்கடலில் அமெரிக்கா தாக்கியதும், ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்குவது குறித்து அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவிப்பதும் இந்தியாவிற்கு பெரும் அவமானம். வெளியுறவு விவகாரத்தில் படுதோல்வியைச் சந்தித்து வரும் மோடி இந்திய மக்களுக்கான பிரதமரா இல்லை ஏதேச்சதிகாரிகளுக்கும், கார்ப்பரேட்களுக்குமானவரா என்ற ஐயம் மீண்டும் மீண்டும் எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

அமெரிக்க ஏதேச்சதிகாரத்திற்கு முன் சரணடையாமல் போரிட்டு இஸ்ரேலை வாய்மையுடனும் தீரத்துடனும் எதிர்க்கும் ஈரானின் பக்கம் உலக முஸ்லிம்களும், நீதிமிக்கவர்களும் நிற்கும் வேளையில் ஷியா, சன்னி பிரிவினையைப் பேசி பிரச்னைகளை மடைமாற்றுபவர்களைப் புறம் தள்ள வேண்டும். இன, மொழி, நாடு, கொள்கைப் பிரிவு என்ற வட்டத்திற்குள் சுருங்கி விடாமல் நீதியின் பக்கம் நின்று உரத்துக் குரல் எழுப்ப வேண்டிய நேரம் இது.

இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் ஈரானுக்கு ஆதரவாக நிற்பதுடன் அமெரிக்க, இஸ்ரேலின் அட்டூழியத்திற்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டும். மனித குல அழிவிற்கும், பொருளாதாரச் சீரழிவிற்கும் இட்டுச் செல்லும் போர்கள் நிறுத்தப்பட வேண்டும். போரினால் அநியாயமாகக் கொல்லப்பட்ட மக்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும். இந்தக் கொடும் குற்றத்தை நிகழ்த்துபவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். இஸ்ரேலின் அராஜகத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும் சுதந்திர ஃபலஸ்தீன் அமைவதற்கும் உலக மனசாட்சியின் குரல் ஓங்கி எழ வேண்டும். ❀

# ஈரானுக்கு எதிரான
# அமெரிக்க இஸ்ரேலியப் போர்
## - உள்ளும் புறமும்



● டாக்டர் J. முஹையுதீன்

**28-02-2026** முதல் அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப் படை ஈரானைத் தாக்கி வருகிறது. ஈரானின் உயர் தலைவர் ஆயத்துல்லாஹ் கமேனியும் அவருடைய குடும்பமும் வீர மரணம் அடைந்தனர். ஒரு தொடக்கப் பள்ளியின் மீது நடந்த கொடூரத் தாக்குதலில் 165 குழந்தைகள் கொல்லப்பட்டனர். இதற்கு எதிராக இஸ்ரேல் மீதும், வளைகுடா நாட்டில் உள்ள அமெரிக்கா போர் நிலையங்கள் மீதும் ஈரான் தாக்குதலைத் தொடர்ந்தது. இந்தச் சூழலில் இந்தப் போர் பல கேள்விகளை எழுப்பி உள்ளது.

● ஈரான் மீது அமெரிக்காவிற்கு ஏன் திடீர் பகை? ● எண்ணை வளங்களுக்காக இந்தப் போர் நடத்தப்படுகிறதா? ● அணு ஆயுதங்களை ஈரான் பதுக்கி வைத்ததுதான் போருக்கான காரணமா? ● ஈரானில் மனித உரிமைகள் மீறப்படுகின்றது. ஜனநாயகமும் இல்லை. எனவே அங்கே ஆட்சி மாற்றம் தேவை. இது தான் போருக்கான நோக்கமா? ● வளைகுடா நாடுகள் மீது ஈரான் ஏன் தாக்குதல் நடத்த வேண்டும்? இதனால் அது ஷியா சன்னி போராக மாறுமா?

இப்படிப் பல குழப்பங்கள் நிலவி வருகின்றது. இதனை தெளிவுப்படுதும் சிறு முயற்சியே இந்த ஆக்கம்.

## 1. போரின் பின்னணி

### ஈரான் மீது அமெரிக்கவிற்கு ஏன் திடீர் பகை?

வரலாற்றில் மறந்து போன சில பக்கங்களைப் பார்த்தால் மட்டுமே இன்றைய நிலை நமக்குப் புரியும்.

ஈரானின் மீதான இத்தாக்குதலானது, அந்த நாட்டின் மீது அமெரிக்க ஏகாதிபத்தியம் கடந்த 73 ஆண்டுகளாக மேற்கொண்டு வரும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் வெளிப்பாடே ஆகும்.

1953ஆம் ஆண்டு ஈரானின் எண்ணெய் வளத்தை மேற்கத்திய நாடுகள் தங்களின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக, மக்களால் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர் முஹம்மது முசாதிக்கை அமெரிக்கப் புலனாய்வு அமைப்பான சி.ஐ.ஏவும்(CIA), பிரிட்டிஷ் உளவு அமைப்பான எம்.ஐ.6ம்(MI6) சதி செய்து பதவியிறக்கின. அப்போது தெஹ்ரானின் வீதிகளில் சுமார் 300 பேர் கொல்லப்பட்டனர். (இந்தியப் பெருங்கடலில் தற்போது ஈரானின் கப்பலை அமெரிக்கா தாக்கியதும் இதே வழிமுறையில் தான்)

அடுத்த 26 ஆண்டுகளுக்கு ஷா மன்னரின் எதேச்சதிகார ஆட்சிக்கு அமெரிக்கா ஆதரவளித்தது. அங்கு நிலவிய சித்ரவதைகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் பெயர்போன சவாக்(SAVAK) ரகசியக் காவல் துறைக்கு அமெரிக்காவே பயிற்சியும் தளவாடங்களும் வழங்கியது. 1979இல்



ஆயத்துல்லாஹ் ரூஹுல்லாஹ் கொமேனியின் தலைமையில் நடந்த புரட்சியில் அமெரிக்கா ஆதரவு ஷாவின் எதேச்சதிகார ஆட்சி அகற்றப்பட்டது. ஆனால், அத்துடன் முடியவில்லை பிரச்னை.

சதாம் ஆட்சி செய்த ஈராக்கை ஈரான் மீது படையெடுக்க வைத்தது இதே அமெரிக்கா. 1980 முதல் 1988 வரை நடைபெற்ற ஈரான் ஈராக் போரின் போது, ஈரானுக்கு எதிராக ரசாயன ஆயுதங்களை சதாம் உசேன் பயன்படுத்தினார். இந்த ஆயுதங்களையும், உளவுத் தகவல்களையும் ஈராக்கிற்கு அளித்தது அமெரிக்கா தான். இதனால் பல்லாயிரக்கணக்கான ஈரான் வீரர்கள் நச்சுவாயுத் தாக்குதலால் மடிந்தனர். (எதிர்காலத்தில் தனக்கு எதிராக சதாம் திரும்பிய போது அமெரிக்க ஆதரவு பொம்மை ஆட்சியை கொண்டு, அவரை வஞ்சகமாகக் கொலையும் செய்தது)

1988ஆம் ஆண்டு ஜூலையில், 'யு.எஸ்.எஸ் வின்சென்ஸ்' (USS Vincennes) என்ற அமெரிக்கப் போர்க்கப்பல் ஈரானின் பயணிகள் விமானத்தைச் சுட்டு வீழ்த்தியது. அதில் 66 குழந்தைகள் உட்பட மொத்தம் 290 பேர் கொல்லப்பட்டனர். தவறுதலாக இத்தாக்குதல் நடைபெற்றதாகச் சொல்லிக் கொண்டே இக்கொடூரத்தைச் செய்த அந்தப் போர்க் கப்பலின் தளபதிக்கு அமெரிக்க அரசு உயரிய Legion of Merit விருது வழங்கிக் கௌரவித்தது. 2007 முதல் அமெரிக்காவின் உடந்தையுடன் இஸ்ரேல், ஈரானின் அணுசக்தி விஞ்ஞானிகள் ஏழு பேரைத் திட்டமிட்டுப் படுகொலை செய்தது. மேலும், 'ஸ்டக்ஸ்நெட்' (Stuxnet) எனும் இணையவழி ஆயுதத்தைப் பயன்படுத்தி ஈரானின் அணுசக்தி மையங்களைச் சிதைத்தது.

2020 ஜனவரியில் ஜெனரல் காசிம் சுலைமானியை அமெரிக்கா படுகொலை செய்தது. 2025 ஜூன் மாதத்தில் சர்வதேசப் பாதுகாப்பு நெறிமுறைகளின் கீழ் இயங்கி வந்த ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மீது அமெரிக்கா குண்டுவீசித் தாக்குதல் நடத்தியது. இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்; குறிப்பாக விஞ்ஞானிகள் அவர்களது இல்லங்களிலேயே குறிவைத்துத் கொல்லப்பட்டனர். இப்போது 2026 பிப்ரவரியில் ஈரானின் நாட்டுத் தலைவரையும் பல முக்கிய அதிகாரிகளையும் அமெரிக்கா படுகொலை செய்ததோடு ஒரு தொடக்கப் பள்ளியின் மீதும் குண்டுவீசித் தாக்குதல் நடத்தியுள்ளது.

### ஏன் திடீர் தாக்குதல்?

ஈரானால் அமெரிக்காவிற்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை என்பது அனைவராலும் பரவலாக ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகும். சொல்லப்போனால் 2025 ஜூன் மாதம் நடைபெற்ற பன்னிரண்டு நாள் போருக்குப் பிறகு, ஈரானின் அணு ஆயுதத் திறன் முற்றிலுமாக அழிக்கப்பட்டு விட்டது என்று ட்ரம்ப் பிரகடனம் செய்திருந்தார். அந்தப் போரின் போது அமெரிக்கா தனது ஆயுதக் கிடங்கிலேயே மிக வீரியம் மிக்க வழக்கமான வெடிபொருட்களைக் கொண்டு ஈரானின் மூன்று அணுசக்தி நிலையங்களைத் தாக்கியது.

2026 பிப்ரவரி 24 அன்று நாடாளுமன்றக் கொள்கை விளக்க உரையில் கூட ட்ரம்ப் இதையே மீண்டும் வலியுறுத்தினார். ஆனால் அடுத்த நான்கே நாள்களில் ஈரானால் அமெரிக்காவிற்கு உடனடி ஆபத்து இருப்பதாக அவர் முன்வைத்த வாதம் பல ஐயங்களை ஏற்படுத்தி உள்ளது. ஆயுதங்களைப் பதுக்கி வைத்ததாகக் கூறி ஈரான் மீது இந்தப் போர் நடைபெறவில்லை.

ஆட்சி சரியில்லை; பெண்கள் கொடுமைப்படுத்தப்படுவதாகக் கூறி, தலைமையை மாற்றுவதற்காக இந்த யுத்தமா? என்றால் அதுவும் இல்லை. 165 பள்ளிக் குழந்தைகளைக் குண்டு வீசி கொன்றவர்கள் பெண்ணுரிமையைப் பற்றி பேச எவ்வித நியாயமும் இல்லை என்பதை உலகமே அறிந்துள்ளது. அந்த நாட்டு மக்களே அவர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதே நேர்மையானது. ஆனால் ஈரானின் ஆட்சித் தலைமையை மாற்றப் போகிறோம் என்ற அமெரிக்க, சியோனிஸ இஸ்ரேலிய

முழக்கத்தில் சில உண்மைகள் இருக்கத்தான் செய்கிறது.

### ஏன் ஆட்சியை மாற்ற இவர்கள் துடிக்கின்றனர்?

கடந்த 76 ஆண்டு கால மேற்காசிய வளைகுடா வரலாற்றைச் சற்று மீளாய்வு செய்து பார்த்தால், இந்தப் போரின் இலக்கு என்ன என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். ஒரே வரியில் கூறுவதென்றால், 'இஸ்ரேலின் இருப்பை மேற்காசியாவில் நிலை நிறுத்துவதே இந்தப் போரின் முதலும் இறுதியுமான நோக்கமாகும்'

இஸ்ரேலைப் பாதுகாப்பதே பிரதான குறிக்கோள். குறுகிய மத அடிப்படைவாத சியோனிஸ கொள்கையின் அடிப்படையில் மேற்காசியாவை (எகிப்து முதல் மதீனா வரை) ஆட்சி செய்வதே சியோனிஸ இஸ்ரேலின் ஒரே நோக்கம். 1948 முதல் இன்று வரை நடந்த யுத்தங்களைப் படித்துப் பார்த்தால் இது தெளிவாகப் புரிந்து விடும்.

என்ன விலை கொடுத்தாலும் இந்தத் தீய நோக்கத்தை அடைந்தே தீருவது என இஸ்ரேல் போராடிக் கொண்டிருக்கிறது. நீதி, நேர்மை, போர் தர்மம் என எதையும் மதிக்க வேண்டிய அவசியம் தங்களுக்கு இல்லை என்பதைக் கொள்கையாகவே கொண்டுள்ளது. அன்று முதல் இன்று வரை இதை செயல்படுத்தி வந்துள்ளது. தங்களுக்கு உதவ பல நாடுகளை தங்களின் Lobby மூலம் தேர்ந்தெடுத்து வேலை செய்கிறது. 1917இல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் உதவியைப் பெற்றது. 1945 முதல் அமெரிக்க ஆதரவைப் பெற்று வருகிறது. 1948இல் இஸ்ரேல் உருவான போது அன்றைய சோவியத் ரஷ்யாவும் கூட ஆதரவு தெரிவித்தது. 1948இல் நடந்த அரபு - இஸ்ரேல் போரில் ரஷ்யா இஸ்ரேலுக்கு ஆயுதங்களும் கொடுத்தது. (1950களில் இஸ்ரேல் மேற்குலக நாடுகளுடன் நெருக்கத்தைத் தொடர்ந்த போது தான் ரஷ்யா ஆதரவை விலக்கியது)

இதுவரை இஸ்ரேல் ஃபலஸ்தீன மக்களைக் கொன்று குவிக்கும் போதெல்லாம் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆயுதங்கள் வழங்கியது மட்டுமின்றி, ஐ.நா சபையில் இஸ்ரேலுக்கு ஆதரவாகத் தொடர்ந்து செயல்பட்டு வந்தது. நேரடியாகக் களத்தில் இறங்கவில்லை. கடந்த 2025 ஜூன் மாதம் நடந்த 12 நாள் போரில் மிகப் பெரிய சேதாரத்தை ஈரான் கொடுத்தது. இஸ்ரேலின் முக்கிய இராணுவத் தளங்கள் தாக்கப்பட்டதை உலகமே கண்டது.

ஈரான் நூற்றுக்கணக்கான ஏவுகணைகள், ட்ரோன்களை ஏவி தாக்குதல் நடத்தியது. சுமார் 50 முதல் 60 வரை ஏவுகணைகள் நகரங்கள், குடியிருப்புப் பகுதிகளைத் தாக்கின. சில முக்கியமான இலக்குகளும் சேதமடைந்தன. குறிப்பாக Weizmann Institute of Science எனும் அறிவியல் ஆய்வு நிறுவனம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. அந்த நிறுவனக் கட்டிடங்களின் சுமார் 90% பகுதி சேதமடைந்ததாகவும், அதன் பொருளாதார இழப்பு சுமார் 600 மில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு மதிப்பிடப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்த 12 நாள் மோதலின் போது சுமார் 28 முதல் 33 வரை இஸ்ரேல் பொது மக்கள் உயிரிழந்தனர். மேலும் 3,000க்கும் அதிகமானோர் காயமடைந்தனர். மொத்தத்தில் குறுகிய காலத்திலேயே இந்தத் தாக்குதல்கள் மனித இழப்புகளையும் பொருளாதாரச் சேதங்களையும் ஏற்படுத்தின. அமெரிக்கா நேரடியாகப் போரில் பங்கெடுக்க இது தான் காரணம். இவர்களின் இலக்கு ஈரான் அல்ல. ஃபலஸ்தீனே இவர்களின் இலக்கு. ஃபலஸ்தீனை மொத்தமாக ஆக்ரமித்து அகண்ட இஸ்ரேல் காண்பதே நோக்கம். இந்த ஃபாசிஸக் கனவினைத் தடுக்கும் அனைத்து சக்திகளை அகற்றும் நடவடிக்கைகளைத் தான் கடந்த 100 ஆண்டுகளாகச் செய்து வருகின்றனர்.

1967இல் நடந்த 6 நாள் போருடன் எகிப்து வீழ்ந்தது. இன்றுவரை இஸ்ரேல் ஆதரவு பொம்மை எதேச்சதிகாரிகளே அங்கு ஆட்சி செய்கின்றனர். (2 ஆண்டுகள் முஹம்மது முர்ஷி தவிர). 1975இல் மன்னர் பைசல் படுகொலையுடன் சவூதியின் எதிர்ப்பும் முடிந்தது. இன்று சியோனிஸ தீவிரவாதத்தை எதிர்த்து களத்தில் உள்ள நாடு ஃபலஸ்தீனின் காஸா, தெற்கு லெபனான், ஏமன், ஈரான்

மட்டுமே! இதில் காஸா மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதை நாம் அறிவோம். ஹமாஸ் உருவான பின்னர் இஸ்ரேலுக்கு எதிரான மறு தாக்குதல்கள் தொடங்கியது. எனவே ஹமாஸ் இல்லாத ஃபலஸ்தீனை இஸ்ரேல் எதிர்பார்க்கின்றது.

2006 தேர்தலில் மக்களால் தேர்ந்தெடுக் கப்பட்ட ஹமாஸை தீவிரவாத இயக்கமாக ஊடகங்களில் தொடர்ந்து பொய்ப் பரப்புரை செய்தது இஸ்ரேல் ஆதரவு ஊடகங்கள். அனைத்துத் தாக்குதல்களையும் காஸா மக்கள் தாங்கி, தொடர்ந்து போராடுவது இஸ்ரேலின் திட்டத்திற்கு மிகப் பெரிய தடை. தெற்கு லெப னானை ஆக்கிரமிக்க இஸ்ரேல் தொடர்ந்து போராடி வருகிறது. அதனை ஹிஸ்புல்லாஹ் தடுத்து வருகிறது. மூன்றாவது ஏமன். சவூதி, துபை நாடுகளின் அதிகாரப் பசியினால் தொடர்ந்து பாதிக்கப்பட்டுள்ள ஏமனால் இஸ்ரே லைத் தாக்க இயலாத சூழல் உள்ளது.

இறுதியாக ஈரான். அரபுலகம் ஃபலஸ் தீனுக்கு ஆதரவாகக் களம் இறங்காமல் ஒதுங்குவது போல, ஈரானும் இருக்க வேண்டும் என்பதே இஸ்ரேலின் எதிர் பார்ப்பு. 1979 வரை இஸ்ரேலுக்கு முழு ஒத்துழைப்பை வழங்கிய ஒரே வளைகுடா நாடு ஈரான் என்பதை மறந்து விடக் கூடாது. மறுபடி ஷா இளவரசரை ஆட்சியில் அமர்த்தி அதனை மீண்டும் நிறைவேற்றத்தான் சியோ னிஸ சக்திகள் திட்டம் தீட்டுகின்றன.

## ஈரானின் எதிர்தாக்குதல்

28-2-2026 அமெரிக்கா ஈரானை தாக்கத் தொடங்கிய பின்னர் ஈரான் எதிர் தாக்கு தலைத் தொடங்கியது. மூன்று இலக்குகளை நோக்கியே ஈரான் தாக்குதல் நடத்தி வரு கிறது. 1. இஸ்ரேலிய இராணுவ மையங்கள் 2. அமெரிக்காவின் போர்க் கப்பல் 3. வளைகுடா நாட்டில் உள்ள அமெரிக்கப் போர்த் தளங்கள்.

ஈரானின் உயர் மட்டத் தலைவரான கமேனி, அவரின் குடும்பத்தை இழந்த பின்ன ரும் இந்த எதிர்தாக்குதல் தொடர்கின்றது.


ஈரானின் ஏவுகணைகளுக்கு மிகப்பெரிய சவால்கள் உள்ளன. அவை பல கட்ட தடை களைத் தாண்டியே இஸ்ரேலைத் தாக்க இயலும். ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே உள்ள வளைகுடா நாடுகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அமெரிக்க இராணு வத் தளங்கள் (குறிப்பாக ஈராக், ஜோர்டான்) ஈரானின் ஏவுகணைகளைத் தடுத்து நிறுத்தி விடும். இவற்றைத் தாண்டி வரும் ஏவுகணை களை இஸ்ரேலின் அதிநவீன Iron Dome முதலியவை தடுத்து விடும். ஆனால் இவை அனைத்தையும் தாண்டி இஸ்ரேல் வான்வெளி யில் ஈரானின் ஏவுகணைகள் இலக்குகளைத் தாக்குவது வியப்பிற்குரியது. இதற்கான காரணங்களில் மிக முக்கியமானது ஈரானின் ஏவுகணை தொழில்நுட்பம் உள்நாட்டு ஆராய்ச்சியின் விளைவாக உருவானது.

## வளைகுடா நாடுகளில் ஏற்பட்டுள்ள பதற்றம்

நேரடியாகப் போரிடும் இஸ்ரேலைத் தாக்குவது சரி, ஏன் குவைத், பஹ்ரைன், சவூதி, துபாய், கத்தார் ஆகிய நாடுகளை ஈரான் தாக்க வேண்டும் என்ற கேள்வி எழுவது இயல்பு. இங்கே குறிப்பிடப்பட்ட வழித்தடங்களையும், புவியியல் படத்தையும் நன்றாகக் கவனித்தால் ஒன்று தெளிவாகப் புரியும். ஈரானுக்கு அருகில் உள்ள இந்த வளைகுடா நாடுகளில் அமெரிக்க இராணுவத் தளங்கள் உள்ளன. யாரிடம் இருந்து அரபு மக்களைக் காப்பாற்ற இவ்வளவு அமெரிக்க வீரர்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர்? துபாய்க்கும், கத்தாருக்கும், சவூதிக்கும் யார் எதிரி? இது ஒரு மிகப் பெரிய சதி வலையின் ஓர் அங்கமே! உண்மையில் இந்த இராணுவக் கட்டமைப்புகள், அரபு நாடுகளுக்காக அல்ல; மாறாக, இஸ்ரேலைக் காப்பாற்றவே!

இஸ்ரேலுக்கு எதிராக யாரெல்லாம் குரல் கொடுக்கின்றார்களோ அவர்களைத் தாக்கு வதற்குத் தான் இவை உள்ளன. இன்று அது ஈரானாக இருக்கலாம். நாளை அது சவூதி அரேபியாவாகக் கூட மாறலாம். ஈரான் தன்னுடைய ஏவுகணைகளைக் கண்டம் விட்டு கண்டம் தாண்டி அமெரிக்காவைத் தாக்க வேண்டாம். அருகில் உள்ள அமெரிக்கா இராணுவத்தைத் தான் தாக்கி ஆக வேண்டும். அது தான் நடந்து வருகிறது.

# 2. ஃபலஸ்தீனைப் பங்கு போடத் துடிக்கும் அமெரிக்க – அரபுக் கூட்டணி




இங்கே மிக முக்கியமான ஒரு கேள்வி எழுகிறது. அரபு நாடுகளின் துணையும், ஒத்துழைப்பும் இன்றி அமெரிக்க இராணுவத்தால் எப்படி இராணுவத் தளங்களை அந்த நாடுகளில் அமைக்க முடியும்? அரபு நாடுகள் ஒவ்வொன்றிலும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அமெரிக்க இராணுவ வீரர்களின் எண்ணிக்கை மிக அதிகம் (பார்க்க படம்)

ஃபலஸ்தீனர்களின் உரிமைப் போராட்டத்துக்கு அரபு மன்னர்களிடம் பெரிய ஆதரவு இல்லை என்பதே கசப்பான உண்மை. (அரபுலக முஸ்லிம்களின் விருப்பம் வேறு; மன்னரின் நோக்கம் வேறு என்பதை நினைவில் கொள்க) 2010 அரபுப் புரட்சியின் விதைகள் தங்களின் மன்னர் ஆட்சிக்கு ஆபத்தாக மாறி விடுமோ என்ற பயமே இந்த முடிவுக்கு அவர்களைத் தள்ளி உள்ளது எனலாம்.

ஃபலஸ்தீன அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் நிவாரண அமைப்பான ‘அன்ரா’வுக்கு(UNRWA) இந்த ஆண்டு அரபு நாடுகள் தங்களின் நிதியுதவியைப் பெருமளவில் குறைத்துள்ளன. தி நியூ அரப் (The New Arab) செய்தி நிறுவனம் பெற்றுள்ள புள்ளி விவரங்களின்படி, இந்த ஆண்டு அரபு உலகம் முழுவதிலும் இருந்து கிடைத்துள்ள நிதி வெறும் 14 மில்லியன் அமெரிக்க டாலர்கள் மட்டுமே. 2024ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில், இது 90 விழுக்காட்டிற்கும் மேலான வீழ்ச்சியாகும்.’ (https://www.newarab.com/news/pressure-unrwa-mounts-arab-countries-slash&donations)

ஆனால் ஃபலஸ்தீன அகதிகளுக்கான ஈரானின் உதவி (பொருளாதாரத் தடையையும் மீறி) அதிகரித்து வருவதைக் காணலாம். 2020ஆம் ஆண்டு அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையின்படி, ஈரான் ஆண்டுதோறும் சுமார் 100 மில்லியன் அமெரிக்க டாலர்கள் நிதியுதவி வழங்கி வந்துள்ளது. 2023ஆம் ஆண்டில், இஸ்ரேலிய பாதுகாப்பு வட்டாரத் தகவல்களின்படி, ஈரான் தனது நிதி உதவியைக் கணிசமாக உயர்த்தி ஆண்டுக்கு 350 மில்லியன் அமெரிக்க டாலர்களாக அதிகரித்துள்ளது.

தங்களின் உள்நாட்டில் ஃபலஸ்தீனப் போராளிகளை ஒடுக்கும் வேலையையும் அரபு மன்னர்கள் செய்து வருகின்றனர். பல்லாண்டுகள் அகதிகளாக வாழந்து வந்தவர்களைத் திடீரென கைது செய்தது சவூதி அரசு. 2019இல், ஹமாசின் சவூதி பிரதிநிதியான 83 வயதான முஹம்மத் அல் குதாரி அவர்களுக்கு 15 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்தது சவூதி. ஹமாஸுக்கு ஆதரவு அளித்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட மற்றொரு 67 ஃபலஸ்தீன, ஜோர்தானியக் கைதிகளுக்கும் 22 ஆண்டுகள் வரையிலான சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (https://www.palestinechronicle.com/saudi-court-sentences&83&year&old&hamas-leader-to-15-years&in&prison/).

இதை விட மோசமான சோதனைகள் உள்நாட்டு இஸ்லாமிய இயக்கத்தினருக்குக் கிடைத்துள்ளது.

2010ஆம் ஆண்டு துபையின் ஒரு ஹோட்டலில் வைத்து ஹமாசின் பிரதிநிதி யான மஹ்மூத் அல் மபூஹ் படுகொலை செய் யப்பட்டார். இஸ்ரேலின் உளவு அமைப்பான மொஸாத் துபாய் நாட்டிற்குள் ஊடுருவி, ஹோட்டல் அறையை உடைத்து அவருக்கு succinyl choline என்ற விஷத்தைக் கொடுத்து கொலை செய்து விட்டுத் தப்பி உள்ளனர் என்றால் இது அரசின் உதவி இல்லாமல் எப்படி நடக்கும் என்ற கேள்வி அப்போதே எழுந்தது.

இத்துடன் நின்று விடவில்லை இந்த சூழச்சிகள். சியோனிஸ இஸ்ரேலின் ஃபலஸ்தீன ஆக்ரமிப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக காஸாவை அமெரிக்கப் பொருளா தார மண்டலமாக அமைக்க திட்டம் தீட்டப் பட்டுள்ளது நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்? அதன் பின்னணியில் சவூதி, துபாய் மன்னர்களின் தொடர்பும் உள்ளது என்பது வேதனையான உண்மை. இதற்கு GREAT (காஸா மறுகட்டுமானம், பொருளாதார விரைவாக்கம், உருமாற்றத் திட்டம் (Gaza Reconstitution, Economic Acceleration and Transformation (GREAT) எனப் பெயர். ‘அழிக்கப்பட்ட ஈரானியக் கைக்கூலி நாட்டிலிருந்து, செழிப் பான ஆபிரகாமியக் கூட்டணி நாடாக’. அதா வது காஸா என்பது ஈரானின் கைக்கூலி நாடு எனக் குறிப்பிடுகிறது இந்தச் செயல் திட்டம்.




இது 2025 ஜூன் மாதம் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பால் முன்மொழியப்பட்ட ஒரு பெருந்திட்டமாகும். GREAT திட்டத்தின் மூளையாகவும், அதன் பின்னால் இருக்கும் மிக முக்கியமான நபராகவும் அதை நடை முறைப்படுத்தத் தயாராக இருக்கும் நிறுவன மாகவும் டோனி ப்ளேரின் (2003ஆம் ஆண்டு ஈராக்கின் மீது போர் தொடுத்த போர்க் குற்றவாளியான இங்கிலாந்து பிரதமர் தான்). Tony Blair Institute for Global Change உள்ளது. இதன் அதிகாரப்பூர்வ அறிவிப்பு இன்னும் வரவில்லை என்றாலும் உலக ஊடகங்களும் அரசியல் வட்டாரங்களும் இதை Tony Blair's Gaza Plan என்றே அழைக்கத் தொடங்கிவிட்டன.

அந்தத் திட்டத்தில், ‘ட்ரம்ப் ரிவியரா’ (Trump Riviera) எனும் கடற்கரை உல்லாசத் தலத்தை உருவாக்குவதும், இலான் மஸ்க் பெயரில் ஒரு தொழில் உற்பத்தி மண்டலத்தை அமைப்பதும் இடம் பெற்றிருந்தன. ஃபலஸ்தீன நிலப்பரப்பைக் கையகப்படுத்தி, அதனை ஒரு நவீன சுற்றுலாத் தலமாக மாற்ற வேண்டும் என்ற டொனால்ட் ட்ரம்பின் எண்ணவோட்டத்தின் பின்னணியிலேயே இத் திட்டம் உருவாக்கப்பட்டது.

இஸ்ரேலியத் தொழிலதிபர்களால் முன் னெடுக்கப்பட்ட இத்திட்டம் அமெரிக்கா வின் முன்னணி ஆலோசனை நிறுவனமான ‘பாஸ்டன் கன்சல்டிங் குரூப்’ (BCG) வடி வமைத்த நிதி மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டது.

சவூதி இளவரசர் முஹம்மது பின் சல் மான், அபுதாபி அதிபர் ஷேக் முஹம்மது பின் ஸாயித் இருவருமே GREAT திட்டத்திற்கு மிக முக்கியமான நிதி, அரசியல் ஆதரவாளர்களாக இருக்கிறார்கள். டோனி பிளேயர், ஜாரெட் குஷ்னர்(டொனால்ட் ட்ரம்பின் மருமகன்), நெதன்யாகு ஆகியோருடன் 2024 முதல் பல சந்திப்புகளைத் தொடர்ந்து இவர்கள் நடத்தி உள்ளனர். 30-50 பில்லியன் டாலர் வரை முதலீடு செய்யத் தயார் என்று கூறப்படுகிறது.



(https://www.theguardian.com/world/2025/sep/01/leaked-gaza-riviera-plan-dismissed-as-insane-attempt-to-cover-ethnic-cleansing)


முழுத் திட்டத்தையும் படிக்க, கீழ்காணும் லிங்கைப் பதிவிறக்கம் செய்க: https://www.washingtonpost.com/documents/f86dd56a&de7f-4943-af4a-84819111b727.pdf

இன்றைய ஈரானுக்கு எதிரான போர் என்பது நீண்ட நெடிய சதியின் ஒரு பகுதியே. ஊடகங்கள் அமெரிக்கா இஸ்ரேல் ஈரான் போரை ஒளி பரப்பிக்கொண்டிருக்கும் இதே வேளையில் இஸ்ரேல் ஃபலஸ்தீனின் காஸா வையும், லெபனானையும் தாக்கிக்கொண்டு இருக்கின்றது. 24-02-26 முதல் 02-03-2026 வரை உள்ள ஒரு வார காலத்தில் மட்டும், இஸ்ரேல் ஃபலஸ்தீனின் வடக்கு, தெற்கு, மத்திய காஸா பகுதிகளைக் குண்டுவீசித் தாக்கின. இதில் அல்-புரைஜ் அகதி முகாம், ஷுஜாய்யா பகுதி, ரஃபா நகரம், அல் துஃபாஹ் பகுதி, கான் யூனிஸ், பீத் லாஹியா போன்ற இடங்களும் அடங்கும். இந்தக் குண்டுவீச்சில் 15 பேர் உயிரிழந்தனர்; மேலும் 50 பேர் காயமடைந்தனர். இதனால், கடந்த ஒரு வாரத்தில் மேற்கு கரை (West Bank) காஸா பகுதி ஆகிய இரண்டிலும் உயிரிழந்த ஃபலஸ்தீனர்களின் மொத்த எண்ணிக்கை 23 ஆக உயர்ந்தது; 67 பேர் காயமடைந்தனர்.

# 3. முடிவும் தீர்வும்

## இறுதி முடிவு என்னவாக இருக்கும்?

ஈரான் தன்னுடைய தலைவர்கள் பலரை இழந்தாலும், அமெரிக்கா இஸ்ரேலின் சியோனிஸ ஏகாதிப்பத்தியக் கனவைக் கொஞ்சம் கலைத்துள்ளது என்றே கூற வேண்டும். பல்லாயிரம் மில்லியன் இழப்பை ஏற்படுத்தி




உள்ளது (04-03-2026 முடிய ஏற்பட்டுள்ள இழப்பு மட்டும் படத்தில் உள்ளது) வரலாற்று ரீதியாகப் பார்த்தால், போர் தீவிரமடையும் போது ஒரு கட்டத்தில் அமெரிக்காவில் மக்கள் எதிர்ப்பு வலுக்கும். அப்போது ட்ரம்ப் நிர்வாகம், 'ஈரான் சிதைக்கப்பட்டுவிட்டது, எங்கள் இலக்கு எட்டப்பட்டது' என்று கூறி விட்டுப் பின்வாங்கும். அமெரிக்கா ஒரு 'நாடகத்தனமான' வெற்றியைப் பெற்று வெளியேற முயல்கிறது. அமெரிக்கா விலகியதும், இஸ்ரேலும் வேறு வழியின்றி வெற்றிக் கொண்டாட்டங்களுடன் போரை நிறுத்தும்.

1. இந்தச் சூழலில் ஈரானின் அரசியல் அமைப்பு சிதையாமல் அப்படியே இருக்கும். ஒரு மாபெரும் அச்சுறுத்தலை எதிர்கொண்டு மீண்டெழுந்ததால், ஈரானின் தேசிய ஒற்றுமை இன்னும் வலுப்படும். இது ஈரானுக்கும் அதன் கூட்டணிகளுக்கும் நீண்ட கால அடிப்படையில் ஒரு பெரும் வெற்றியாகவே அமையும். ஈரான் இந்தப் போரைத் தாங்கி நின்றுவிட்டால், வான்வழித் தாக்குதல்கள் மூலம் ஒரு நாட்டை அழித்துவிடலாம் என்ற பிம்பம் உடைந்துவிடும். இது அந்தப் பிராந்தியத்தில் ஆதிக்கம் செலுத்துவதை விட, பரஸ்பர அங்கீகாரத்தின் அடிப்படையில் ஒரு புதிய அதிகாரச் சமநிலையை உருவாக்க வழிவகுக்கும். ஈரான் தனது இருப்பைத் தக்கவைத்து, போரின் விலையை உயர்த்துவதில் கவனம் செலுத்துகிறது. இறுதியில், இந்தச் சண்டையில் ஈரானின் பிம்பம் வலுவடைந்து, பிராந்தியத்தில் அதன்

செல்வாக்கு மேலும் அதிகரிக்கவே வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

2. ஈரானில் ஆட்சி மாற்றம் ஏற்படும் சூழல் இல்லை. உள்நாட்டுப் போரை ஏற்படுத்தினால் மட்டுமே ஆட்சி மாற்றம் ஏற்பட வாய்ப்புள்ளது.

இந்தப் போர் ஒரு தரப்பின் முழுமையான வெற்றியுடன் முடியாது; மாறாக அரசியல் கணக்குகளின் அடிப்படையிலேயே முடிவுக்கு வரும்.

## தீர்வு என்ன?

1. ஈரானுக்கு எதிரான அமெரிக்கா இஸ்ரேல் இராணுவத் தாக்குதல்கள் உடனடியாகவும் முழுமையாகவும் நிறுத்தப்பட வேண்டும். உடனடியாக அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு போர் நிறுத்தப்பட வேண்டும். ஃபலஸ்தீனின் காஸா உள்ளிட்ட மத்திய கிழக்கில் தொடரும் தாக்குதல்கள், முற்றுகை, அச்சுறுத்தல் நடவடிக்கைகளும் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

2. மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்கப் படைகள் அனைத்தும் திரும்பப் பெறப்பட வேண்டும்; அங்கே உள்ள அமெரிக்க இராணுவத் தளங்கள் மூடப்பட வேண்டும். இதற்கு அரபு மன்னர்கள் முன் முயற்சி எடுக்க வேண்டும். அரபு நாடுகளில் ஈரானின் தாக்குதலால் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும்.

3. ஈரானுக்கும் பிற எந்த நாட்டுக்கும் எதிரான அனைத்து வகைத் தடைகளையும் (sanctions) பொருளாதாரப் போர் நடவடிக்கைகளையும் கைவிட வேண்டும். பல்லாண்டுகளாக ஈரானின் பொருளாதாரத்தை முடக்கி, மருந்துகள், அத்தியாவசியப் பொருட்கள் கிடைப்பதை கட்டுப்படுத்தி வந்த தடைகள் ஒரு நாட்டின் முழு மக்கள் தொகையையே இலக்காகக் கொண்ட கூட்டு தண்டனை (collective punishment) வடிவமாகும். இது உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

4. அமெரிக்க அரசியலமைப்பையும்(U.S. Constitution) ஐ.நா. சாசனத்தையும்(U.N. Charter) மீறி, ஆக்கிரமிப்புப் போரைத் தொடங்குவது ஒரு குற்றச் செயல். அதற்குப் பொறுப்பானவர்கள் ஜனாதிபதி முதல் ஒரு நாட்டுத் தலைவரைக் கொல்லும் திட்டத்தைச் செயல்படுத்திய இராணுவ, உளவுத் துறை அதிகாரிகள் வரை தொடக்கப் பள்ளி உட்பட பொதுமக்கள் இலக்குகளைக் குண்டு வீச்சில் தாக்கிய நடவடிக்கைகளுக்குத் தொடர்புடையவர்கள் அனைவரிடமும் விசாரணை நடத்தப்பட்டு போர்க் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட வேண்டும்.

5. ஷியா சன்னி பிரிவினைவாதம் பேசுவதை விடுத்து, முஸ்லிம் நாடுகள்(அரபுலகம், ஈரான், துருக்கி) ஒன்றிணைந்து ஒரு பிரகடனம் வெளியிட வேண்டும். வருகின்ற புனித ஹஜ்ஜின் போது மக்காவில் வைத்து மீண்டும் ஒரு ‘மக்கா பிரகடனம்’ அறிவிக்கப்பட வேண்டும்.


Press & Registration of Books Act Registration of Newspaper (Chennai) Rules 1956 Form IV (See Rule 8) Statements About Ownership & other Particulars about News Paper.

| | |
|---|---|
| Place of Publication | : 138, Perambur High Road Chennai -12 |
| Periodicityof Its publication | : Fortnightly |
| Printer's Name | : S. Rajan |
| Nationality | : Indian |
| Address | : Bharani Offset Printers, 77, Venkatathri Street, Kosapet, Chennai - 12. |
| Publisher's Name | : H. Abdur Raqeeb |
| Nationality | : Indian |
| Address | : 138, Perambur High Road, Chennai -12 |
| Editor's Name | : H. Abdur Raqeeb |
| Nationality | : Indian |
| Address | : 138, Perambur High Road, Chennai -12 |
| Owner's Name(s) | : Creative Communication Chennai |
| a) Please State the Particulars of individuals or of the firm, joint stock company, Trust, Co-operative society or Association which owns the news paper | : Trust - represented by its Chairman |

I, H. Abdur Raqeeb here by declare that the Particulars given are true to the best of my knowledge and belief.

Dated : 28-02-2026 (sd) **H. Abdur Raqeeb** Signature of Publisher



# இந்தியா இஸ்ரேல் உறவு

– நாகூர் ரிஸ்வான்

**இந்தியாவின் தொடக்க காலத் தலைவர்கள் ஃபலஸ்தீன் மக்களுக்கு ஆதரவாக நின்றனர். ஆனால் இன்று இந்தியாவும் இஸ்ரேலும் மிகவும் நெருக்கமான நட்பு நாடுகளாக மாறியுள்ளன.**

மகாத்மா காந்தியும் ஜவஹர்லால் நேருவும் ஃபலஸ்தீனில் யூத தேசிய அரசு அமைப்பதைக் கடுமையாக எதிர்த்தனர். 'ஃபலஸ்தீன் அரேபியர்களுக்குரியது' என்று காந்தி திட்டவட்டமாகக் கூறினார். 1947 இல் ஃபலஸ்தீனை பிரிப்பதற்கான ஐநாவின் திட்டத்திற்கு இந்தியா எதிராக வாக்களித்தது. நேரு தலைமையிலான இந்தியா அணிசேரா இயக்கத்தில் நின்று அரபு நாடுகளுடன் நெருக்கமாக இருந்தது.

இருப்பினும் இந்தியாவின் இந்நிலைப்பாடு போர்க்காலங்களில் பலவீனமடைந்தது. மாறுதலுக்கு உள்ளானது. 1962 சீனா - இந்தியப் போர், 1971 பாகிஸ்தான் போர், 1999 கார்கில் போர் ஆகியவற்றில் இந்தியாவுக்கு இஸ்ரேல் ரகசியமாக ஆயுதங்கள், பீரங்கிகள், ட்ரோன்கள் வழங்கியது. இப்பின்னணியில் இந்த இராணுவத் தொடர்பு படிப்படியாக வலுப்பெற்றது.

1980-90களில் இந்தியாவில் இந்துத்துவ சக்திகள் வலுவடைந்தன. அவை இஸ்ரேலின் சியோனிசத்தை, யூத தேசியவாதத்தை தமது முன்மாதிரியாகக் கருதின. ஏனெனில் வலிமையான இராணுவமும், மத அடையாள அரசுமே வேண்டும் என்பது இந்துத்துவத்தின், சியோனிசத்தின் கொள்கையாக இருந்தது.

1992இல் நரசிம்ம ராவ் ஆட்சியில் இஸ்ரேலை முழு அங்கீகாரம் அளித்து தூதரக உறவு தொடங்கப்பட்டது. கார்கிலுக்குப் பிறகு உறவு பகிரங்கமானது. 9/11 தாக்குதல்களுக்குப் பிறகு தீவிரவாத எதிர்ப்பு, தீவிர கண்காணிப்பு(Surveillance) என இரு நாடுகளும் ஒரே மொழியில் பேசத் தொடங்கின.

இப்போது இஸ்ரேல் இந்தியாவின் மிகப்பெரிய ஆயுத விநியோகஸ்தர்களில் ஒன்றாக உள்ளது. ட்ரோன்கள், ஏவுகணைகள், ராடார்கள் எனப் பெரும்பாலானவை இஸ்ரேலிலிருந்து வருகின்றன. விவசாயம், நீர் மேலாண்மை, தொழில்நுட்பத்திலும் ஒத்துழைப்பு அதிகரித்துள்ளது.

மோடி ஆட்சிக்குப் பிறகு உறவு மேலும் வேகமாக வளர்ந்தது. 2017இல் மோடி முதல் இந்தியப் பிரதமராக இஸ்ரேல் சென்றார். இந்துத்துவமும் சியோனிசமும் சில கருத்துகளில் ஒத்துப்போவதால் இந்தக் கூட்டணி நாளுக்கு நாள் ஆழமடைகிறது.

கடந்த பிப்ரவரி 25-26 அன்று நரேந்திர மோடி இஸ்ரேலுக்கு இரண்டு நாள் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டார். இது 2017க்குப் பிறகு அவரது இரண்டாவது பயணம். இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அவரை தனிப்பட்ட முறையில் வரவேற்றார். மோடி இஸ்ரேல் நாடாளுமன்றமான நெசெட்டில் (Knesset) உரை நிகழ்த்திய முதல் இந்தியப் பிரதமர் என்ற அவப்புகழை அடைந்திருக்கிறார்.

ஃபலஸ்தீன விவகாரத்தில் இந்தியா இரு நாடுகள் தீர்வை ஆதரிப்பதாகக் கூறினாலும், உறவு இஸ்ரேலுடன் மிக நெருக்கமாக ஆகியிருக்கிறது. குறிப்பாக ஈரான் மீதான இஸ்ரேல் - அமெரிக்காவின் தற்போதைய தாக்குதல்களை, ஆயத்துல்லாஹ் கமேனியின் கொலையை இந்தியா கண்டிக்காமல் இருப்பது இந்நாடு அமெரிக்கா, இஸ்ரேலின் முழு அடிமையாக மாறியிருப்பதையே காட்டுகிறது.

இந்துத்துவ - சியோனிச கூட்டணி எங்கு போய் முடியுமோ தெரியவில்லை. இவர்கள் இந்தியாவை முச்சந்தியில் நிற்க வைக்காமல் ஓயமாட்டார்கள் என்பதில் ஐயமில்லை.


بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
உங்கள் இல்லங்களிலும், இறை இல்லங்களிலும்
ஓர் இஸ்லாமிய நூலகம்!
புனித ரமலான்
மாதத்தை முன்னிட்டு
அனைத்து நூல்களும் சிறப்பு தள்ளுபடி விலையில்!
94440 25000
95000 57860
*terms & Conditions apply
ரஹ்மத் பதிப்பகம்
இது ஒரு சென்னை ரஹ்மத் அறக்கட்டளை நிறுவனம்
6, இரண்டாவது பிரதான சாலை, சி.ஐ.டி காலனி, மயிலாப்பூர், சென்னை 4
BHIM UPI

# திருப்பரங்குன்றம் FILES

## தொப்புள் கொடி உறவும் மரபும்

### ஆவணப்படம்

**கேரள ஸ்டோரி, தி குஜராத் ஃபைல்ஸ் போன்ற வெறுப்புத் திரைப்படங்கள் மூலம் வெறுப்பையும், பிளவுகளையும் ஏற்படுத்தி வரும் காலத்தில் வெறுப்புக்கு எதிராக அன்பையும், நல்லிணக்கத்தையும் உறுதிப் படுத்தும் பெரும் முயற்சியை அறக் கலகம் 'திருப்பரங்குன்றம் ஃபைல்ஸ்' என்ற ஆவணப் படத்தைத் தயாரித்து வெளி யிட்டுள்ளது. தவம், தமிழ்தாசன் கூட்டு முயற்சியில் தமிழ் நாட்டு வரலாற்று ஆவணத்தின் பெட்டகமாக திருப்பரங்குன்றம் ஃபைல்ஸ் திகழ்கிறது.**

தமிழ்நாட்டின் மதுரையை அடுத்துள்ள திருப்பரங்குன்றம் ஒரு புனிதத் தலம் மட்டும் அல்ல அது பல நூற்றாண்டுகளாக இந்து முஸ்லிம் ஒற்றுமை வாழ்வியலை வெளிப்படுத்தும் ஒரு சமூகச் சின்னமாகவும் விளங்குகிறது. இங்கு அமைந்துள்ள திருப்பரங் குன்றம் முருகன் கோயில், மலை யின் மேல் அமைந்துள்ள சிக்கந்தர் மலை தர்கா ஆகிய இரண்டும் அந்தப் பகுதியின் பல்வேறு மத மக்களையும் இணைக்கும் வரலாற்றுச் சான்றுகளாகத் திகழ் கின்றன.

திருப்பரங்குன்றம் முருகன் கோயில் தமிழர்களின் பழமையான அறுபடை வீடுகளில் ஒன்றாகக் கருதப் படுகிறது. நூறாண்டுகளாக பக்தர்கள் வழிபடும் இந்தத் தலம் தமிழர் ஆன்மிக வரலாற்றில் மிக முக்கி யமான இடத்தைப் பெற்றுள்ளது. அதே நேரத்தில் மலையின் மேல் அமைந்துள்ள சிக்கந்தர் மலை தர்கா, சூஃபி மரபைச் சேர்ந்த ஒரு புனிதத் தலமாகவும், பல மதங்களைச் சேர்ந்த மக்களும் மரியாதையுடன் வந்து செல்லும் இடமாகவும் இருந்து வருகிறது. இந்த இரண்டு புனிதத் தலங்களும் ஒரே மலையைப் பகிர்ந்து கொண்டு இருப்பது ஒரு சாதாரண சம்பவம் அல்ல.

அது தமிழ்நாட்டின் கலாச்சார அடையாளமான ஒற்றுமை, சகிப்புத்தன்மை, பரஸ்பர மரியாதை ஆகிய வற்றின் உயிர்ப்பான சின்னமாகும். பல தலைமுறைகளாக அந்தப் பகுதி மக்கள் இந்து, முஸ்லிம் என வேறுபாடின்றி ஒன்றாக வாழ்ந்து வருகின்றனர். பண்டிகைக் காலங்களில் ஒருவருக்கொருவர் உதவி செய்தல், சமூக நிகழ்வுகளில் பங்கேற்பது, அன்றாட வாழ்வில் பரஸ்பர நம்பிக்கை கொண்டிருப்பது போன்றவை அங்குள்ள மக்களின் இயல் பான வாழ்வியல் முறையாக இருந்து வருகிறது.

இந்த வாழ்வியல் மரபு சமய ஒற்றுமையின் சிறந்த எடுத்துக்காட்டாகக் கருதப்படுகிறது. குறிப்பாக மதுரை, அதன் சுற்றுப்புறங்களில் பல நூற்றாண்டுகளாக உருவான கலாச்சாரச் சூழல், பல மதங்களைச் சேர்ந்த மக்களும் இணைந்து வாழும் சமூக அமைப்பை உருவாக்கி யுள்ளது. ஆனால் அண்மைக் காலங்களில் சில அரசியல், கருத்தியல் இயக்கங்கள் இந்த இயல்பான ஒற்றுமையைச் சீர்குலைக்கும் முயற்சிகளில் ஈடுபடுகின்றன. குறிப்பாக, சில சங்பரிவார் அமைப்புகள் மத அடையாளங்களை அரசியல் கருவியாக மாற்றி சமூகத்தில் பிளவை ஏற்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடுகின்றன.

ஒரு பகுதியின் வரலாற்றையும் அதன் சமூக உறவுகளையும் புரிந்து கொள்ளாமல், அந்த இடங் களை வெறும் மத அரசியலின் கண்ணோட்டத்தில் பார்க்கும் போது அது பல தலைமுறைகளாக உருவாகி யுள்ள நல்லிணக்கத்தைப் பாதிக்கும் அபாயம் உள்ளது. திருப்பரங்குன்றம் போன்ற இடங்களில் உருவாகியுள்ள ஒற்றுமை ஒரு நாளில் உருவானதல்ல. அது பல தலைமுறைகளின் அனுபவம், மரபு, பரஸ்பர நம்பிக்கையின் விளைவு.

அந்த வகையில், திருப்பரங்குன்றம் சிக்கந்தர் மலை தர்கா பற்றிய வரலாற்றையும் சமூக உண்மைகளையும்

பதிவு செய்ய வேண்டிய கட்டாயத் தேவை இன்றைக்கு அதிகமாகியுள்ளது. அந்தத் தேவையைத் திருப்பரங்குன்றம் ஆவணப்படம் முழுமையாகப் பூர்த்தி செய்துள்ளது. அந்தப் பகுதியின் உண்மையான சமூகப் பின்னணியை வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதோடு, மக்களிடையே உள்ள மனிதநேய உறவுகளை நினைவூட்டுகின்றது.

இந்தியாவின் அடிப்படை அரசியல் தத்துவம் மதச்சார்பற்ற தன்மை ஆகும். எந்த மதத்தையும் உயர்த்தி மற்ற மதங்களைத் தாழ்த்தாமல், அனைத்து மதங்களையும் சமமாக மதிக்கும் சமூக அமைப்பை உருவாக்குவதே அதன் நோக்கம். திருப்பரங்குன்றம் போன்ற இடங்கள் இந்த மதச்சார்பற்ற பண்பாட்டின் வாழும் எடுத்துக்காட்டுகளாக திகழ்கின்றன. எனவே இத்தகைய வரலாற்று, கலாச்சார அடையாளங்களைப் பாதுகாப்பது அனைவரின் பொறுப்பாகும்.




ஒற்றுமையைக் காக்கும் முயற்சிகளுக்கு ஆதரவு அளிப்பதும், வெறுப்பு, பிளவை உருவாக்கும் முயற்சிகளை மறுப்பதும் ஜனநாயக சமூகத்தின் கடமையாகும். திருப்பரங்குன்றத்தின் வரலாறு நமக்கு ஒரு முக்கியமான பாடத்தைச் சொல்கிறது. மதம் வேறாக இருக்கலாம், ஆனால் மனிதநேயம் ஒன்றே. அந்த மனித நேயத்தைப் பாதுகாப்பதே இந்தியாவின் உண்மையான வலிமை.

திருப்பரங்குன்றம் ஆவணப்படம் மிக நேர்த்தியாகக் களத்தில் இருந்து பல்வேறு ஆளுமைகளை நேரடியாகச் சந்தித்து அவர்களிடம் அந்தப் பகுதியினுடைய அனுபவங்களையும், மக்களின் ஒற்றுமையையும் கேட்டறிந்து ஆவணப்படுத்தி இருக்கிறது. மதுரை, அதன் சுற்றுப்புறங்களில் வசித்து வரும் எழுத்தாளர்கள், சமூக ஆர்வலர்கள், வழக்கறிஞர்கள், முருகன் மலை, தர்கா தலைவர்கள் ஆன்மிகத் தலைவர்கள் அப்பகுதியினுடைய மக்களை நேரடியாகச் சந்தித்து ஆதாரப்பூர்வமாக இந்த ஆவணப்படத்தைத் தயாரித்துள்ளார்கள்.

முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி அரிபரந்தாமன், இந்த வழக்கை எடுத்து நடத்திய வழக்கறிஞர் வாஞ்சிநாதன், மதுரை மத நல்லிணக்க மக்கள் கூட்டமைப்பு மீ.த. பாண்டியன், இயக்குநர் அமீர், எழுத்தாளர் முத்துக்கிருஷ்ணன், தோழர் தியாகு, வன வேங்கைகள் கட்சி இரணியன், பயிற்சி பெற்ற தமிழ் அர்ச்சகர் ரங்கநாதன், ஆன்மிகச் சொற்பொழிவாளர் சுகிசிவம் உள்ளிட்ட பல முக்கியமான ஆளுமைகள் இந்த நிகழ்வுக்கு மிக முக்கிய ஆதாரங்களாகப் பல்வேறு செய்திகளை வழங்கியிருக்கிறார்கள்.

திருப்பரங்குன்றம் மலையின் வரலாறு, தர்காவின் வரலாறு, மக்கள் அங்கு வாழத் தொடங்கிய வரலாறு, எப்போது பிரச்னை என்று உருவானது?, எப்படி சங் பரிவாரங்கள் சதி செய்து வழக்குகள் தொடுத்தார்கள்?, தங்களுக்குத் தேவையான வகையில் எப்படி நீதியை பெற்றுக் கொண்டார்கள் என்பதை மிக விரிவாக இந்த ஆவணப்படம் விவரிக்கின்றது.

இன்றைய தமிழ்நாட்டுச் சூழலில் இந்த ஆவணப்படம் ஒரு மிகப்பெரும் வரலாற்று உண்மையைப் பதிவு செய்துள்ளது. இந்த உண்மையை ஒட்டுமொத்த தமிழர்களும் தெரிந்து கொண்டால் நம் மண் எப்போதும் மத நல்லிணக்கத்திற்கு உலகத்திற்கே முன்மாதிரியான மண் என்பது நிலைத்திருக்கும்.

வரலாறு அழிக்கப்பட்டும், சிதைக்கப்பட்டும் வருகின்ற இக்காலத்தில் உண்மை வரலாற்றை ஆவணப்படுத்தும் இந்த முயற்சி பெரும் பாராட்டுக்குரியது. உண்மை வரலாற்றை உரத்துச் சொல்வதன் மூலமே பொய்யையும், வெறுப்பையும் விரட்டியடிக்க முடியும். அந்த வகையில் இந்த ஆவணப்படத்திற்காக உழைத்த அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். (இந்த ஆவணப்படத்தை https://youtu.be/21tZWM5I7xY?si=JOxWijkGs0qGP6ml என்ற இணைப்பில் யூடியூப் பக்கத்தில் பார்க்கலாம்.)

**- S. சாகுல் ஹமீது**



# ஆயத்துல்லாஹ் அலீ கமேனி

## ஒரு புரட்சியாளரின் வாழ்வும் உயிர்த் தியாகமும்

**- இப்னு ஜமால்**

### ஷஹாதத் செய்தி

2026 பிப்ரவரி 28 அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து நடத்திய வான்வழித் தாக்குதலில், ஈரான் இஸ்லாமியக் குடியரசின் உச்சத் தலைவர் ஆயத்துல்லாஹ் அலீ கமேனி தமது 86ஆவது வயதில் உயிர்த் தியாகி(ஷஹீத்) ஆனார். அவரது மகள், மருமகன், பேரன் ஆகியோரும் இத்தாக்குதலில் உயிரிழந்தனர்.

### பிறப்பும் இளமையும்

அலீ கமேனி 1939ஆம் ஆண்டு, ஈரானின் மஷ்ஹதில் பிறந்தார். அவரது தந்தை ஒரு புகழ்பெற்ற இஸ்லாமிய அறிஞர். தாயார் கதீஜா மீர்தாமதி, குர்ஆன், இலக்கிய ஆர்வம் மிக்கவர்; தன் மகனுக்கு இலக்கிய ஆர்வத்தை ஊட்டியவர். நான்கு வயதிலேயே குர்ஆன் கற்கத் தொடங்கிய கமேனி, மஷ்ஹதின் முதல் இஸ்லாமியப் பள்ளியில் ஆரம்பக் கல்வியை முடித்தார். தொடர்ந்து ஈராக்கின் நஜஃப், ஈரானின் கோம் ஆகிய இடங்களில் உயர்கல்வி கற்றார். கோமில்தான் ஆயத்துல்லாஹ் ருஹுல்லா கோமேனியின் நெருக்கமான மாணவரானார்.

### புரட்சிப் பாதையில்..

இளம் வயதிலேயே ஷா பஹ்லவி அரசின் எதேச்சதிகாரத்திற்கு எதிரான அரசியல் போராட்டத்தில் ஈடுபட்டார். 1953இல் சி.ஐ.ஏ-வும் பிரிட்டிஷ் எம்.ஐ.6ம் சேர்ந்து, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர் முஸாதிக்கைக் கவிழ்த்து ஷா மன்னரை மீண்டும் அரியணையில் அமர்த்தியிருந்தனர். அதன் பிறகு ஷாவின் ரகசியக் காவல்படை சவாக் (SAVAK) எதிர்ப்பாளர்களை வேட்டையாடியது. கமேனி பலமுறை கைது செய்யப்பட்டு, ஈரானின் தொலைதூர நகரான ஈரான் ஷஹருக்கு நாடு கடத்தப்பட்டார். ஆயினும் மனம் தளராமல், 1978-79 புரட்சியில் முன்னணிப் பங்காற்றினார். அந்தப் புரட்சி பஹ்லவி அரச மரபின் ஆட்சியை வீழ்த்தியது.

### அதிபரிலிருந்து உச்சத் தலைவர் வரை

புரட்சிக்குப் பிறகு, கமேனி பாதுகாப்பு அமைச்சராகவும், IRGCஇன் மேற்பார்வையாளராகவும், தெஹ்ரானின் ஜும்ஆ தொழுகை இமாமாகவும் பணியாற்றினார். 1981இல் எதிர்ப்புக் குழுவான முஜாஹிதீன் இ கல்க் நடத்திய படுகொலை முயற்சியில் உயிர் தப்பினார், ஆனால் வலக்கையின் செயல்பாட்டை நிரந்தரமாக இழந்தார். அதே ஆண்டு ஈரானின் முதன்மை அதிபரானார்.

1980 முதல் 1988 வரை நடந்த ஈரான் - ஈராக் போரின் போது அதிபராக இருந்தார். அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் சதாம் உசேனுக்கு ஆதரவளித்தன; ஈராக் ஈரானியப் படைவீரர்களுக்கு எதிராக வேதியியல் ஆயுதங்களைப் பயன்படுத்தியது. இந்த அனுபவங்கள் கமேனிக்கு மேற்கத்திய நாடுகளின் மீது ஆழ்ந்த அவநம்பிக்கையை உருவாக்கின. முன்னணிப் போர்க்களங்களுக்கு நேரில் சென்று வீரர்களைச் சந்தித்ததால், IRGC படைவீரர்களின் விசுவாசத்தைப் பெற்றார்.

1989இல் கோமேனி மறைவுக்குப் பின் உச்சத் தலைவரானார். அவருக்கு ஹுஜ்ஜதுல்

இஸ்லாம் பட்டம் மட்டுமே இருந்ததால், அரசமைப்புச் சபை தகுதி நிபந்தனைகளைத் தளர்த்தியது. 'நான் இந்தப் பதவிக்குத் தகுதியானவன் அல்ல என்று நம்புகிறேன். இது அடையாளத் தலைமையே தவிர உண்மையான தலைமை அல்ல' என்று அவரே கூறியிருந்தார். ஆனால் அவரது தலைமை வெறும் அடையாளம் அல்ல, மாறாக ஈரானின் அரசியல், இராணுவ, பொருளாதார அமைப்பையே வடிவமைத்த ஒரு தீர்க்கமான சக்தி என்பதை அடுத்த 36 ஆண்டுகள் நிரூபித்தன.

## IRGCஐ உருவாக்கியவர்

கமேனியின் மிக முக்கியமான பங்களிப்பு, இஸ்லாமியப் புரட்சிகர காவலர் படையை (IRGC) ஒரு துணை இராணுவத்திலிருந்து சக்திவாய்ந்த பாதுகாப்பு, அரசியல், பொருளாதார நிறுவனமாக மாற்றியதே. அவர் ஒரு போர்க்கால அதிபர். போர் அவரது உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளை வடிவமைத்தது. உச்சத் தலைவரான பிறகு, இராணுவப் புரட்சிகரப் படையமைப்பை உருவாக்குவதில் கவனம் செலுத்தினார்.

கோமேனிக்கு இருந்தது போன்ற இயற்கையான மக்கள் ஆதரவு கமேனிக்கு இல்லை என்பதை உணர்ந்த அவர், IRGC, அதன் தன்னார்வப் படையான பசீஜ் இளைஞர்களுக்குக் கல்வியும் பயிற்சியும் அளித்து, ஒரு விசுவாசமான ஆதரவுத் தளத்தை உருவாக்கினார். IRGCக்கு வணிக நிறுவனங்களை நடத்த அனுமதி வழங்கி, ஈரானின் பொருளாதாரத்தில் அவர்களுக்கு ஆதிக்கம் அளித்தார்.

2015இல், சர்வதேசத் தடைகளால் பொருளாதாரம் நலிவுற்றபோது, அணு ஒப்பந்தத்திற்கு (JCPOA) அனுமதியளித்தார். இது சோவியத்துடன் அமெரிக்கா செய்ததைப் போன்ற ஒரு குறுகிய ஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தமே. ஆனால் 2018இல் ட்ரம்ப் ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்ததும், கமேனி கடுமையான நிலைப்பாட்டுக்கு மீண்டும் திரும்பினார்.

லெபனானின் ஹிஸ்புல்லா, ஃபலஸ்தீனின் ஹமாஸ், ஏமனின், ஈராக்கின் போராட்டக் குழுக்கள் ஆகியவற்றை ஒன்றிணைத்து, ஈரானின் எல்லைகளுக்கு அப்பால் ஒரு முன்னணிப் பாதுகாப்பு வளையத்தை உருவாக்கினார். இதன் சிற்பியாக இருந்தவர் IRGCஇன் குத்ஸ் படையின் தளபதி ஷஹீது ஜெனரல் காசிம் சுலைமானி அவர்களே. 2020 ஜனவரியில் அமெரிக்கா அவரைப் படுகொலை செய்தது.

## 12 நாள் போரும் இறுதித் தாக்குதலும்

2025 ஜூன் 13இல், ஈரானின் கூட்டணிகளின் பலவீனமான தருணத்தைப் பயன்படுத்தி, ஈரானின் அணுசக்தி மையங்களைத் தாக்க விரும்பிய இஸ்ரேலியப் பிரதமர் நெதன்யாகு செயலில் இறங்கினார். அமெரிக்காவின் அறிவுடன் இஸ்ரேல் ஈரானின் அணு மையங்கள், இராணுவக் கட்டமைப்புகள், அணு விஞ்ஞானிகள் மீது தாக்குதல் நடத்தியது. ஈரான் தெல்அவிவ் மீது ஏவுகணைகளால் பதிலடி கொடுத்தது. 12 நாள் கடும் போர் நடந்தது. இறுதியில் அமெரிக்கா தனது மிக வீரியமான Bunker Buster குண்டுகளால் மூன்று அணுசக்தி நிலையங்களை அழித்தது. 1,000க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

நெதன்யாகு கமேனியைக் கொல்வதாக மிரட்டினார். ட்ரம்ப் நிபந்தனையற்ற சரணடைவைக் கோரினார். கமேனி உறுதியுடன் பதிலளித்தார்: 'ஈரானின் வரலாற்றை அறிந்தவர்கள் இந்நாட்டிடம் மிரட்டல் மொழி பேச மாட்டார்கள். ஈரான் மக்கள் ஒருபோதும்

**கமேனி 36 ஆண்டுகளாக ஈரானை வழி நடத்தினார். ஒரு போர்க்கால அதிபராகத் தொடங்கி, உலகின் மிகச் சக்தி வாய்ந்த நாடுகளை எதிர்த்து நின்ற தலைவராக உயர்ந்தார்.**

சரணடைய மாட்டார்கள்' 12 நாள் போருக்குப் பிறகு, இஸ்ரேல் ஈரான் மக்களை ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யுமாறு தூண்டியது. ஆனால் ஈரான் மக்கள் அந்த அழைப்பை நிராகரித்தார்கள்.

கமேனி 36 ஆண்டுகளாக ஈரானை வழி நடத்தினார். ஒரு போர்க்கால அதிபராகத் தொடங்கி, உலகின் மிகச் சக்திவாய்ந்த நாடுகளை எதிர்த்து நின்ற தலைவராக உயர்ந்தார். அவரது ஆட்சி சர்ச்சைகளும் சவால்களும் நிறைந்ததாக இருந்தது என்பது மறுக்கமுடியாத உண்மை. ஆனால் வெளிநாட்டு ஆக்கிரமிப்பு நிகழ்ந்தபோது, ஈரான் மக்கள் தங்கள் தலைவருக்குப் பின்னால் அணி திரண்டார்கள் என்பதும் வரலாற்று உண்மையே.

இறுதியில் அமெரிக்க - இஸ்ரேலிய கூட்டுத் தாக்குதலில் ஷஹீதான கமேனி, தனது வாழ்நாள் முழுவதும் போராடிய கொள்கைக்காகவே உயிர் நீத்தார். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். (நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள்; நிச்சயமாக அவனிடமே நாம் திரும்புவோம்)

ஆயத்துல்லாஹ் அலீ கமேனி அவர்களின் ஷஹாதத் (இறப்பு), ஈரான் மக்களின் உறுதியையும் தீர்மானத்தையும் மேலும் வலுப்படுத்தும் என்பதில் ஐயமில்லை. அமெரிக்கா இஸ்ரேலிய அசத்தியத்திற்கு எதிரான போராட்டம் தடையின்றித் தொடரும். ஷஹீதின் செய்தி, எதிர்காலத் தலைமுறைகளுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காகத் திகழும்.

'நம்பிக்கையாளரில் இத்தகையவர்களும் இருக்கின்றனர்: அல்லாஹ்விடம் தாங்கள் கொடுத்த வாக்குறுதியை அவர்கள் மெய்ப்படுத்திக் காட்டிவிட்டிருக்கிறார்கள்; அவர்களில் சிலர் தமது நேர்ச்சையை நிறைவேற்றி விட்டார்கள்; இன்னும் சிலர் அதற்கான நேரத்தை எதிர்பார்த்த வண்ணம் இருக்கின்றார்கள் அவர்கள் (தம்முடைய நடத்தையில்) எவ்வித மாற்றத்தையும் செய்யவில்லை' (திருக்குர்ஆன் 33:23)




ஏக இறைவனின் திருப்பெயரால்

# உம்மு குல்சூம் பெண்கள் கல்லூரி

சென்னை

இவ்வுலகம் மற்றும் மறு உலகத்தில் வெற்றி பெற

## ஓர் அறிய வாய்ப்பு !!

**படிப்பு விவரங்கள்:**

- ஆலிமா டிப்ளமோ படிப்பு (3 வருடம்)
- முபல்லிகா படிப்பு (2 வருடம்)
- தீனியாத் (6 மாதம்)
- அஃப்சலுல் உலமா பட்டப்படிப்பு (3 வருடம்)
- 5 Years Hifz + Schooling
- UGC அங்கீகரிக்கப்பட்ட பட்டப் படிப்பு (3 வருடம்)
- B.A. (Islamic Studies)
- B.Com (General)
- BCA
- NIOS:8th, 10th & 12th பள்ளி கல்வி

வெகுநாட்களாக தாங்கள் எதிர்பார்த்த மாணவிகளுக்கான மார்க்கக்கல்வியுடன் உலகக்கல்வியும் சார்ந்த பட்டப்படிப்பு பிரபலமான பல்கலைகழகத்தின் ஒப்புதலுடன் எங்கள் கல்லூரியில் வழங்கப்படுகிறது.

- இதர கற்பிக்கும் வசதிகள்
- பாதுகாப்பான வளாகம்
- உணவு வசதியுடன் தங்குமிடம் (ஹாஸ்டல்)
- தகுதியுள்ளவர்களுக்கு உதவித்தொகை (Scholarship) வழங்கப்படும்.

## 2026-2027
## கல்வி ஆண்டிற்கான சேர்க்கை நடைபெறுகிறது

**நமது பயிற்சி மையம் இயங்கும் இடம்:**

37, ஆசர்கானா தெரு,
(அஹ்லே ஹதீஸ் மஸ்ஜித் பின்புறம்)
ஆலந்தூர், சென்னை 600 016.

## விண்ணப்பங்களுக்கு முந்துங்கள் !

9629521962 98412 99584 / 9884439921

# ரமளானைத் தொடர்ந்து அடுத்து என்ன?

- அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது

ஒரு ரமளானைச் சந்திப்பதற்கும் அதன் அருட்பேறுகளைப் பெற்றுக் கொள்வதற்கும் வாய்ப்பளித்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அல்ஹம்துலில்லாஹ்

ஒவ்வொரு ரமளானுக்குப் பின்னரான நமது வாழ்வு எப்படி அமைய வேண்டும் என்பது தொடர்பாகச் சிந்திக்க வேண்டும். முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டிய ஓர் உண்மை இருக்கிறது.

ரமளான் நம்மை விட்டு விடை பெற்றுச் சென்றாலும் ரமளானுடைய ரப் ஆகிய அல்லாஹ் தொடர்ந்து இருக்கின்றான். ரமளானில் எந்த அல்லாஹ்வை வணங்கி வழிபட்டோமோ அந்த அல்லாஹ் ரமளானுக்குப் பிறகும் இருப்பவன். அவன் நிலையானவன்; நித்திய ஜீவன்.

அடியார்களில் மோசமானவன் ரமளானில் மாத்திரம் தனது ரப்பைக் காண்பவன். தனது இறைவனை என்றும் எப்போதும் காண்பவனே உண்மையான அடியான்; சிறந்த அடியான்.

ஒருவர் இரு முகம் கொண்டவராக இருத்தல் ஆகாது. நாளை மறுமையில் மிகக் கெட் டவனாகப் பார்க்கப்படுபவன் உலகில் இரு முகங்களுடன் வாழ்ந்தவனே என்பது நபிவாக்கு. அல்லாஹ்வுக்கு ரமளானில் ஒரு முகத்தையும் ஏனைய காலங்களில் மற்றொரு முகத்தையும் காட்டுபவனும் இந்த எச்சரிக்கைக்குரியவனே!

நமது ரமளான் கால நற்செயல்கள் அங்கீகரிக்கப்பட்டதற்கான அடையாளம் என்ன தெரியுமா? அந்த நற்செயல்களைத் தொடர்ந்து செய்கின்ற பாக்கியத்தைப் பெறுவதாகும். ஒருவர் தான் ரமளானில் நிறைவேற்றிய நற்செயல்களை ரமளான் முடிந்த பின்பும் தொடர்கின்றாரெனில் அவரது ரமளான் கால நற்செயல்கள் அல்லாஹ்வினால் ஒப்புக் கொள்ளப்பட்டன என்பதே அர்த்தம்.

### *நமது ரமளான் கால நிலையைத் தொடர என்ன வழி?*

முதலாவதாக அல்லாஹ்வின் உதவியை நாட வேண்டும். அவனது உதவியின்றி எந் தவொரு நற்செயலையும் செய்யவோ, தொடரவோ முடியாது. எந்த ஒரு பாவத்தையும் செய்யாமல் இருக்கவும் முடியாது.

இரண்டாவதாக தொடர்ச்சியாக உள்ளத்தோடு போராடி, மனோ இச்சையை வென்று நற்செயல்களில் முனைப்புக் காட்டும் முஜாஹதாவில் ஈடுபட வேண்டும். அடுத்து நல்லடியார்களின் தொடர்பில் இருக்க வேண்டும். நல்லடியார்களுடனான உறவு நமக்கு நற்காரியங்களில் ஈடுபடும் நாட்டத்தையும் தேட்டத்தையும் தரும்.




ஜஃபர் அஸ்ஸாதிக்(ரஹ்) அவர்கள் கூறி னார்கள்: 'எனக்கு வணக்க வழிபாடுகளில் சோர்வு ஏற்படும் சந்தர்ப்பங்களில் முஹம்மத் இப்னு வாஸிஃ அவர்களைப் போய் பார்ப் பேன். அவரைப் போய் பார்த்து விட்டு வந்தால் போதும் ஒரு வார காலத்திற்கு என்னால் ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் நற்செயல்களில் ஈடுபட முடியும்'

முஹம்மத் இப்னு வாஸிஃ அக்காலத்தில் வாழ்ந்த ஒரு தாபிஈ; ரப்பானீய்ய மகான்.

எனவே, ரமளான் கால நற்செயல்களைத் தொடர்ந்து கடைப்பிடிக்க உறுதி பூணுவோம். ரமளான் விடைபெற்றாலும் நோன்பு நம்மை விட்டு விடை பெறவில்லை. ஷவ்வால் மாத ஆறு நோன்புகள், மாதம்தோறும் நோற்கப்படு கின்ற அய்யாமுல் ஃபீழ் நோன்புகள், வாரம் தோறும் நோற்கப்படுகின்ற திங்கள், வியாழன் நோன்புகள், அரஃபா நோன்பு, துல்ஹிஜ்ஜா கால நோன்பு, ஆஷூறா, தாஸூஆ நோன்புகள், ஷஃபான் முதல் பகுதியில் நோற் கப்படும் நோன்புகள் என முழு ஆண்டும் நோன்பு நோற்பதற்கான சந்தர்ப்பம் நமக் கிருக்கின்றது. அதே போல ரமளானில் தொழுத கியாமுல் லைலையும் ஓதிய திலாவத்துல் குர்ஆனையும் திக்ர், அவ்ராது களையும் ரமளானுக்குப் பின்னரான நாள் களிலும் தொடர்வோம். ரமளான் காலத்தினைப் போலவே தொடர்ந்து தேவையுடையோருக்கு முடியுமானவரை உதவிக்கை நீட்டுவோம்.

குறிப்பாக ரமளானில் நமது நாவையும் கண்களையும் காதுகளையும் ஏனைய உறுப்புகளையும் கவனமாகக் காத்துக் கொண்டோமல்லவா? தொடர்ந்து இந்த நிலையைப் பேண முழு முயற்சி செய்வோம். மீண்டும் பாவங்களை நோக்கியோ கெட்ட பழக்கங்களை நோக்கியோ செல்வதில்லை என உறுதி கொள்வோம். ரமளான் தந்த பரிசுத்தத்தை மாசுபடுத்திக் கொள்ளாமல் அது தந்த பக்குவத்தை இழந்து விடாமல் பயணிக்க உறுதி கொள்வோம். ஒவ்வொரு ரமளானும் நம்மில் மிகப் பெரும் மாற் றத்தை ஏற்படுத்திய ரமளானாக அமை யட்டும்!


# சட்டசபையில் சமூக நீதி குரல்




**நூலின் சிறப்பம்சம்**

1952 முதல் 2026 வரை தமிழ்நாடு சட்டமன்றத்தில் பலரும் ஆற்றிய உரைகள் நூல்களாக தொகுக்கப்பட்டு வெளிவந்துள்ளது.

அவற்றிலிருந்து முற்றிலும் மாறு பட்ட முறையில் இந்நூல் தொகுக்கப் பட்டு இருக்கிறது.

சட்டசபையில் நடைபெற்ற நிகழ்வுகளை எல்லோரும் எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையிலும், எதிர் கால தலைமுறையினரும் புரியும் வகையிலும் இந்த நூல் தெளிவான குறிப்புகளுடன் அழகாக தொகுக்கப் பட்டு இருக்கிறது.

மனிதநேய ஜனநாயக கட்சியின் தலைவர் மு. தமிமுன் அன்சாரி அவர் களின் அரசியல் கோட்பாடுகளும், அணுகுமுறைகளும், முற்போக்கான சிந்தனைகளும் நூலைப் படிப்போரை வயப்படுத்துகிறது.

*பக்கங்கள் : 336 விலை : ரூ. 500*

**புத்தகம் கிடைக்கும் இடம்:**

மஜக தலைமையகம்,
5/2, லிங்கி செட்டி தெரு,
மண்ணடி, சென்னை-1
தொடர்புக்கு: **044 - 47919455, 90032 60652**

# நிராகரிப்பிற்கான கூலி

**ஸபஃ**[25] **சமுதாயத்தினருக்கு அவர்கள் வசித்த இடத்திலேயே ஒரு சான்று இருந்தது.**[26] **வலப்புறமும் இடப்புறமும் இரு தோட்டங்கள் இருந்தன.**[27] **உண்ணுங்கள், உங்கள் இறைவன் வழங்கிய உணவை! மேலும் அவனுக்கு நன்றி செலுத்துங்கள். நாடோ நன்கு தூய்மையாக இருக்கிறது. படைத்த இறைவனோ பெரும் மன்னிப்பாளனாக இருக்கின்றான். ஆயினும் அவர்கள் புறக்கணித்துவிட்டார்கள்.**[28] **ஆகவே அவர்கள் மீது அணை உடைத்து ஓடும் வெள்ளத்தை நாம் அனுப்பினோம்.**[29] **மேலும் அவர்களுடைய (முந்தைய) இரு தோட்டங்களுக்குப் பகரமாக வேறு இரு தோட்டங்களைக் கொடுத்தோம். அவற்றில் கசப்பான காய்களும், காற்றாடி மரங்களும் இன்னும் மிகச் சில இலந்தை மரங்களுமே இருந்தன.**[30] **இதுவே அவர்கள் நிராகரித்ததற்குப் பகரமாக நாம் வழங்கிய கூலியாகும். மேலும் நன்றி கொல்லும் மனிதர்களுக்கே அன்றி வேறெவருக்கும் நாம் இத்தகைய கூலி கொடுப்பதில்லை.**

**● அத்தியாயம் 34 ஸபா ● திருவசனங்கள் : 15 - 17**

**25.** உரைத் தொடரைப் புரிந்துகொள்வதற்கு இந்த அத்தியாயத்தின் 1 முதல் 9 வரையிலான வசனங்களைக் கருத்தில் கொள்வது அவசியமாகும். அந்த வசனங்களில் ‘அரபு இறை மறுப்பாளர்கள் மறுமை நிகழவிருப்பதை அறிவுக்கு அப்பாற்பட்ட விஷயமாகப் பார்த்தார்கள் என்றும், அந்தக் கோட்பாட்டை எடுத்துரைத்து வந்த நபிகளாரைக் குறித்து இந்த விந்தையான செய்தியை எடுத்துரைத்துக் கொண்டிருக்கின்ற இந்த மனிதர் ஒன்று பைத்தியக்காரராக இருக்க வேண்டும் அல்லது வேண்டுமென்றே இவற்றை இவ்வாறு புனைந்துரைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்றெல்லாம் அவர்கள் வெளிப்படையாகவே குற்றம் சுமத்தி வந்திருக்க, அவற்றுக்குப் பதில் அளிக்கின்ற போது வல்லமையும் மாண்பும் நிறைந்த அல்லாஹ் முதலில் அறிவார்ந்த சான்றுகளைச் சுட்டிக் காட்டியிருந்தான்’ என்றும் குறிப்பிடப் பட்டிருந்தது. இந்த அறிவார்ந்த சான்றுகள் குறித்த விளக்கங்கள் குறிப்பு எண்கள் 7,8,12 ஆகியவற்றில் தரப்பட்டிருந்தன.

அதற்கடுத்து வசன எண் 10 முதல் இது வரையிலான வசனங்களில் தாவூத்(அலை), சுலைமான்(அலை) ஆகியோரின் வரலாறும் அதனைத் தொடர்ந்து ஸபா சமூகத்தாரைப் பற்றிய விவரங்களும் ஒரு வரலாற்று ரீதியான சான்றைப் போன்று எடுத்துரைக்கப் பட்டன. இந்தப் பூவுலகில் மனிதகுலத்தின் வரலாறே ஒவ்வொரு செயலுக்கும் நல்லதும் கெட்டதுமான விளைவுகள் வந்தே தீரும் என்கிற சட்டத்துக்கு சான்றளிப்பதாக இருக்கின்றது என்கின்ற உண்மையை நெஞ்சில் பதிய வைப்பதற்காகத்தான் இந்த வரலாறு எடுத்துரைக்கப்பட்டன.

மனித வரலாற்றை ஆய்ந்து பார்த்தாலே இந்த உலகம் தான்தோன்றித்தனமாக அரங்கேறிக் கொண்டிருக்கின்ற மேடையாக இல்லை என்பதையும் அதற்கு மாறாக அனைத்தையும் பார்க்கின்ற வல்லமையும், அனைத்தையும் கேட்கின்ற பேராற்றலும் நிறைந்த இறைவன் ஆட்சி செலுத்திக் கொண்டிருக்கின்றான் என்பதையும் அவனோ நன்றி செலுத்துகின்ற பாதையை மேற்கொள்கின்றவர்களுடன் ஒரு விதமாகவும், நன்றியில்லாமலும் இறைவனை நிராகரித்தும் தவறான பாதையில் செல்கின்றவர்களுடன் வேறு விதமாகவும்

*28 ஆம் பக்கம் பார்க்க...*

**● தஃப்ஹீமுல் குர்ஆன் ● மௌலானா மௌதூதி (ரஹ்) ● தமிழில் : T. அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்**

# விபச்சாரத்தை விடக் கடுமையான குற்றம்

**நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'புறம் பேசுவது விபச்சாரத்தை விடக் கடுமையான குற்றம் ஆகும்'. நபித்தோழர்கள் வினவினார்கள்: 'இறைத்தூதரே! புறம் பேசுவது எப்படி விபச்சாரத்தை விடக் கடுமையான குற்றம் ஆகும்?'.**

**நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'ஒருவர் விபச்சாரத்தில் ஈடுபடுகின்றார். பிறகு இறைவனிடம் மீண்டு பாவமன்னிப்புக் கோருகின்றார். இறைவனும் அவருடைய பாவமன்னிப்புக் கோரிக்கையை ஏற்றுக்கொள்கின்றான்.'**

**இன்னொரு அறிவிப்பில், 'பிறகு அவன் இறைவனிடம் மீண்டு பாவமன்னிப்புக் கோருகின்றான். இறைவனும் அவனை மன்னித்துவிடுகின்றான். ஆனால் ஒருவன் புறம் பேசினாலோ அவன் எவரைக் குறித்து புறம் பேசினானோ அவர் அவனை மன்னிக்காத வரை இறைவனும் அவனை மன்னிப்பதில்லை' என்கிற வாசகங்கள் இடம் பெற்றுள்ளன.**

**அனஸ்(ரலி) அவர்களின் அறிவிப்பில் பதிவாகியுள்ள வாசகங்கள் வருமாறு: நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'விபச்சாரத்தில் ஈடுபடுபவன் தவ்பா செய் கின்றான். புறம் பேசுபவனுக்கோ பாவமன்னிப்பு இல்லை'.**

அறிவிப்பாளர்கள் : அபூஸயீத்(ரலி), ஜாபிர்(ரலி)
நூல் : பைஹகி

இங்கு குறிப்பிடப்பட்ட மூன்று அறிவிப்புகளையும் பைஹகி அவர்கள் பதிவு செய்திருக் கின்றார்கள். விபச்சாரம் செய்வதை விடக் கடுமையான குற்றம்தான் புறம் பேசுவது என அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஏனெனில் புறம் பேசுபவர்கள் பெரும்பாலும் அதனை மிகச் சாதாரணமான குற்றம் என்றே நினைத்துக்கொள்கின்றார்கள். இதனால் அவர்கள் தங்களின் அந்தச் செயல் குறித்து வெட்கப்படுவதுமில்லை; இறைவனிடம் பாவமன்னிப்புக் கோருவது மில்லை. ஆனால் விபச்சாரம் செய்தவனோ திண்ணமாக தன்னுடைய அந்தச் செயல் குறித்து வெட்கப்படுகின்றான்; தன்னைத்தானே நொந்துகொள்கின்றான்; இறைவனிடம் பாவ மன்னிப்புக் கோருகின்றான்.

'புறம் பேசுபவனுக்கு பாவமன்னிப்பு இல்லை' என்றும் இங்கு சொல்லப்பட்டுள்ளது. இதன் பொருள் என்னவெனில் பாவமன்னிப்புக் கோருகின்ற நற்பேறு புறம் பேசுபவனுக்கு பெரும்பாலும் கிடைப்பதில்லை. ஏனெனில் புறம் பேசுவது எந்த அளவுக்குக் கேடு விளை விக்கக்கூடியது என்கிற உணர்வு அவனுக்கு இருப்பதில்லை. அதுமட்டுமல்ல, அப்படியே புறம் பேசுபவன் பாவமன்னிப்புக் கோரினாலும் அதற்கு எந்த மதிப்பும் இல்லை. ஏனெனில், எவரைக் குறித்து அவன் புறம் பேசினானோ அந்த மனிதர் அவனை மன்னிக்காத வரையில் அவனுடைய அந்த பாவமன்னிப்புக் கோரிக்கையை இறைவனும் ஏற்றுக்கொள்ள மாட்டான்.

நபிமொழி விளக்கம் ✦ மௌலானா முஹம்மத் ஃபாரூக்கான் ✦ தமிழில் : அபூ ஹானியா

*26 ஆம் பக்கத் தொடர்ச்சி...*

நடந்துகொள்கின்றான் என்பதையும் தெள்ளத் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.

இறைவனின் இராஜ்ஜியத்தின் இயல்பே இப்படி இருக்கின்ற போது, அவனுடைய இறைமையில் நன்மையின் பயனும் தீமையின் விளைவும் ஒருபோதும் ஒரே மாதிரியானதாக இருக்காது; அதற்கும் மேலாக, திண்ணமாக நன்மை செய்தவர்களுக்கு அவர்களுக்கான நற்கூலி முழுமையாகக் கிடைக்கின்ற, தீயவர்களுக்கு அவர்களுக்கான தண்டனை முழுமையாகக் கிடைக்கின்ற நேரம் வந்தே தீரும்; அதுதான் இறைநீதியும் இறைவனின் நியாயமும் செறிந்த அணுகுமுறையும் உணர்த்தும் உண்மை என்கின்ற பாடத்தை படிப்பினை பெற விரும்புகின்ற எவரும் இதே வரலாற்றிலிருந்தே பெற்றுக் கொள்வார்.

**26.** அவர்களுக்கு என்னவெல்லாம் கிடைத்திருக்கின்றனவோ அவையனைத்தும் இறைவனால் வழங்கப்பட்டவைதாமே தவிர அவர்கள் சுயமாக உருவாக்கிக் கொண்டவை அல்ல என்பதற்கான சான்று! மேலும் அவர்களுக்கு இந்த அருள்வளங்களையெல்லாம் கொட்டிக் கொடுத்த இறைவன்தான் அவர்களின் அடிபணிதலுக்கும் கீழ்ப்படிதலுக்கும் வழிபாட்டுக்கும் நன்றிக்கும் உரியவனே தவிர, இவையெல்லாம் அவர்களுக்குக் கிடைப்பதில் எந்தப் பங்கும் ஆற்றிடாதவர்களுக்கு அல்ல என்பதற்கான சான்று! மேலும் அவர்களுக்குக் கிடைத்துள்ள இந்தச் செல்வமும் பொருள்வளங்களும் அருகிப் போகாதவை அன்று; அதற்கு மாறாக எப்படி அவை இவர்கள் வசம் வந்ததோ அவ்வாறே இவையனைத்தும் இவர்களிடமிருந்து பறிபோவதற்கும் வாய்ப்பு இருக்கின்றது என்பதற்கான சான்று!

**27.** ஒட்டுமொத்த நாட்டிலும் அந்த இரண்டு தோட்டங்கள்தாம் இருந்தன என்று இதற்குப் பொருள் அல்ல. அதற்கு மாறாக அந்த ஸபா தேசமே பசுமையான, செழிப்பான, பூத்துக் குலுங்குகின்ற தோட்டமாகவே இருந்தது. அந்த நாட்டில் ஒருவர் எந்த இடத்தில் நின்றுகொண்டு பார்த்தாலும் அவருடைய வலப் பக்கத்திலும் தோட்டங்களைப் பார்ப்பார்; இடது பக்கத்திலும் தோட்டங்கள் தெரியும்.

**29.** அடிபணிந்தும், கீழ்ப்படிந்தும், நன்றி உள்ள அடியார்களாய் வாழ்வதற்குப் பதிலாக, அவர்கள் இறைவனுக்கு மாறு செய்தும், நன்றி கொன்றும் நடக்கத் தொடங்கினார்கள்.

**29.** மூலத்தில் ‘சைலுல் அரிம்’ என்கிற சொற்கள் ஆளப்பட்டுள்ளன. ‘அர்மன்’ என்கிற தென் அரபு மொழியின் சொல்லிலிருந்து வந்த சொல்தான் ‘அரிம்’ என்கிற சொல். இதற்கு ‘அணைக்கட்டு’ என்று பொருள். ஏமன் நாட்டு பாழடைந்த சிதிலங்களிலிருந்து தற்காலத்தில் கண்டெடுக்கப்பட்ட தொன்மையான கல்வெட்டுகளில் இந்தச் சொல் இந்தப் பொருளில் பெரும் எண்ணிக்கையில் ஆளப்பட்டிருக்கின்றது. எடுத்துக்காட்டாக, மஅரிப் அணைக்கட்டை பழுதுபார்த்து சீரமைத்த பிறகு ஏமன் நாட்டின் அபிசீனிய ஆளுநர் அப்ரஹா அமைத்த கி.பி 542 அல்லது கி.பி. 543 ஆண்டு கல்வெட்டு ஒன்றில் இந்தச் சொல் அணைக்கட்டு என்கிற பொருளில் திரும்பத் திரும்ப ஆளப்பட்டுள்ளது. எனவே ‘சைலுல் அரிம்’ என்கிற சொல்லுக்கு அணைக்கட்டு உடைந்ததன் விளைவாகப் பீறிட்டுப் பாய்ந்த பெரு வெள்ளம் என்று பொருள் கொள்ளலாம்.

**30.** ‘சைலுல் அரிம்’ வந்ததன் விளைவாக என்ன நடந்ததெனில் ஒட்டுமொத்த தேசமும் அழிந்து போனது. ஸபா நாட்டு மக்கள் மலைகளுக்கு நடுவில் அணைக்கட்டுகளைக் கட்டி ஓட விட்டிருந்த கால்வாய்கள் அனைத்தும் வற்றிப் போயின. நீர்ப் பாசனத்துக்கான ஒட்டுமொத்த கட்டமைப்பும் நிலைகுலைந்து போனது. அதன் பிறகு ஒரு காலத்தில் சுவனப் பூஞ்சோலை போன்று செழிப்பாக இருந்த அந்தப் பகுதியே காட்டுச் செடிகளால் நிறைந்து போனது. மேலும் அவற்றில் உண்பதற்கு உகந்த தாய் இருந்தவை காட்டு மரங்களிலிருந்து கிடைத்த இலந்தைப் பழங்கள் மட்டுமே.

*(தொடரும்)*



# நூறாண்டு கால எளிமையின் அடையாளம்
# தோழர் நல்லகண்ணு

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர், விடுதலைப் போராட்ட வீரர், மக்கள் நலப் போராளி, எளிமையின் சின்னமாக வாழ்ந்த தோழர் நல்லகண்ணு அவர்கள் (1925-2026) வயது மூப்பின் காரணமாக பிப்ரவரி 25ஆம் தேதி மரணமடைந்தார். நாம் இறைவனிடமிருந்து வந்தோம். மீண்டும் இறைவனிடமே செல்கின்றோம்.

தன் 101 ஆண்டுகால வாழ்க்கையில், அரசியல் என்பது அதிகாரத்திற்காக அல்ல மக்கள் சேவைக்காக என்பதை வாழ்ந்து காட்டியவர். விவசாயிகள், தொழிலாளர்கள், ஏழை மக்களின் உரிமைக்காக இடைவிடாமல் குரல் கொடுத்தவர்.

அனைத்து சமூக மக்களுடன் நல்ல தொடர்பு வைத்திருந்தவர், மத நல்லிணக்கம் பேணியவர், எளிமை, நேர்மை, தன்னலமின்மை ஆகியவற்றின் உருவமாக வாழ்ந்தவர், தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் பெரும் தாக்கம் ஏற்படுத்தியவர்.

அவரது இறப்பு மத நல்லிணக்கம், சமூக நீதி, சமத்துவத்திற்காகப் பாடுபடும் அனைவருக்கும் பேரிழப்பாகும்.

அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், தோழர்களுக்கும் வல்ல இறைவன் அழகிய பொறுமையைத் தருவானாக என்று பிரார்த்தித்து எங்களின் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**மௌலவி முஹம்மது ஹனீபா மன்பயீ**
**மாநிலத் தலைவர்,**
**ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு & புதுச்சேரி**



I.M. **சாதிக்**

### இந்திய வெல்ஃபேர் கட்சியின்(WPI)
## தமிழ் மாநில பொறுப்புத் தலைவர் நியமனம்

இந்திய வெல்ஃபேர் கட்சியின்(WPI) தேசியத் தலைவர் டாக்டர் ரைசுத்தீன் அவர்களால் தமிழ் மாநிலத் தலைவர் K.S.அப்துல் ரஹ்மான் அப்பொறுப்பிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டு தமிழ்நாடு மாநில நிர்வாகக் குழு கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து வழக்கறிஞர் I.M.சாதிக் மாநிலப் பொறுப்புத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய வெல்ஃபேர் கட்சியின் தொடக்க கால உறுப்பினரான வழக்கறிஞர் I.M.சாதிக் கிருஷ்ணகிரியைச் சேர்ந்தவர். கட்சியின் தேசிய செயற்குழு உறுப்பினரான இவர் தமிழ்நாடு மாநிலப் பொதுச் செயலாளராகப் பணியாற்றி வந்த நிலையில் கட்சியின் தேசியத் தலைவரால் புதிய பொறுப்புத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# போர்களால் வீழும் உலகப் பொருளாதாரம்

● கப்ளிசேட்

***மூன்றாவது உலகப்போர் நடந்தால் தண்ணீருக்காகவே நடக்கும் என்று கூறப்பட்டாலும் இன்று ஆக்கிரமிப்பு, ஆயுத விற்பனை, பொருளாதார வளங் களைக் கொள்ளை அடிப்பது என்ற காரணங்களுக் காகவே போர்கள் நடத்தப் படுகின்றன. பொதுவாக எல்லாக் காலங்களிலும் வல்லாதிக்க நாடுகள் இரண்டு பிரிவுகளாகி தங்கள் ஆதரவு நாடுகளுக்கு உதவுவதாகக் கூறி அதிலிருந்து பயன்களைப் பெற்றுக் கொள்கின்றன.***

அமெரிக்கா தலைமையில் ஓர் அணியும், ரஷ்யா தலைமையில் ஓர் அணியும் இருந்து வரும் சூழலில் வல்லாதிக்கப் போட்டியில் இப்போது சீனாவும் நுழைந்திருக்கிறது. இதுபோன்று உலகில் தொடர்ந்து நடைபெறும் போர்களால் பெரும் பொருளாதார வீழ்ச்சி அல்லது பொருளாதார பெருமந்தம் என்ற பொரு ளாதார இறங்குமுக நிலைமைகள் ஏற்படுகிறது.

முதல், இரண்டாம் உலகப் போர்கள் நடந்தபோது இதனை முழுமையாக உணரமுடிந்தது. அப்போதுள்ள சூழலில் பல பொருள்களின் தட்டுப்பாடுகளும், கட்டுப்பாடில்லாத விலை உயர்வுகளும் பல நாடுகளில் பெரும் நெருக்கடிகளை உருவாக்கியது. வல்லாதிக்க நாடுகளின் பொருளாதாரச் சுரண்டல்களுக்குப் பல நாடுகள் பலியாகின்றன. அமெரிக்கா போன்ற நாடுகள் தங்களின் ஆயுதங்களை விற்க போர்களை உருவாக்குகின்றன.

போர்கள் தீவிரவாதச் செயல்களைத் தடுப்பதற்குப் பதிலாக தீவிரவாதத்தை மேலும் ஊக்குவித்து நிரந்தரப்படுத்துகிறது. வல்லாதிக்க நாடுகளின் மரண விளையாட்டான போர்கள் ஏழை, எளிய நடுத்தர மக்களின் வாழ்வியலைச் சிதைக்கிறது. போர்கள் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியைச் சிதைத்து நாடு களின் மீது கடன் சுமைகளை உருவாக்குகிறது.

பொருளாதாரத்தின் முதல் ஆய்வறிஞர் ஆதம் ஸ்மித் ‘நாடுகளின் செல்வம்’ என்ற நூலில், போரினால் ஏற்படும் பாதிப்புகளைத் துல்லியமாகப்

பட்டியலிடுகிறார். இன்றைய போர்கள் ஆயுதங்களின் நவீன வடிவங்களால் மனிதனால் வெகுதூரங்களிலுள்ள இலக்குகளையும் துல்லியமாகக் குறிவைத்துச் சிதைத்து விடும் ஆற்றல் பெற்றுள்ளன. புதிய புதிய ஆயுதங்களின் பயன்பாடுகளும் போர்களினால் ஏற்படும் அழிவுகளைத் துரிதப்படுத்துகின்றன.

ஒவ்வொரு நாடும் இன்றைய நிதித் திட்டத்தில்(Budget) மிகப்பெரிய தொகையை இராணுவத்திற்காகவே ஒதுக்குகின்றன. புதிய புதிய ஆயுதங்களை வாங்கிக் குவிக்கின்றன. ஆயுத வியாபாரம் உலகின் மிகப்பெரிய வணிகமாக மாறிவிட்டது. சிறிய நாடுகள் ஆயுத உற்பத்தியில் தலைசிறந்த நாடுகளிடம் தங்களுக்கான புதிய புதிய ஆயுதங்களைத் தேடித் தேடி வாங்குகின்றன. பல பொருளாதார அறிஞர்கள், இராணுவத்திற்கான செலவுகளைக் குறைக்க வேண்டும் என்று தொடர்ந்து கூறினாலும் நாடுகள் போருக்கும் இராணுவத்திற்கும் ஒதுக்கும் நிதிகளைக் குறைப்பதில்லை.

18, 19ஆம் நூற்றாண்டுகளில் இராணுவத்திற்கு அதிக நிதி ஒதுக்குவதைப் பல ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார அறிஞர்கள் கடுமையாக எதிர்த்தனர். முதல் உலகப் போர் முடிவுற்ற போது ஐரோப்பிய நாடுகளில் பெருமளவு பொருளாதாரச் சரிவுகள் ஏற்பட்டன. 3 கோடிக்கு மேல் போர் வீரர்கள் உயிரிழந்தனர். 1 கோடியே 30 இலட்சம் பொதுமக்கள் மாண்டு போயினர். அப்போதே பொருளாதார இழப்பு 2 இலட்சத்து 81 ஆயிரம் மில்லியன் டாலர்கள் எனக் கணக்கிடப்பட்டது. முதல் உலகப் போரில் ஈடுபட்டு 74 ஆயிரம் இந்திய வீரர்கள் உயிர் இழந்தனர். 1939ஆம் ஆண்டு தொடங்கி 1945ஆம் ஆண்டு முடிவுற்ற இரண்டாம் உலகப் போரில் இழப்பு அன்றைய அமெரிக்க டாலரில் பல இலட்சம் கோடிகளாகும். 2.5 கோடி இராணுவ வீரர்களும், 2 கோடி மக்களும் உயிரிழந்தனர்.

போர்களுக்காகச் செலவிடப்படும் நிதியை மக்களின் நன்மைகளுக்காகப் பயன்படுத்தி இருந்தால் பல கோடிக்கணக்கான மக்களின் துயரங்கள் துடைக்கப்பட்டு இருக்கும் என்று பொருளியல் அறிஞர்கள் தொடர்ந்து கூறி வந்தாலும், உலகின் அரசியல் தலைவர்கள் தங்களின் பதவிகளை நிலை நிறுத்திக்கொள்ள போரை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

உலகப் போர்களினால் ஏற்பட்ட நிதி நெருக்கடிகளைச் சமாளிக்கவே உலக வங்கி (World Bank), உலக பன்னாட்டு நிதியம்(IMF) போன்ற நிதி அமைப்புகளை 1944ஆம் ஆண்டு உருவாக்கினர். முதலாளித்துவத்தை முழுமையாக ஆதரித்த இங்கிலாந்தைச் சேர்ந்த பொருளாதார அறிஞர் கீன்சு, அமெரிக்காவின் பிரிட்டன்வுட்ஸ் நகரில் பல நாடுகள் கலந்து கொண்ட நிதி அமைப்புகளின் முதல் கூட்டத்தில் உரையாற்றியபோது, மூன்றாம் உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்காக இந்த நிதியங்கள் தாராளமாக நிதியுதவி வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினார். போர் செய்யும் நாடுகள்(Warfare Governments) தங்கள் நிலைகளை மாற்றி, மக்கள் நலனுக்காக(Welfare Governments) செயல்படவேண்டும் என்று கீன்சு குறிப்பிட்டார். ஆனால் பேராசை கொண்ட நாடுகள் போராசையை விட்டு விடவில்லை.



1950க்குப் பிறகு போர்கள் மீண்டும் வெடித்தன. கொரியப்போர், வியட்நாம் போர், இந்தியா - பாகிஸ்தான் போர், ஈரான் - ஈராக் போர், ஆப்கன் போர் , வளைகுடாப் போர், இஸ்ரேல் - ஃபலஸ்தீனப் போர், ரஷ்ய - உக்ரைன் போர் எனப் போர்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இன்று ஈரான் - இஸ்ரேல் - அமெரிக்கப் போர் கடுமையாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

போர்கள் புதிய புதிய தொழில் நுட்பங் களைப் பயன்படுத்தி மக்களை, பொருளா தாரத்தை, இயற்கை வளங்களை, சுற்றுச் சூழல்களை அழித்து பெரும் சீர்கேடுகளை உருவாக்கி வருகின்றன. இஸ்ரேல் ஃபலஸ்தீன போரில் பயன்படுத்திய போர்க் கருவி களினால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் கேடு, முதல், இரண்டாம் உலகப் போரில் ஏற்பட்ட சுற்றுச் சூழல் கேடுகளை விட மிக அதிகமானது என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

இன்றைக்கு பலநாடுகளில் மக்களின் பொது நிதி போர் நிதியாக (Public finance has become war finance) மாறும் அளவிற்கு போர்ச் சூழல்கள் நிலவுகிறது. அமெரிக்காவின் ஒட்டுமொத்த வருமானத்தை விட அதன் கடன் 121.28 விழுக் காடு அதிகரித்துள்ளது. இதே நிலை பல ஐரோப் பிய நாடுகளிலும் நிலவு கிறது. போர்கள் தவிர்க் கப்படவேண்டும் என்பதற் காகவே சுவீடன் நாட்டின் தலைநகரான ஸ்டாக் ஹோமில் செயல்பட்டுவரும் அமைதிக்கான பன்னாட்டு ஆய்வு நிறுவனம், 1966ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. நோபல் பரிசு பெற்ற புகழ் மிக்க பொருளாதார அறிஞரான குன்னர் மிர்தல் இந்த அமைப்பின் தலைவராக 1967 முதல் 1973 வரை இருந் தார். அமெரிக்கா வியட்நாம் மீது போர் தொடுத்தபோது அதைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டார்.

> போர்களின் பொருளாதார இழப்புகள் போரில் ஈடுபட்டுள்ள நாடுகளை மட்டும் பாதிப்பதில்லை. உலகளாவிய வர்த்தகம், நிதி அமைப்புகள் ஒன்றோடு ஒன்று இணைந் திருப்பதால் போர்கள் உலகப் பொருளாதாரத்தில் பரவலான விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

உலகில் மத அடிப்படையில் பிளவுகள் தவிர்க்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் தான் 1933ஆம் ஆண்டு முதன்முதலாக மானுட அறிக்கை வெளியிடப்பட்டது. 1973 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இரண்டாம் மானுட அறிக்கையில் மிர்தலும் கையொப்ப மிட்டார்.

போர்களின் மறைமுகப் பொருளாதாரச் செலவுகள் நேரடிச் செலவுகளை விட மிக அதிகமாக இருக்கும். போர்கள் வர்த்தகத் தையும், முதலீட்டையும் சீர்குலைத்து நீண்ட காலப் பொருளாதார விளைவுகளை ஏற்படுத்துகின்றன. போர் நிச்சயமற்ற தன் மையை உருவாக்குகிறது. வணிக நம்பிக்கை யைக் குறைக்கிறது. முதலீட்டைத் தடுக்கிறது. உணவு, எரிசக்தி போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை உயர்த்துகிறது. இது பணவீக்கத்திற்கு வழிவகுக்கிறது.

போர்களின் பொருளாதார இழப்புகள் போரில் ஈடுபட்டுள்ள நாடுகளை மட்டும் பாதிப்பதில்லை. உலகளாவிய வர்த்தகம், நிதி அமைப்புகள் ஒன்றோடு ஒன்று இணைந் திருப்பதால் போர்கள் உலகப் பொரு ளாதாரத்தில் பரவலான விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

தனியார் மயமாக்கல், உலக மயமாக்கல் என்ற திட்டம் 1991ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1995 ஆம் ஆண்டு உலக வர்த்தக அமைப்பு(World trade organization) உலக அளவிலான வர்த்தகத் தடை கள், வரித்தடைகளை நீக்கி உலக அளவிலான ஒரு சந்தையை உருவாக்கத் தொடங்கப்பட்டது. அதில் போர்ச் செலவுகள் பற்றிய எந்தக் கொள்கையும் குறிப்பிடப்படவில்லை. ஆகவே வணிகச் சந்தையோடு ஆயுதச் சந்தையும் பெருகியது.

தனியார் ஆயுதச் சந்தை பல இலட்சம் கோடிகளைக் கடந்து வளர்ந்து வருகிறது. இதற்கு உலக அளவில் எந்தத் தடையும்

விதிக்கப்படவில்லை. 2022இல் தொடங்கிய ரஷ்யா உக்ரைன் போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்தியா பாகிஸ்தான் போரைத் தானே நிறுத்தியதாக 35 முறை சொன்ன அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் இன்று ஈரான் போரை இஸ்ரேலோடு சேர்ந்து முன் நின்று நடத்துகிறார். ஈராக் நாட்டின் மீது அமெரிக்கா போர் தொடுத்த போது ஒரே ஆண்டிற்குள் அமெரிக்கா செய்த செலவு 145 இலட்சம் கோடி என்பது வியப்பான செய்தியாகும்.

உலகின் மிகப்பெரிய மிக அதிக விமானங்களைக் கையாளுகிற துபாய் சர்வதேச விமான நிலையம் இயக்கத்தை நிறுத்திய போது, பல்லாயிரம் கோடி டாலர்கள் இழப்பு ஏற்பட்டது. இதுபோல் தொடர்ந்து முடக்கங்கள் ஏற்பட்டால் போக்குவரத்து, ஏற்றுமதி, இறக்குமதி என வணிகம் சார்ந்த அத்தனை நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டு மிகப்பெரிய பொருளாதார வீழ்ச்சியை ஏற்படுத்தும்.

உலகமே வறுமை, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளால் சீரழிந்து கொண்டிருக்கும் போது போர்கள் மிகப்பெரிய பொருளாதாரச் சீரழிவை ஏற்படுத்தும் என்று பல பொருளாதார அறிஞர்கள் தொடர்ந்து சுட்டிக்காட்டி வந்தாலும், வல்லாதிக்க நாடுகள் தங்களின் சுயலாபங்களுக்காகப் போரை விடாமல் உலகின் பல பகுதிகளில் நடத்திக் கொண்டே இருக்கின்றன.

பொருளாதார அறிஞர்களான ஜோஸப் ஸ்டிக்லிசும், லிண்டாபிலிம்சும் போர் என்ற ஒரு நூலை எழுதி அதில் அமெரிக்க அரசிற்கு 18 பரிந்துரைகளை வழங்கியுள்ளனர். அதில் தனியார் துறை ஆயுத உற்பத்தித் தடுப்பு மிக அவசியம் என்கின்றனர். திருட்டுத் தனமான ஆயுதங்கள் போர் நடைபெறும் பகுதிகளில் கள்ளச்சந்தையில் விற்கப்படுகின்றன. இவை மனித குலத்திற்குப் பேராபத்து என்று பல அமைப்புகள் சுட்டிக்காட்டுகின்றன. ஸ்டாக்ஹோம் அமைதிக்கான பன்னாட்டு நிறுவனம் ஆயுத உற்பத்திகளையும் அதன் ஏற்றுமதி, இறக்குமதிகளையும் தரவுகளாக வெளியிட்டு வருகின்றது. 2024ஆம் ஆண்டு அறிக்கையின்படி ஆயுத இறக்குமதியில் உக்ரைன் முதலிடத்திலும் இந்தியா இரண்டாவது இடத்திலும் உள்ளன என்று தெரிவித்துள்ளது.

ஆயுதங்களை உற்பத்தி செய்யும் தனியார் நிறுவனங்கள், அரசியல் வாதிகள் இராணுவ அதிகாரிகளுக்கு ஏராளமான பணங்களை லஞ்சமாகக் கொடுத்து ஆயுதங்களின் விலையைப் பன்மடங்காக உயர்த்தி கொள்ளை அடிக்கின்றன. இந்தியாவிலும் போபர்ஸ், ரஃபேல் ஊழல்கள் எனச் செய்திகள் வெளியானாலும் அதிகார பலங்களால் அவை மறைக்கப்பட்டு ஒன்றுமில்லாமல் ஆக்கப்பட்டு விடுகின்றன.

போர் எரிபொருள் விலையை உயர்த்தும். அரசு நிதியில் பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தும். மக்களின் வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டிய நிதிகள் ஆயுதங்கள் வாங்க மடைமாற்றப்படுகின்றன. போரில் உயிரிழந்த இராணுவ வீரர்கள், ஊனமான இராணுவ வீரர்கள் என அவர்களின் குடும்பங்களுக்குத் தொடர்ந்து செலவிட வேண்டிய நிர்பந்தம் அரசுக்கு ஏற்படுகிறது. இதுபோன்று போர்கள் பெருமளவில் பொருளாதாரச் சீரழிவுகளை ஏற்படுத்துகிறது.

குறிப்பாக தற்போது நடைபெற்று வரும் போரால் வளைகுடா நாடுகளின் பொருளாதாரம் பெருமளவு பாதிப்படையும். வளைகுடா நாடுகள் தங்கள் வான் பரப்பை மூடிவிட்டதால் வான் போக்குவரத்து முற்றிலும் முடங்கிப் போனது. உலகின் மிகப்பெரிய மிக அதிக விமானங்களைக் கையாளுகிற துபாய் சர்வதேச விமான நிலையம் இயக்கத்தை நிறுத்திய போது, பல்லாயிரம் கோடி டாலர்கள் இழப்பு ஏற்பட்டது. இதுபோல் தொடர்ந்து முடக்கங்கள் ஏற்பட்டால் போக்குவரத்து, ஏற்றுமதி, இறக்குமதி என வணிகம் சார்ந்த அத்தனை நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டு மிகப்பெரிய பொருளாதார வீழ்ச்சியை ஏற்படுத்தும்.

ஹோர்முஸ் நீரிணையைப் பயன்படுத்த முடியாத சூழலை ஈரான் உருவாக்கி உள்ளது. அங்கு ஏறக்குறைய 700 கப்பல்கள் காத்துக் கிடப்பதாகக் கூறப்படுகிறது. உலகின் ஏறக் குறைய 30% பெட்ரோல், டீசல், எரிவாயு என அதனை எடுத்துச் செல்லும் கப்பல்கள் தடுக்கப்படுவதால் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும். எரிபொருள் தட்டுப்பாட்டால் அதன் விலைகள் ஏறும். குறிப்பாக இந்தியா, கிழக்கு ஆசிய நாடுகளுக்கு எரிபொருட்களை எடுத்து வரும் கப்பல்களே தடுக்கப்பட்டு இருக்கின்றன. இந்தியா தனது எரிபொருள் தேவையில் 85-90% இறக்குமதி செய்கிறது. இதில் ஒரு பெட்ரோல் பேரலின் விலை 10 டாலர் அதிகரித்தால் அது இந்திய GDP வளர்ச்சியை 0.3% வரை குறைக்கும் என்று கூறப்படுகிறது.

இந்தியாவின் எரிபொருள் தேவையில் 40-50% வரை ஹோர்முஸ் நீரிணை வழி யாகவே வருவதால் அது தொடர்ந்து முடக்கப்பட்டால் இந்தியா மிகப்பெரிய அளவில் பாதிக்கப்படும். எரிபொருள் விலை அதிகரித்தால் அது தொடர்ச்சியாகப் பல பொருட்களின் விலை உயர்விற்கு வழி வகுக்கும். காய்கறி, அத்தியாவசியப் பொருட் களின் விலை உயரும். நடுத்தர மக்களின் வாங்கும் திறன் குறையும். எரிபொருள் இறக்குமதிக்கு அதிக டாலர் தேவைப் படுவதால் இந்திய ரூபாயின் மதிப்பு சரியும். போர் முடிந்து அமைதி ஏற்படும் வரை ஏற்றுமதி, இறக்குமதி என அந்தப் பகுதி களில் எந்த வணிகமும் செய்ய முடியாது. செங்கடல், வளைகுடாப் பகுதிகளில் தொடர்ந்து பதற்றம் நிலவினால் இந்தியக் கப்பல்கள் மாற்று வழியில் இயக்க அதன் போக்குவரத்துச் செலவு 10-20% வரை அதிகரிக்கும்.

மத்திய கிழக்கில் 90 இலட்சம் இந்தி யர்கள் வாழ்கின்றனர். தொடர்ந்து பதற்றம் நிலவினால் அவர்களின் பணிச்சூழல் பாதிக் கப்படும். அங்கிருந்து வரும் வெளிநாட்டு வரவுகள் குறையும். இது அன்னியச் செலா வணி கையிருப்பைப் பாதிக்கும். இந்த மோதல்களும் போரும் நீடித்தால் இந்தியப் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப் படும். மோதல்களைத் தடுப்பதற்கும் தீர்ப் பதற்கும் பன்னாட்டுச் சமூகம் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

பொதுவாக எங்கு போர் நடந்தாலும் போரினால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு மனிதாபிமான உதவிகளையும் பொருளாதார உதவிகளையும் வழங்க வேண்டியது அவசியம். போரினால் அழிக்கப்பட்ட உள் கட்டமைப்பைப் புனரமைப்பதற்கும், இடம் பெயர்ந்த மக்களை மீண்டும் குடியமர்த்து வதற்கும், பொருளாதார வளர்ச்சியை மேம் படுத்துவதற்கும் நீண்ட கால முயற்சிகள் தேவைப்படுகின்றன.

அண்மை ஆண்டுகளில் நடந்த போர்கள், மோதல்கள் உலகளாவிய பொருளாதாரத்தில் ஆழமான காயங்களை ஏற்படுத்தியுள்ளன. உக்ரைன், ஃபலஸ்தீன், இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார இழப்புகள் மீட்புக்குப் பல ஆண்டுகள் தேவைப்படலாம். இந்த நெருக் கடிகளைத் தணிக்க பன்னாட்டு ஒத்துழைப்பு, மனிதாபிமான உதவிகள், அமைதி முயற்சி கள் அவசியம். போரின் பாதிப்புகளைக் குறைக்க உலக நாடுகள் பொருளாதார மறு கட்டமைப்பு, மனித உரிமைகளை மையப் படுத்திய அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

உலகின் பெரும்பாலான நாடுகளில் அணு ஆயுதம் குவிந்து கிடக்கிறது. இனியும் இழப்பதற்கு ஒன்றுமில்லை என்ற நிலையில் நாடுகள் அணு ஆயுதம் பயன்படுத்த நினைத் தால் அது மனித குலத்திற்கே பேரபாயத்தை ஏற்படுத்திவிடும். போரில்லாத உலகை உருவாக்க வேண்டியது மனித குலத்தை நேசிக்கும் ஒவ்வொருவரின் கடமையாகும். வல்லாதிக்க நாடுகள் தங்கள் ஆதிக்க, பொருளாதாரச் சுரண்டல் கொள்கைகளை கைவிட்டு போரில்லாத உருவாக்க முன்வர வேண்டும்.

அல்லாஹ்வின்
விருந்தாளிகளின்
சேவையில்
31வது
வருடம்

IATA

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

# அல் அமானத் ஹஜ் சர்வீஸ்

(இந்தியா, சவூதி அரசுகளின் அங்கீகாரம் பெற்றது)

# அனைவருக்கும் ஈகைத் திருநாள் வாழ்த்துகள்

**நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:**
**ரமளானில் உம்ரா செய்வது**
**என்னுடன் ஹஜ் செய்வதற்குச் சமம்.**
(நூல் : ஸஹீஹ் புகாரி)

முழு விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்,

TRUST WORTHY

**அல் அமானத் ஹஜ் சர்வீஸ் (இந்தியா) பி.லிட்.,**
B3, Bushra House, 1st Floor, Old No. 46, New No. 6, Nowroji Road,
Chetpet, Chennai - 600 031. Ph : 044-4860 5012 / 3, 28594441 / 2 / 3
Email : info@alamanathhajservice.com
www.alamanathhajservcie.com

**தொடர்பு கொள்வீர்**
**சென்னை 044-28594441 / 2 / 3**
**95516 622 31**
**91 98410 786 36**

# வளைகுடாவில் நடைபெற்று வரும் போர் குறித்து

## இஸ்லாமிய உம்மத்தின் அறிஞர்களின் கூட்டறிக்கை

*வளைகுடாவில் தற்போது நிலவி வரும் ஆபத்தான பதற்றமும் கடும் மோதலும், அரபு நாடுகளின் தலைநகரங்கள் மீது குண்டுவீச்சு நடத்தும் அளவிற்கு உச்ச மடைந்துள்ள நிலையில் இந்த உம்மத்தின் அறிஞர்கள், இஸ்லாமிய அழைப்பாளர் களான நாங்கள், உண்மையை எடுத்துரைக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் பின்வருவனவற்றை அறிவிக்கிறோம்:*

### 1. இந்தப் போரின் உண்மையும் அதன் நோக்கங்களும்

அமெரிக்காவும் அதன் சியோனிஸ கூட் டாளிகளும் இந்தப் போரை நடத்துவதற்கு அநீதியைத் தவிர வேறு எந்த நோக்கமும் இல்லை. ஈரான் அவர்களுக்கு எந்தத் தீங்கும் செய்யவில்லை, அவர்களைத் தாக்கவுமில்லை. மாறாக, அவர்கள் செய்வது அடக்குமுறையும் ஆக்கிரமிப்புமே ஆகும். ஆப்கானிஸ்தான், ஈராக் பிற நாடுகளை ஆக்கிரமித்தபோதும் இதையே செய்தனர். இவை அனைத்தும் எல்லா இறைவேதங்களாலும் தடை செய்யப்பட்ட அநீ தியும் கொடுமையுமே.

இந்தப் போர் உண்மையில் ஒரு சிலுவைப் போர் சியோனிஸ்ட் போராகும். இதன் இறுதி விளைவுகள் இஸ்லாத்தின் இதயத் தையும், முஸ்லிம் உம்மத்தின் மையத்தையும் குறிவைக்கின்றன. அங்கேதான் இஸ்லாமியப் புனிதங்கள், உம்மத்தின் வளங்கள், செல் வங்கள், மக்கள் தொகை வலிமை, வரலாறு, நாகரிக ஆழம் ஆகியவை அமைந்துள்ளன.

இது ஈரானுக்கும் அமெரிக்கா, ஆக்கிர மிப்பு அரசுக்கும் இடையிலான தற்காலிக அரசியல் கருத்து வேறுபாட்டால் எழுந்த ஒரு குறுகிய மோதல் அல்ல. மாறாக, இது நீண்ட மோதல் வரலாற்றின் ஒரு கண்ணியே! தனித்த நிகழ்வோ தனிப்பட்ட சம்பவமோ அல்ல.

### 2. இத்தகைய நிகழ்வுகளின் பின்னால் உள்ள இறைஞானம்

ஓர் இறைநம்பிக்கையாளன் உறுதியாக நம்புவது: ஒவ்வொரு நிகழ்வின் பின்னாலும் ஒவ்வொரு விவகாரத்தின் பின்னாலும் இறை ஞானம் இருக்கிறது என்பதே.

முஸ்லிம்கள் இவற்றைச் சரியாகக் கையாண்டு, இவற்றின் மீதான தங்கள் கட மையை நிறைவேற்றினால், அல்லாஹ் இந்த நிகழ்வுகள் மூலம் மகத்தான காரியங்களையும் புகழத்தக்க முடிவுகளையும் தயாரித்துக் கொண்டிருக்கலாம்: ‘ஒன்றை நீங்கள் வெறுக் கலாம், ஆனால் அது உங்களுக்கு நன்மையாக இருக்கலாம்’

எனினும் இறைவிதி, மறைவான அறிவு, எல்லா விவகாரங்களின் பின்னாலும் உள்ள அல்லாஹ்வின் ஞானம் ஆகியவற்றை இறை நம்பிக்கையாளர்கள் உணர்ந்திருப்பது, மார்க் கக் கடமையை நிறைவேற்றுவதற்கு முரணா னதல்ல. நிகழ்வுகளைப் புரிந்துகொள்வதும், யதார்த்தங்களை அறிந்திருப்பதும், அவற்றின் வெளிச்சத்தில் கடமையானதைச் செய்வதும் அவசியமே.

### 3. ஆக்கிரமிப்பைக் கண்டனம் செய்தலும் நிராகரித்தலும்

அமெரிக்காவும் அதன் கூட்டாளியான சியோனிஸ அமைப்பும் நகரங்கள், தளங்கள், இராணுவ, குடிமக்கள் இலக்குகள் மீது நடத்திய குண்டுவீச்சு ஈரானில் தொடங்கி, எங்கே முடியும் என்று நமக்குத் தெரியாது. இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்களின் மீதும் அவர்களின் கொள்கையை வகைப்படுத்தும் ஆக்கிரமிப்பு, கொடுமையின் மிகத் தெளி வான வடிவங்களில் ஒன்றாகும்.

எல்லா விதமான வேதச் சட்டங்களையும், மனித நெறிமுறைகளையும், சர்வதேசச் சட்டங்களையும், மனித மரபுகளையும் ஒதுக்கித் தள்ளும் கொள்கை இது. இந்த நிலையில் குறைந்தபட்சம் செய்ய வேண்டியது, இந்த ஆக்கிரமிப்பைக் கண்டனம் செய்வதும் இந்தக் குற்றத்தை நிராகரிப்பதுமே.

ஈரானிய ஆட்சியின் தன்மையையும், அஹ்லுஸ் ஸுன்னா முஸ்லிம் நிலங்களில் அது செய்ததையும் நாங்கள் அறிந்திருக்கும் அதே வேளையில், சிலுவைப்போர் சியோனிஸ்ட் கூட்டணியால் ஈரானைக் குறி வைப்பது ஒரு முஸ்லிம் நாட்டின் மீதான வெளிநாட்டுத் தாக்குதல் என்பதையும் நாங்கள் காண்கிறோம். அதை ஆளும் அமைப்பைப் பொருட்படுத்தாமல், அதன் புனிதமும் முக்கியத்துவமும் மதிக்கப்பட வேண்டும்.

ஈரானுக்கு எதிரான சிலுவைப்போர் சியோனிஸ்ட் ஆக்கிரமிப்பை நாங்கள் நிராகரித்துக் கண்டிப்பது போலவே, ஈரானால் அரபு வளைகுடா நாடுகளைக் குறி வைப்பதையும் கடுமையாக நிராகரிக்கிறோம். ஈரான் தனது தாக்குதல்களை ஆக்கிரமிப்பு அரசின் ஆழத்தை நோக்கி செலுத்தியிருந்தால், அது ஆக்கிரமிப்புக்கான நியாயமான பதிலாகவும், முஃமின்களின் இதயங்களுக்கு ஆறுதலாகவும் அமைந்திருக்கும்.

அமெரிக்கா வேண்டுமென்றே வளைகுடா நாடுகளில் இராணுவத் தளங்களை அமைக்கிறது. ஈரானைத் தூண்டி அந்தத் தளங்களைத் தாக்க வைப்பதற்காக, அதனால் அந்த நாடுகள் ஈரானுக்குப் பதிலடி கொடுத்து, வளைகுடா நாடுகளிடையே போரைத் தூண்டி, எதிரிகளின் நலன்களுக்குச் சேவை செய்யும் வகையில் வெளிநாட்டுப் படைகள் இருப்பதன் ஆபத்துகளில் இதுவும் ஒன்று. அந்தப் படைகள் முதன்முதலில் முஸ்லிம் நிலங்களுக்குள் நுழைந்தபோதே உம்மத்தின் அறிஞர்களும் அழைப்பாளர்களும் இது குறித்து எச்சரித்திருந்தனர்.

### 4. இந்தப் போரில் பங்கேற்பது தடை

இந்த அநீதியான போருக்கு எந்த வடிவத்திலும் எந்த மட்டத்திலும் ஆதரவு அல்லது உதவி வழங்குவது, போரில் பங்கேற்பதாகவும், இஸ்லாத்திற்கும் அதன் மக்களுக்கும் எதிரான அதன் குற்றவியல் நோக்கங்களை அடைவதாகவும் கருதப்படும். வளைகுடா நாடுகளைப் பாதுகாக்கும் சாக்கில் அமைக்கப்பட்ட மேற்கத்திய இராணுவத் தளங்கள், இன்று அந்நாடுகளின் தலைநகரங்கள் மீது குண்டு வீசப்படுவதற்கான காரணமாகவே இருக்கின்றன

### 5. இக்காலத்தின் கடமை

‘முஸ்லிம் நாடுகளில் நடக்கும் இந்தக் கொடூரமான போர்கள் இஸ்லாத்திற்காக நடப்பவை அல்ல. இவை வெவ்வேறு சக்திகள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்வதற்காகப் போடும் சண்டைகளே. உண்மையான இஸ்லாமியத் தீர்வு ஒன்று இல்லாததுதான் இதற்குக் காரணம். இது மிகவும் வருத்தமான நிலை. இந்தச் சூழலில் கல்வியும் செயல்திறனும் உள்ளவர்கள், மார்க்கத்தைக் காக்க வேண்டும் என்ற தீராத ஆர்வம் கொண்டவர்கள், இஸ்லாத்தின் அழைப்பைத் தோளில் சுமப்பவர்கள், மக்கள் மத்தியில் செல்வாக்கும் தாக்கமும் உடையவர்கள் இவர்கள் அனைவரும் இணைந்து பின்வருவனவற்றை நோக்கிப் பாடுபட வேண்டும்:

### உம்மத் தனது மார்க்கத்திற்குத் திரும்புதல்

மார்க்கத்தை நிலைநாட்டுதல், ஷரீஆவை நடைமுறைப்படுத்துதல், வலிமையின் வழிகளைக் கைக்கொள்ளுதல். இதற்கான பாதை ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் அவசியமாகக் கோருகிறது; பிளவு, மோதலின் காரணங்களைக் கைவிட வேண்டும். இந்தப் பொறுப்பு உம்மத்தின் தலைவர்களையும் குறிப்பாகக் கட்டுப்படுத்துகிறது.

### அல்லாஹ்வின் பக்கம் திரும்புதல்

பாவமன்னிப்பு (தௌபா) இஸ்திக்ஃபார், திக்ர், துஆ ஆகியவற்றின் மூலம்

அல்லாஹ்வின் பக்கம் திரும்ப வேண்டிய அவசரத் தேவை உள்ளது. கஷ்டங்கள் நீங்கவும், பேரழிவுகள் அகலவும், கவலைகள் தீரவும், துன்பங்கள் விலகவும். குர்ஆனையும் சுன்னாவையும் உறுதியாகப் பற்றிக்கொண்டு, சத்தியத்தின் மீது பொறுமையாக இருந்து, மார்க்கத்தின் மீது உறுதியாக நிலைத்திருக்க வேண்டும்.

'யா அல்லாஹ், இந்த உம்மத்திற்கு நேர் வழியின் காரியத்தைக் கொண்டு வா. முஸ்லிம் களின் நிலங்களைப் பாதுகாப்பாயாக!'

**அமெரிக்காவும் அதன் சியோனிஸ கூட்டாளிகளும் இந்தப் போரை நடத்துவதற்கு அநீதியைத் தவிர வேறு எந்த நோக்கமும் இல்லை. ஈரான் அவர்களுக்கு எந்தத் தீங்கும் செய்யவில்லை, அவர்களைத் தாக்கவுமில்லை. மாறாக அவர்கள் செய்வது அடக்குமுறையும் ஆக்கிரமிப்புமே ஆகும்.**

***கையொப்பமிட்டவர்கள்:***

- ஷெய்க் ஸாதிக் அல் கரியானி - லிபியா வின் பெரும் முஃப்தி
- ஷெய்க் முஹம்மத் அல் ஹஸன் அல் ததவ் - அறிஞர் உருவாக்க மையத் தலைவர், மொரிட்டானியா
- ஷெய்க் அல் ஹஸன் அல் கத்தானி - மக்ரிப் அறிஞர் சங்கத் தலைவர்
- ஷெய்க் மஹ்ஃபூழ் ஔலத் அல் வாலித் - இஸ்லாமிய மன்றத் தலைவர்
- ஷெய்க் முஹம்மத் அல் ஸகீர் - ஹய்அத் அல் அன்ஸார் தலைவர்
- டாக்டர் ஜமால் அப்துல் ஸத்தார் - சுன்னி அறிஞர் கூட்டமைப்புத் தலைவர்
- ஷெய்க் சாமி அல் சாஅதி - லிபிய ஃபத்வா ஆணையத்தின் பொதுச் செயலாளர்
- அப்துல் ஹய் யூசுஃப் - அன்ஸாருந் நபி அகாடமியின் முதல்வர்
- ஜமால் அல் அஹ்மர் - பல்கலைக்கழகப் பேராசிரியர், அல்ஜீரியா
- ஷெய்க் முஹம்மத் சித்யா பின் அஜ்தூத் - முஸ்லிம் அறிஞர் சங்கத்தின் துணைத் தலைவர்
- ஷெய்க் புர்ஹான் சயீத் - எரித்திரிய அறிஞர் சங்கத் தலைவர்
- ஷெய்க் பெல்கீர் அல் இத்ரீசி - பேராசிரியர், ஓரான் பல்கலைக்கழகம்
- பஷீர் இஸ்ஸாம் அல் மர்ராகிஷி - பல்கலைக்கழகப் பேராசிரியர், மொராக்கோ
- ஷெய்க் அப்துல்லா பின் அமீன் - மொரிட்டானிய இஸ்லாமிய மன்றத்தின் பொதுச் செயலாளர்
- ஷெய்க் அஹ்மத் அல் ஷின்கீதி - மக்ரிப் அறிஞர் சங்கத்தின் உதவிப் பொதுச் செயலாளர்
- ஷெய்க் சுலைமான் அல் அஹ்மர் - பல்கலைக்கழகப் பேராசிரியர், அல்ஜீரியா
- ஷெய்க் பரஜ் கிந்தி - லிபிய இஸ்லாமிய அழைப்பாளர்
- ஷெய்க் ஹுசைன் அப்துல் ஆல் - உம்மா வாஹிதா அமைப்புத் தலைவர்
- டாக்டர் ஹாதிம் அப்துல் அழீம் - இஸ்லாமிய சட்டவியல் பேராசிரியர்
- டாக்டர் உமர் பம்பா - ஆப்பிரிக்க அறிஞர் ஒன்றியத்தின் நிர்வாக இயக்குநர்
- ஷரீஃப் ஹம்ஸா அல் கத்தானி - மொராக்கிய அறிஞர்
- சஅத் ரஸீகா - இமாம், விரிவுரையாளர், அமெரிக்கா
- டாக்டர் மஹ்மூத் சயீத் அல் ஷஜ்ராவி - FAZ கல்வி அறக்கட்டளைத் தலைவர்
- ஷெய்க் வஜீஹ் சஅத் ஹஸன் - சர்வதேச முஸ்லிம் அறிஞர் ஒன்றிய உறுப்பினர் (இத்தாலி)
- டாக்டர் ஃபஹ்மி சலீம் - முஸ்லிம் அறிஞர் ஒன்றிய உறுப்பினர் (இந்தோனேசியா)
- அஹ்மத் அல்ஹஸன் - ஓமான் சுல்தானகம்

• ஜரினா ஜமால்

வீடு வரும் வரை தங்கச்சியைப் பற்றி மருமகனிடம் சொல்லிக்கொண்டே வந்தாள் பீவியம்மா. 'அவ அப்படித்தான் வாப்பா! நீங்க அதப்பத்தி தப்பா நெனச்சிக்காதீங்க. அவ ஆசப்பட்டது நெசந்தான். ஆனா எங்க யாருக்கும் விருப்பம் கிடையாது'

சல்மான் பதில் ஒன்றும் சொல்லவில்லை. அமைதியாக வந்தான். பதில் சொல்லாததே பீவியம்மாவுக்குப் பயமாக இருந்தது. இந்த சித்திக்கு யாரிடம் என்ன பேசணும்னு தெரியலையே! தன் மகனுக்குச் சாலிஹாவைக் கேட்டது நிஜம். ஆனால் விதியில் சல்மானை அல்லாஹ் எழுதி விட்டான். தங்கையிடம் சம்பந்தம் செய்ய வீட்டில் யாருக்குமே விருப்பம் கிடையாது.

அதற்காக இப்படியா, புதுப் பொண்ணு மாப்பிள்ளையைக் கூப்பிட்டு விட்டு, வலம் இடம் தெரியாமப் பேசுவாங்க. வந்த மருமகன் என்ன நினைத்துக் கொள்வார் என்ற எண்ணம் வேண்டாமா?

இரவு சாலிஹாவிடம் கேட்டான். 'சாலிஹா! என்னை உனக்குக் கட்டாயமாகக் கட்டி வைக்கலியே! என்கிட்ட உனக்கு எந்தக் குறையும் இல்லையே?'

அமைதியாக இருந்த சாலிஹாவிடம் மீண்டும் கேட்டான். 'அப்படி ஒண்ணும் இல்லைங்க. சாச்சிமாவுக்குத்தான் குறை. எங்க மனசுல அப்படி எந்த எண்ணமும் இல்லைங்க! அவங்க மகன்களை அண்ணன்களாகத்தான் நினைச்சோம்'

அவளைச் சேர்த்திழுத்து அணைத்துக் கொண்டான்.

'சாலிஹா! நீ எனக்குக் கிடைத்த ஓர் அருட்கொடை. என் வாழ்வில் எத்தனை பெண்கள் வந்தார்கள். எல்லாமே தட்டிப்போனது. வாராது வந்த மாமணி போல் அல்லாஹ் உன்னை எனக்கு அளித்துள்ளான். இறுதிவரை நாம் இப்படியே இருக்க வேண்டும்'

இப்போது சாலிஹா பழைய நினைவுகளிலிருந்து மீண்டாள். என்றோ எழுதிய கவிதை நினைவில் வந்தது.

கண்ணைக் கட்டி
காட்டில் விட்டது போல்
தவிக்கிறேன்
நீ என்னுடன் இல்லாத
தருணங்களில்

செவிகள் இரண்டும்
செயலற்றதைப் போல்
உணர்கிறேன்
உன் கொஞ்சல் மொழி கேக்காத
தருணங்களில்

விழிகள் பார்வையற்றது
போல் பதறுகிறேன்
உன் அழகு முகம் காணாத
தருணங்களில்

பேச நினைத்ததை
மறந்தது போல்
திணறுகிறேன்
நீ என்னுடன் பேசாத
தருணங்களில்

என்னுள் இத்தனை இம்சையுற்று
இன்பம் தந்து
என்னைக் கொல்லாமல் கொன்று
சென்றுவிட்டாய்

'சாலிஹாமா! ஏய் சாலிஹா!' திடுக்கிட்டுத் திரும்பினாள் சாலிஹா

'என்ன சித்திமா?'

'எந்த உலகத்தில் இருக்க? கூப்புடக் கூப்புடக் காதுல விழலியா.. வீட்டுக்குப் போகும் போது எங்கூட வாம்மா! ஒரு வாரம் தங்கி வரலாம்'

ஒரு வாரமா? சாலிஹா திகைத்தாள். ஒரு நாள் கழிவது ஒரு யுகமாக அல்லவா இருக்கும்.

**அக்கரைப் பச்சை 34**

‘நான் உன் தகப்பனிடம் உன்னைய எனக்குத் தான்னு கேட்டேன். பொம் பளப் புள்ள பொறந்தா தாரேன்னாங்க மச்சான். ஆமினாக்கும், பாதுஷாக்கும் பொறவு நீ மூணாவதா பொறந்த..! மச்சான் வாக்குக் கொடுத்த மாதிரி இந்தப் புள்ளய எனக்குக் கொடுத்துருங்க! நான் நல்லா வளப்பேன்னேன். வாக்கு மாறிட்டாங்க மச்சான். மூணாவது பொண்ணு, முத்த மெல்லாம் பொன்னு. நா தர மாட்டேன்னுட் டாங்க! ஆசைக்கு உன்னைக் கூட்டிப் போவேன். பெரியவனுக்கு உன்னை எடுத் திருந்தால் நீ இப்படி நிப்பியா என் தங்கமே!’

சாச்சி ஒருபாடு அழுதாள். பீவியம் மாவும் சேர்ந்து கண்ணைக் கசக்கினாள்.

‘சரி விடு! அன்னெழுதுன எழுத்தை அழித்தெழுத முடியுமா?’ என்று தங்கைக்கு ஆறுதல் கூறினாள்.

சாலிஹா, சாச்சியைப் பெருமையாக நினைத்தாள். நல்ல வேளை என் மகனுக் குக் கட்டியிருந்தால் என் மகன் போய்ச் சேர்ந்திருப்பானே என்று சொல்லாமல் மாற்றிச் சொன்ன விதம் பிடித்திருந்தது.

‘இப்போ வரலை சித்திமா, ஊருக்கெல் லாம் போய்ட்டு வந்த பிறகு வருகிறேன்’

‘ஊருக்கு யாரோட போறமா?’

‘யாரும் ஆள் போனால் போக வேண் டும். நான் வந்த சாக்கில் ரஷிதா போய் வந்துவிட்டாள். அம்மா நன்றாக நடமாடிக் கொண்டிருந்தால், நானும் அவளோடு போய் வந்திருப்பேன்’

‘தனியா போயிராதாளம்மா! நான் வாரேன். நாலஞ்சி மைய்யத்து வீடு, துஷ்டி விசாரிக்கணும். கலியாணத்துக்குக் கூப்பிட்டு வந்தவங்களைப் போயிப் பார்த்து கவர் குடுத்து வரணும். வாச வெளிக்குப் போக முடியாம வீட்டில் இருக்கும் வயசாளிங்க, நோயாளிங்களப் போய் பார்த்து வரணும்’

சாலிஹாவுக்குச் சரி என்று பட்டது. துணைக்குத் துணையுமாச்சி, பத்திரமாக, பாதுகாப்பாகப் போய் வர சொந்தமுமாச்சி.

‘சரி சித்திமா! நீங்க அண்ணன்களிடமும், மச்சிகளிடமும் கேட்டுச் சொல்லுங்க. நானும் ரெடியாகிறேன்’

‘அவங்கட்ட என்னத்தக் கேக்க. அண்ணன் எப்போ போவான். திண்ணை எப்போ காலியாகும்னு கெடக்காணுங்க. அவளுங்க சொல்லவே வேணாம்’. சொல்லிவிட்டு பீவியம்மா பக்கத்தில் கட்டி லில் படுத்தாள்.

சாலிஹா ரஷிதாவிடம் போய் வந்த கதையையும், திருநெல்வேலி போகும் கதையையும் பேச ஆரம்பித்தாள்.

சாலிஹா பயணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தாள். சாச்சிக்கு செய்தி அனுப்பினாள். சாச்சியும் தன்னுடன் கொண்டுபோகும் பொருள் களையெல்லாம் சாலிஹாவின் வீட்டிற்கே அனுப்பி வைத்தாள்.

பீவியம்மா புலம்பிக் கொண்டே இருந்தாள். ‘இப்படித் தனியே போவ ணுமா? கணவனைத்தான் அல்லாஹ் பறித்துக்கொண்டான். ஒரு பிள்ளையுமா அல்லாஹ் தந்திருக்கக் கூடாது? பட்ட மரமாக நிற்கிறாளே?’ பெற்ற வயிறல் லவா.. புலம்பித் தீர்த்தது.

ஊர் போகும் நாளும் வந்தது. சைக்கிள் ரிக்ஷா ஏறி பஸ் ஸ்டாண்ட் வந்து சேர்ந் தார்கள். சின்னத் தம்பிதான் சைக்கிளில் வந்து ஏற்றி விட்டான். பஸ் புறப்பட்டது. ‘அக்கா வருமுன் சொல்லுங்கள். நான் ஊருக்கே வந்து கூட்டியாறேன்’

‘சித்திமா! பத்திரமாக போய் வாங்க!’ இருவரும் தலையாட்டினார்கள்.

சித்தி கூறினாள். ‘நா நாலு நாள்ல திரும்பிவிடுவேன். சாலியா அவ மச்சி, மச்சி மக்களிடம் சடவாரி மெல்ல வருவா’

பேருந்தின் ஜன்னல் வழியாக சில் லென்று வீசிய காற்று முகத்தில் அறைந்தது.

ஜன்னல் கதவைப் பாதியாக இழுத்து மூடினாள். ஊர்ப் பயணம் என்பது சிரமமான ஒன்றாகும். திருநெல்வேலி நிறுத் தத்தில் இறங்கி மறு பஸ் ஏற வேண்டும். கணபதி வண்டி சரியான நேரத்தில் கிடைத் தால் ஊருக்குள் நுழைந்து போவான். நாகர்கோவில் போகும் பேருந்தென்றால் மெயின் ரோட்டில் இறக்கி விட்டுப் போய் விடுவான். சுமைகளைத் தூக்கிக் கொண்டு ஊருக்குள் போக வேண்டும்.

சல்மானின் நினைவு வந்தது. சல்மா னோடு மதுரை வரும்போதெல்லாம் இன்ப மான பயணமாக இருக்கும். ஜன்னல் வழி யாகத் தெரிகின்ற கிராமங்களைப் பற்றிச் சொல்லிக் கொண்டும் கடலை மிட்டாய், வெள்ளரிக்காய், சோளத்தட்டைகளை வாங்கிக் கொடுத்துக் கொண்டும் வரு வான்.

கோவில்பட்டி வரும்போதே பஸ்ஸில் தொற்றிக்கொண்டு பஸ்சுக்கு உள்ளேயே வியாபாரிகள் கோரசாகக் 'கடலை மிட் டாய்.. கடலை மிட்டாய்..' என்று கூவிக் கொண்டே இருந்தார்கள்.

'கடலை மிட்டாய் வாங்கித் தரட்டுமா?' கேட்டாள் சித்திமா.

'வேண்டாம் சாச்சிமா! தம்பி வாங்கிக் கொடுத்திருக்கிறான் நிறைய, கொக்கு மிட்டாய் கடலை மிட்டாய் எல்லாம்..'

'யானைக்கல்லிலும், சிம்மக்கல்லிலும் கிடைக்காத சாமானுங்களா?' என்றாள் சித்திமா. நிஜம்தான். மதுரையில் கிடைக் காத பொருளா? மதுரையைச் சுற்றிக் கிராமங்கள் பட்டி தொட்டிகள் ஏராளம். தினமும் யானைக்கல் திருவிழாவாகத் தான் காட்சி தரும். காய்கறிகள், கிழங்கு வகைகள், கீரைகள், பழவகைகள் என்று பாரபட்சம் இன்றி மக்கள் அனைவரும் வந்து வாங்கிச் செல்வார்கள்.

பக்கத்திலே கொடைக்கானல் இருப்ப தால் கொடைக்கானலில் இருந்து பல வகை யான பழங்கள் வந்து சேரும். ஆப்பிள், பிளம்ஸ், பேரிக்காய்கள் இன்னும் பல விதமான பழங்கள் பலவிதமான நிறமுள்ள பூக்கள். ரோஜாப் பதியன்கள் கிடைக்கும். மல்லிகைப் பூக்களோ அம்பாரமாய்க் கொட்டி வைக்கப்பட்டிருக்கும். வேர்க் கடலை சிறிய மலைக் குன்று போல் குவிக்கப்பட்டிருக்கும். கரும்புக் கட்டு களும், மஞ்சள் செடிகளும் வரிசையாக அடுக்கப்பட்டிருக்கும்.

'சாலியாம்மா என்ன சிந்தனையில்மா இருக்கிறாய்? ஏதாவது பேசிக் கொண்டு வாயேன்' சிந்தனையை சித்திமா கலைத் தாள்.

'ஒன்றுமில்லை பழைய ஞாபகம் வந்தது'

'வீட்ல போய் எப்படிமா தனியா இருப்ப?'

'கசமாடியை வரச் சொல்லி இருக்கேன். அவ வந்தா நாலு இடம் போக வர வசதி யாக இருக்கும்'

சாத்தூர் வந்தது. கண்டக்டர் குரல் கொடுத்தார். 'பத்து நிமிசம் பஸ்ஸு நிக்கும். டீ சாப்பிடுகிறவங்க சாப்பிட்டு வரலாம்'

மணி பதினொன்றைத் தொட்டுக் கொண்டிருந்தது. எட்டு மணிக்கு வீட்டை விட்டுப் புறப்பட்டு, எட்டேகால் வண்டி யில் ஏறினார்கள்.

'சித்திமா சாயாக் குடிக்கிறீங்களா?'

'ஏளா எம்மா! இவங்க கடையில யாரு குடிப்பா? தேத்தண்ணி மாதிரி இருக்காது. சக்கைய மாறி மாறி அவிச்சு ஊத்துவான். தேயிலை நாத்தம் நாறும். நான் சுடு தண்ணி போத்தல்ல ஊத்திட்டு வந்துருக் கேன்' வாயில் பேச்சு இருக்க கைகளால் இரண்டு டம்ளர்களில் ஊற்றி சாலிஹாவிடம் சாயாவை நீட்டினாள் சித்திமா.

ஆவலோடு டீயை வாங்கிக் குடிக்க ஆரம்பித்தாள் சாலிஹா. பஸ் புறப்பட்டது திருநெல்வேலியை நோக்கி..!

(தொடரும்)

● முகம்மது கபீர், முதன்மை செயற்கை நுண்ணறிவு பொறியாளர், ரியாத்

இன்று எங்கு திரும்பினாலும் AI(Artificial Intelligence) எனப்படும் செயற்கை நுண்ணறிவு பற்றிய பேச்சுதான். இது ஏதோ சினிமாக்களில் வரும் கற்பனை விஷயம் அல்ல. இன்று நம் கண்முன்னே வேலை வாய்ப்புகளையும், பொருளாதாரத்தையும் இது மாற்றத் தொடங்கிவிட்டது.

தமிழ்நாட்டு மாணவர்கள், இளைஞர்களுக்கு இது ஓர் எச்சரிக்கை மணி. அதே சமயம் சரியாகப் பயன்படுத்தினால் இது ஒரு பொன்னான வாய்ப்பும் கூட. சென்னை, கோவை, மதுரை என நம் மாநிலத்தின் மூலை முடுக்கெல்லாம் இந்த மாற்றம் வரப்போகிறது. இதை நாம் வேடிக்கை பார்க்கப் போகிறோமா? அல்லது நம் வசப் படுத்தப் போகிறோமா?

### *வேலை போகுமா? அல்லது மாறுமா?*

பலருக்கும் இருக்கும் பயம் AI வந்தால் என் வேலை போய்விடுமா? என்பதுதான். உண்மை என்னவென்றால் AI உங்கள் முழு வேலையையும் பறிக்காது. ஆனால் உங்கள் வேலையில் இருக்கும் சலிப்பான, திரும்பத் திரும்பச் செய்யக்கூடிய விஷயங்களை அது எடுத்துக்கொள்ளும்.

உதாரணத்திற்கு கம்ப்யூட்டரில் தரவுகளைப் பதிவு செய்வது (Data Entry), அடிப்படை கோடிங் எழுதுவது போன்ற வேலைகளை AI மிக வேகமாகச் செய்துவிடும். ஆனால் புதிதாக யோசிப்பது, பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பது, மனிதர்களோடு உரையாடுவது போன்ற விஷயங்களில் AIயால் மனிதர்களை வெல்ல முடியாது. அதனால் சில பழைய வேலைகள் மறையலாம்; ஆனால் AI இயக்குவதற்கும், கண்காணிப்பதற்கும் பல புதிய வேலைகள் உருவாகும்.

### *தமிழ்நாட்டில் என்ன நடக்கும்?*

- **சென்னை (ஐடி துறை):** இதுவரை அடிப்படை கம்ப்யூட்டர் வேலைகளுக்கு ஆட்களை எடுத்து வந்த ஐடி நிறுவனங்கள் இனி AI தெரிந்தவர்களைத்தான் தேடுவார்கள்.
- **கோவை ஓசூர் (தொழிற்சாலைகள்):** இயந்திரங்களை இயக்கத் தெரிந்தவர்களை விட அந்த இயந்திரங்கள் தரும் தகவல்களைப் புரிந்து கொள்ளக்கூடிய 'ஸ்மார்ட்' பணியாளர்களுக்கே மவுசு அதிகம்.
- **விவசாயம்:** பயிர் நோயைக் கண்டறியவும், விளைச்சலைப் பெருக்கவும் இனி செல்போன் செயலிகள் வரும். இதை விவசாயிகளுக்குக் கொண்டு சேர்க்கும் உள்ளூர் இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் கிராமங்களிலேயே உருவாகும்.

### *இளைஞர்கள் என்ன செய்ய வேண்டும்?*

AI யோடு போட்டி போடாதீர்கள்; அதை உங்கள் உதவியாளராக மாற்றிக் கொள்ளுங்கள்.

- **கூடுதல் திறமை வேண்டும்:** கம்ப்யூட்டர் அறிவு முக்கியம். அதோடு சேர்த்து, தெளிவாகப் பேசுவது, வித்தியாசமாக யோசிப்பது, சட்டமோ மருத்துவமோ - உங்கள் துறையில் ஆழமான அறிவு பெறுவது மிக முக்கியம்.
- **செய்முறைப் பயிற்சி** (Projects): வெறும் புத்தகப் படிப்பு மட்டும் போதாது. சிறிய அளவில் நீங்களே ஏதாவது செய்து பாருங்கள் (Projects). இன்டர்ன்ஷிப் (Internship) மூலம் தொழில் அனுபவம் பெறுங்கள்.



## AI தொழில் நுட்பமும் எதிர்கால வேலை வாய்ப்பும்

**– தமிழ்நாட்டு இளைஞர்களுக்கான எளிய வழிகாட்டி**

- **தமிழில் பழகுங்கள்:** ஆங்கிலம் மட்டுமே தெரிந்தால் போதாது. நம் ஊர் பிரச்னைகளுக்குத் தமிழில் தீர்வு காணத் தெரிந்தவர்களுக்குத் தான் இனி எதிர்காலம்.
- **கற்றுக்கொண்டே இருங்கள்:** கல்லூரிப் படிப்பு முடித்தவுடன் படிப்பு முடிந்து விடுவதில்லை. தினமும் புதிதாக வரும் தொழில்நுட்பங்களைக் கற்றுக்கொண்டே இருக்க வேண்டும்.

### அரசு என்ன செய்ய வேண்டும்?

மாணவர்களுக்கு மடிக்கணினி கொடுப்பது நல்ல தொடக்கம். ஆனால் அது மட்டும் போதாது. கல்லூரிப் பாடத்திட்டங்களை மாற்ற வேண்டும். தொழிற்சாலைகளோடு இணைந்து மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். படித்து முடித்தவுடன் வேலைக்குத் தயாராக இருக்கும் வகையில் அவர்களை உருவாக்க வேண்டும்.

### ஊர் ஊருக்கு வாய்ப்புகள்

எல்லா வேலைகளும் சென்னைக்கே செல்ல வேண்டியதில்லை. மதுரையில் மருத்துவத் தொழில்நுட்பம், கோவையில் ஜவுளித் தொழில்நுட்பம், தஞ்சாவூரில் விவசாயத் தொழில்நுட்பம். இப்படி அந்தந்த ஊரின் சிறப்புக்கு ஏற்ப AI தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தினால் நம் இளைஞர்கள் வெளியூர் செல்லாமலேயே உள்ளூரில் சாதிக்கலாம்.

### இறுதியாக ஒரு செக் லிஸ்ட்

- அடிப்படை கம்ப்யூட்டர் மொழிகளைக் (Python) கற்றுக் கொள்ளுங்கள்.
- வெறும் படிப்பு என்று இல்லாமல், நீங்களே சொந்தமாகச் சிறிய புராஜெக்ட்களைச் செய்து பாருங்கள்.
- ஆங்கிலத்தோடு, தமிழிலும் தொழில்நுட்பத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்.
- உலகம் எவ்வளவு வேகமாக மாறுகிறது என்பதைத் தினமும் செய்திகள் மூலம் கவனியுங்கள்.

மாற்றம் கண்டு பயப்பட வேண்டாம். சரியான திட்டமிடலும், புதியதைக் கற்கும் ஆர்வமும் இருந்தால், இந்த AI தொழில்நுட்பம் தமிழ்நாட்டு இளைஞர்களின் வாழ்வை உயர்த்தும் ஏணியாக இருக்கும். எதிர்காலம் உங்கள் கையில்!


HIJAZ
LEATHERS PVT. LTD.,
Tanners & Exporters of
Finished Leathers & Fashion Gloves

HEAD OFFICE :
17/7, Wuthucattan Street,
Periamet, Chennai - 600 003.
☎ : +91-44-25615938, 25612969.

TANNERY :
#1056/A1, Konamedu,
Vaniyambadi - 635 751.

GLOVE FACTORY :
560, National Highway - 46, Girisamudiram
Vaniyambadi - 635 751. ☎ : +91-4174-290590.
E-mail : pmyousuf@gmail.com, hijazleathersindia@yahoo.co.in
Website : www.hijazleathers.com

● ஷிஹாபுத்தீன் இப்னு ஹம்சா

# ஆளுமை உருவாக்கம் குர்ஆனில்..!

தமிழில்: **அ.ரமீசுர் ரஹ்மான்**

(சாந்தபுரம் அல் ஜாமிஆ அல் இஸ்லாமியா பல்கலைக்கழக மாணவர்)

---

**இன்று உலகளவில் அதிக கவனத்தைப் பெறும் ஒரு தலைப்புதான் ஆளுமை வளர்ச்சி (Personality Development). நகரங்களிலும் கிராமங்களிலும் தனிப்பட்ட பண்பு வளர்ச்சிக் கான பயிற்சி முகாம்களும் வகுப்புகளும் பரவலாக நடந்து வருகின்றன. பெரும் தொகை செலவழிக்கப்படும் இந்த நிகழ்ச்சிகள் பல நேரங்களில் ஒரு ஃபேஷனாக மாறிவிடு கின்றன. ஆனால் உண்மையான ஆளுமை வளர்ச்சி என்றால் என்ன? ஒருவர் எவ்வாறு, எப்படி இருக்க வேண்டும்? இதனை வரையறுப்பது யார்? நன்மை, தீமை யாரால் தீர்மானிக்கப்படுகிறது? குர்ஆனின் வெளிச்சத்தில் பார்த்தால் ஆளுமை வளர்ச்சி என்பது உள் வளர்ச்சியும் வெளி வளர்ச்சியும் ஒருங்கிணைந்ததாகும்.**

ஆளுமை வளர்ச்சியின் முதல் படி, ‘நான் யார்?’ என்ற கேள்விக்கு விடை காண்பதே ஆகும். நாம் எங்கிருந்து வந்தோம்? இவ்வுலகில் நம்முடைய நோக்கம் என்ன? மனிதன் அல்லாஹ்வின் கலீஃபா (பிரதிநிதி) ஆவான் என்று குர்ஆன் கூறுகிறது. படைத்த அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படியவும், வாழ்க் கையை அவனுக்கே அர்ப்பணிக்கவும்தான் மனிதன் பூமிக்கு அனுப்பப்பட்டிருக்கிறான். நன்மை தீமைகளைப் பிரித்தறியும் திறன் மனித னுக்கு உண்டு. உழைப்பின் மூலம் நன்மைகளை வளர்த்துக் கொள்ளவும், தீமையிலிருந்து விலகிக் கொள்ளவும் அல்லாஹ் மனிதனுக்கு ஆற்றல் அளித்திருக்கிறான்.



‘மேலும், மனிதனுக்கு தான் முயற்சி செய்ததைத் தவிர வேறு எதுவும் இல்லை!’ (திருக்குர்ஆன் 53:39).

இந்த வசனம் ஆளுமை(Personality) வளர்ச்சியின் அடிப்படைத் தத்துவமாக உழைப்பின் முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டுகிறது. ஒரு மனிதன் தனது இலக்குகளை அடையவும், பண்பு நலன் களைச் செம்மைப்படுத்தவும், சிந்த னையைக் கொண்டு முயற்சி செய்ய வேண்டும். அந்த முயற்சி உள சுத்திகரிப்பில் இருந்து ஆரம்பிக்கிறது.

ஏனெனில், நபி(ஸல்) அவர்களின் அருள்மொழியின் படி, ‘இதயம் நல்ல தானால், மனிதன் முழுவதும் நல்ல வனாகிவிடுவான்’

‘இறைநம்பிக்கைகொண்டவர்களே! அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். மேலும், ஒவ்வொரு மனிதனும், நாளைய தினத்திற்காக எதனைத் தயார் செய்து வைத்திருக்கின்றான் என்று பார்க் கட்டும்’ (திருக்குர்ஆன் 59:18).

சுயபரிசோதனைதான் ஆளுமை வளர்ச்சியின்

அல்லாஹ்வின் மீதான அச்சம்தான் சுய காவலாளியாகச் செயல்படுகிறது. அது தவறுகளைத் திருத்தவும், சரியான பாதையில் முன்னேறவும் தூண்டுகிறது. இந்த உள் காவலன் (தக்வா) காவல் துறையோ, நீதிமன்றமோ போன்ற வெளிப் புறக் கட்டுப்பாடுகளை விடவும் வலிமையானது. ஏனெனில் அது இதயத்தின் தூய்மையிலிருந்து உருவாகிறது.

அடிப்படை அம்சம் என இந்த வசனம் கூறுகிறது. ஒரு மனிதன் தனது செயல்கள், நோக்கங்கள், இலக்குகள் ஆகிய வற்றை மதிப்பீடு செய்ய வேண்டும். அல்லாஹ்வின் மீதான அச்சம்தான் சுய காவலாளியாகச் செயல்படுகிறது. அது தவறுகளைத் திருத்தவும், சரியான பாதையில் முன்னேறவும் தூண்டுகிறது.

இந்த உள் காவலன் (தக்வா) காவல் துறையோ, நீதிமன்றமோ போன்ற வெளிப் புறக் கட்டுப்பாடுகளை விடவும் வலிமை யானது. ஏனெனில் அது இதயத்தின் தூய்மை யிலிருந்து உருவாகிறது.

‘நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ் வுக்கு அஞ்சுங்கள். மேலும், நேர்மையான சொல்லை மொழியுங்கள்’ (திருக்குர்ஆன் 33:70).

சத்தியமும் நம்பிக்கையும்தான் ஆளுமை வளர்ச்சியின் முக முத்திரைகள் ஆகும்.

‘இன்னும் அவர்கள் தங்களிடம் ஒப்படைக் கப்பட்ட அமானிதங்களையும் தாங்கள் கொடுத்த வாக்குறுதிகளையும் பேணிக் காக்கக் கூடியவராய் இருக்கின்றார்கள்’ (திருக்குர்ஆன் 23:8).

வாக்குறுதிகளைக் காப்பது, நேர்மையாகப் பேசுவது ஆகியவை ஒருவரின் நம்பகத் தன்மையை உயர்த்தும். மற்றவர்களுடன் உள்ள உறவுகளை உறுதிப்படுத்தும்.

பொருளாதார உலகாயதப் பார்வையில் பேச்சு நடை, உடை அணிவது போன்ற வெளிப்புற அலங்காரங்களுக்கு முக்கியத் துவம் அளிக்கப்படுகிறது. ஆனால், உள் நேர்மை (சத்தியம்) தான் உண்மையான ஆளுமையின் அடித்தளம்.

‘இறைநம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் நீதியைக் கடைப்பிடிப்பவராகவும் அல்லாஹ்வுக்காக சான்று வழங்குபவராகவும் திகழுங்கள்! (நீங்கள் செலுத்தும் நீதியும், வழங்கும் சாட்சியும்) உங்களுக்கோ உங்கள் பெற்றோருக்கோ நெருங்கிய உறவினருக்கோ பாதகமாக இருந்தாலும் சரியே!’ (திருக் குர்ஆன் 4:135).

நீதி என்பது ஆளுமை வளர்ச்சியின் மையக் கல்லாகும். தன் நலனுக்கும் உறவினருக்கும் முன்னுரிமை கொடுக்காமல், சத்தியம், நீதிக்காக நிலைத்திருக்கும்போது தான் ஒருவர் சமுதாயத்தில் மதிப்பு பெறு கிறார்.

அல்லாஹ் நபியைக் குறித்து ‘மேலும், திண்ணமாக நற்குணத்தின் மிக உன்னதமான நிலையில் நீர் இருக்கின்றீர்’ (திருக்குர்ஆன் 68:4) என்று குறிப்பிடுகிறான்.

நபி(ஸல்) அவர்களின் வாழ்க்கை ஆளுமை வளர்ச்சிக்கான ஒப்பற்ற முன்னு தாரணமாகும். கருணை, பொறுமை, இரக்கம், பணிவு ஆகியவற்றை அவர்கள் தமது குணநலனாக ஆக்கிக் கொண்டார்கள்.

‘அவர்கள் எத்தகையோர் எனில் வசதி யுள்ள நிலையிலும், வசதியற்ற நிலையிலும் செலவழிப்பார்கள். மேலும் அவர்கள் சினத்தை அடக்கிக் கொள்வார்கள். மேலும் மக்(களின் தவறு)களை மன்னித்து விடு வார்கள்’ (திருக்குர்ஆன் 3:134).

இத்தகைய பண்புகள் மனிதனின் ஆளு மையை ஒளிரச் செய்கின்றன. அல்லாஹ்வின் அடியார்கள் பூமியில் பணிவோடு நடக் கிறார்கள். பணிவு ஆளுமையின் அழகை அதிகரிக்கிறது. அகங்காரத்தை விட்டு பிறரை மரியாதையுடன், பணிவுடன் நடத்துவது ஒருவரை சமுதாயத்தில் பிரியமானவராக மாற்றுகிறது.

‘என் இறைவனே எனக்கு அதிகமான ஞானத்தை வழங்குவாயாக!’ (திருக்குர்ஆன் 20:114).

அறிவு ஆளுமை வளர்ச்சியின் அடிப் படை அம்சமாகும். அறிவைப் பெற்றுக் கொள்வது வாழ்க்கையின் இலக்கைத் தெளிவுபடுத்துகிறது. மனிதனை தார்மிகமாக உயர்த்துகிறது. வெளிப்புறப் பார்வையில், அறிவு மனிதனை சமூக ரீதியாகவும் தொழில் ரீதியாகவும் உயர்த்தும் வழி மட்டுமே. ஆனால் உண்மையில் அது உள்ளார்ந்த வளர்ச்சிக்கான அடிப்படையாகும்.

மேலும் ஒரு முக்கியமான பண்பு இஹ்ஸான். அதாவது ஒவ்வொரு செய லிலும் சிறந்ததைச் செய்யும் மனப்பாங்கு. வேலைகளிலும், உறவுகளிலும், சமூக நடத்தைகளிலும் சிறந்த முறையைத் தேர்வு செய்வது ஆளுமையின் தரத்தை உயர்த்து கிறது.

இஹ்ஸான் என்பது அகத்தூய்மையும் வெளிப்புறச் சிறப்பும் இணைந்த ஒரு நிலை. ஏனெனில் அது இதயத்தின் தூய்மையையும் செயலின் மேன்மையையும் ஒன்றாகக் கொண்டுள்ளது. பொறுமை, சுய கட்டுப்பாடு கூட ஆளுமையின் முக்கிய அங்கங்கள். எதிர் மறையான சூழ்நிலைகளில் அமைதியையும் சமநிலையையும் காக்க வேண்டும்.

இந்த அடிப்படையில் பார்த்தால் ஆளுமை வளர்ச்சி என்பது ஓர் இடைவிடா நடைமுறை. அது உள் சுத்திகரிப்பையும் வெளி மேம் பாட்டையும் ஒருங்கிணைக்கிறது. உழைப்பு, நீதி, பணிவு, அறிவுத் தேடல், பொறுமை, கருணை, நம்பிக்கைத்தன்மை, நன்மை ஆகிய குர்ஆனிய மதிப்புகள் இந்த வளர்ச்சிக்குத் தெளிவான வழிகாட்டுதலை வழங்குகின்றன.

வெளிப்புற அம்சங்களான உடை, பேச்சு, நடை ஆகியவை முக்கியமானவை என்றாலும், உண்மையான ஆளுமை வளர்ச்சி இதயத்தின் தூய்மையிலிருந்தே பிறக்கிறது.


KALANJIAM
HARDWARE STORES
(WHOLESALE)

Dealers In : Locks, Ladders, Handles, Kitchen Fittings, Bathroom Accessories

33, Devaraja Mudali Street, Park Town, Chennai - 600 003.
Contact Number : 9380080082, 25351584, 25351045
e-mail : kalanjiamhardwares@gmail.com

# சமரசம் புதிர் போட்டி 6

- இந்தப் பகுதியில் கேட்கப்படும் கேள்விகளுக்குச் சரியான விடையை **2026 மார்ச் 30**ஆம் தேதிக்குள் கடிதம் மூலமோ, **73050 40386** என்ற வாட்ஸ் அப் எண்ணிலோ, **samarasam.article@gmail.com** என்ற மின்னஞ்சல் மூலமோ அனுப்பலாம்.
- சரியான விடையை எழுதுபவர்களுக்கு ரூபாய் 200 பரிசுத் தொகையாக வழங்கப்படும்.
- ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் சரியான விடையை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுத் தொகை வழங்கப்படும்.
- இப்பகுதியில் கேட்கப்பட்டுள்ள கேள்விகள் குர்ஆன், ஹதீஸ், கடந்த சமரசம் இதழ்கள் ஆகியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளது.
- போட்டியில் கலந்து கொள்பவர் தங்களின் பெயர், முகவரி, அலைப்பேசி, G Pay எண் ஆகியவற்றை அனுப்பவும்.

1. (இதற்கு முன்பு) எத்தனையோ இறைத் தூதர்(களும் அவர்)களோடு சேர்ந்து இறை அன்பர்கள் பலரும் போர் புரிந்துள்ளார்கள். அல்லாஹ்வின் வழியில், அவர்களுக்கு ஏற்பட்ட துன்பங்களினால் அவர்கள் மனந் தளர்ந்து விடவில்லை; ஊக்கம் குன்றிவிடவுமில்லை. (அசத்தியத்திற்கு முன்) அவர்கள் பணிந்திடவுமில்லை. நிலை குலையாத இத்தகைய பொறுமையாளர் களையே அல்லாஹ் நேசிக்கின்றான். இந்த வசனம் இடம் பெற்றுள்ள திருக்குர்ஆன் அத்தியாயம்

   அ) அல் அன்ஃபால் ஆ) ஆலு இம்ரான்

2. 'எவர் ஒருவர் நோன்பு வைத்திருந்தும் பொய் சொல்வதையும், பொய்யான நடவடிக்கை களையும் விட்டுவிடவில்லையோ அவர் வெறுமனே பசித்திருப்பதிலும், தாகித்திருப் பதிலும் அல்லாஹ்வுக்கு எந்தத் தேவையும் இல்லை' இந்த நபிமொழியை அறிவித்தவர்

   அ) அன்னை ஆயிஷா(ரலி)
   ஆ) அபூஹுரைரா(ரலி)

3. மஸாகின் என்பவர்

   அ) ஏழையான முஸ்லிம்கள்
   ஆ) ஏழையான முஸ்லிம் அல்லாதவர்கள்

4. ஜகாத் கணிப்பான்(Easy Zakat Calculator) இணைய செயலியை உருவாக்கியவர்கள்

   அ) சாலிடாரிட்டி இளைஞர் அமைப்பு
   ஆ) இந்திய மாணவர் இஸ்லாமிய அமைப்பு(SIO)

5. Four Stars of Destiny நூலை எழுதியவர்

   அ) ஜெனரல் உபேந்திர திவேதி
   ஆ) ஜெனரல் மனோஜ் முகுந்த்

6. ஈரானின் புதிய உயர் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டவர்

   அ) ஆயத்துல்லாஹ் சையத் முஸ்தஃபா
   ஆ) ஆயத்துல்லாஹ் அலீரேசா அராஃபி

7. தமிழ்நாடு சட்டப் பேரவையின் துணை சபாநாயகர்

   அ) அப்பாவு ஆ) பிச்சாண்டி

8. தமிழ்நாட்டின் தற்போதைய பொறுப்பு ஆளுநர்

   அ) ஆர்.என்.ரவி ஆ) ஆர்.வி.ஆர்லேகர்

## புதிர் போட்டி நான்கிற்கான விடைகள்

1. (அ) அல்பகரா 2. (அ) இப்னு அப்பாஸ்(ரலி) 3. (ஆ) உமர் இப்னு அப்துல் அஸீஸ்(ரஹ்) 4. (அ) சுலைமான் அல் ராஜிஹி 5. (ஆ) அபுல் கலாம் ஆசாத் 6. (ஆ) ஜோஹ்ரான் மம்தானி 7. (அ) பெனாசிர் பூட்டோ 8. (அ) ஷஹீத் ஷேக் அஹமது யாசீன்

**சரியான விடையை எழுதியவர்கள்:**

P.A. சமீஹா – கடையநல்லூர், ஏ.ஷாகுல் ஹமீது – கொரக்காவாடி, ப.சையத் அஹமத் – துளசேந்திரபுரம், முஹம்மது பெரோஸ்கான் – நெல்லிக்குப்பம், பஸீலா மர்யம் – மடவலயம், வி.எஸ்.சம்சுத்தீன் – கடையநல்லூர், ஷகி நிஷா – திருப்பூர், ஸ்ரீமதி – மஞ்சக் குப்பம், ஜன்னத்துல் பிர்தௌஸ் – துளசேந்திரபுரம், பாலா ஆமினத் – சிக்கல், S.S. ஆயிஷா பானு – கடையநல்லூர், H.M.அஜீம், காரைக்கால்.

**பரிசுக்குரியவராகக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்:**

H.M. அஜீம், காரைக்கால்

• அ.முத்துக்கிருஷ்ணன்





## கண்ணீரின் வாசம்

பள்ளிக் குழந்தைகளுக்காக
சிறிய சிறிய குழிகள்
தோண்டப்படுகின்றன

படுகுழியின் சுவர்களில் இனி
இந்தப் பிஞ்சு விரல்கள்
மௌனமாக
கிறுக்கிப் பார்க்குமா?

பாடல் கேட்க வேண்டிய காதுகள்
படையெடுப்பின் சத்தத்தில்
காதுகளை மூடிக்கொள்ளுமா?

இவர்களின் மீது
மக்கள் வீசும் பூக்கள் கூட
அவர்களுக்குக்
குண்டுகள் பொழிந்ததை
நினைவுபடுத்துமோ?

இந்த தேவையற்ற போர்
யாரின் வெற்றிக்காக?
எவரின் பெருமைக்காக?

இந்தக் குழிகளில் இனி
பாடப்புத்தகத்தின்
வாசனை வீசுமா?

இந்தப் புகைப்படத்தைப்
பார்க்கப் பார்க்க
எனக்குக் கண்ணீரின்
வாசம் வீசுகிறது
உங்களுக்கு?

## வெள்ளைத் துணியின் கீழ் உறங்கும் உலகம்

நூற்று அறுபது சிறு
உயிர்களின்
சடலங்கள் வெள்ளைத்
துணியில்
போர்த்தப்பட்டு மலர்களால்
மெதுவாக
மூடப்பட்டிருக்கின்றன

அந்த வெள்ளை நிறம்
அமைதியின் நிறமா
இல்லை சொல்ல முடியாத
துயரத்தின் நிறமா
என்று நான் திகைத்து
நிற்கிறேன்

ஒவ்வொரு துணியின் கீழும்
ஒரு
உலகம் உறங்குகிறது
ஒரு பள்ளிப்பை
ஒரு சிரிப்பு
ஒரு எழுதப்படாத எதிர்காலம்

மலர்கள் வாசம்
வீச வேண்டிய இடத்தில்
கண்ணீரின் உப்பு மணம்
காற்றில் கலக்கிறது

தாய் தந்தையரின் விரல்கள்
அந்த வெள்ளை
ஓரங்களைத் தொட்டு
இன்னும் ஒரு முறை
உயிரின்
வெப்பத்தைத் தேடுகின்றன

உறவினர்களின் அழுகை
அலைபோல் எழுந்து விழ
மண்ணே அதைப்
பொறுத்துக்
கொள்ள முடியாமல்
நடுங்குகிறது

பெயர்கள் ஒவ்வொன்றாகச்
சொல்லப்படும்போது
அது ஒரு வரலாற்றின்
பக்கங்கள்
உடைவதைப் போன்ற
சத்தம்

சிறு கால்கள் ஓட வேண்டிய
பாதைகள்
விளையாட்டு மைதானங்கள்
நினைவுகளாக மாறி
பூமி தன் மார்பில் இவ்வளவு





# மீண்டும் முளைக்கும் சிரிப்புகள்

சுமையை
ஏற்றுக் கொள்வது எப்படி?

இந்தக் காட்சி
வெறும் எண்ணிக்கையல்ல

மனித மனசாட்சியின் முன்
வைக்கப்பட்ட கேள்விக்குறி

யாரின் கோபம் இந்த மலர்களை
இறுதி அலங்காரமாக மாற்றியது?

இந்த வெள்ளைத் துணிகளை
அமைதியின் சின்னமாக ஏந்தி
ஏன் எந்த நாடும்
போரை நிறுத்த முன்வரவில்லை

ஐம்பதாயிரம் குழந்தைகளைக்
கொன்று
காஸாவில் புதைத்த போது
அமைதி காத்த இந்த உலகம்

இதனையும் கடந்து செல்லுமா
அல்லது
இந்த இரவில் உறங்கும் முன்
தன் மனசாட்சியிடமாவது
கேள்வி எழுப்புமா?

மினாபில்
வானம் கருமையாக இருந்தது
குழந்தைகளின் கண்களில்
இன்னும் ஒளி இருந்தது

'இவர்கள் நாளைய
தீவிரவாதிகள்'
என்ற வார்த்தையை
காஸாவில் சொன்னது போல்
இன்னும் யாரும் இங்கே
சொல்லவில்லை

காஸாவில் திரும்பத் திரும்பச்
சொல்லப்பட்ட இந்த
வார்த்தைகள்
குண்டுகளை விடக்
கூர்மையானவை

பள்ளி மணி
ஒலிக்க வேண்டிய நேரத்தில்
வெடிப்புச் சத்தம்
பாடமாக மாறியது

ஓடிக் கொண்டிருந்த
சிறு கால்கள்
திடீரென மௌனமாகின

எதிர்காலம் என்ற சொல்
அவர்களின் உதடுகளில்
மலரவே இல்லை

'ஒருநாள் அவர்கள்
வளர்வார்கள்'
என்ற பயம்
இன்று அவர்களை
மண்ணாக்கியது

பயம் இவ்வளவு கொடூரமா
பச்சை இலைகளைக் கூட
நெருப்பாகப் பார்க்க?

தாயின் அரவணைப்பு
சிதைந்த சுவரின்
நிழலாகி விட்டது
தந்தைகளின் கனவும் கூட
கண்ணீரில் கரைந்தது

ஒரு குழந்தையின் சிரிப்பை
உலகம் ஏன்
அச்சமாகக் கண்டது?

விதைகள் முளைக்கும் முன்
நசுக்கினால்
ஒரு காடே
இல்லாமல் ஆகிவிடுமா?

இல்லை
மண்ணின் நினைவில்
அந்தச் சிரிப்புகள்
மீண்டும் முளைக்கும்

கொல்லப்பட்ட ஒவ்வொரு
பிஞ்சும்
மனிதத்தின்
மனசாட்சியாக எழும்

# ஆயத்துல்லாஹ் அலீ கமேனி வீரமரணம்:
## ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தலைவர் இரங்கல்







தில்லியிலுள்ள ஈரான் தூதரக அதிகாரி டாக்டர் முஹம்மத் ஃபத்ஹ் அலீ அவர்களை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் உயர்நிலைக் குழு சந்தித்தது. ஜமாஅத் தலைவர் சையத் சஆதத்துல்லாஹ் ஹுசைனி அவர்களின் தலைமையில் சென்ற இந்தக் குழுவில் ஜமாஅத் தேசியத் துணைத் தலைவர் எஞ்சினீயர் முஹம்மத் சலீம், செயலாளர் ஐ.கரீமுல்லாஹ் ஆகியோர் இருந்தனர்.

ஜமாஅத் குழுவினர் ஆயத்துல்லாஹ் அலீ கமேனி அவர்களின் இந்தியப் பிரதிநிதி டாக்டர் ஆயத்துல்லாஹ் அப்துல் மஜீத் இலாஹி அவர்களையும் அவருடைய உதவியாளர் ஹுஜ்ஜத்துல் இஸ்லாம் ஆகா ஜியாயீ அவர்களையும் சந்தித்தார்கள்.

இந்தச் சந்திப்பின் போது ஆயத்துல்லாஹ் அலீ கமேனி அவர்களின் உயிர்த்தியாகம் குறித்து ஜமாஅத் தலைவர்கள் தங்களின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தார்கள். ‘ஆயத்துல்லாஹ் கமேனி அவர்களின் உயிர்த்தியாகம் உலகமெங்கும் நீதியையும் சுதந்திரத்தையும் விரும்புகின்ற மக்களுக்கு ஊக்கமும் ஊட்டமும் அளித்துக் கொண்டே இருக்கும்’ என்று ஜமாஅத் தலைவர் தெரிவித்தார்.

ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் தொடுத்துள்ள தாக்குதலை ஜமாஅத் தலைவர் கடுமையாகக் கண்டித்தார். அது சர்வ தேச சட்டங்களையும் தார்மிக நெறிகளையும் மீறிய செயல் என்றும் அவர் இடித்துரைத்தார். இந்த இக்கட்டான தருணத்தில் ஈரானிய மக்களுடன் நிற்பதாகச் சொன்ன ஜமாஅத் தலைவர் ஈரானிய மக்களின் வீரத்தையும் தீரத்தையும் மன உறுதியையும் மீண்டும் மீண்டும் பேரிடர்களிலிருந்து மீண்டெழுகின்ற திறனையும் பெரிதும் பாராட்டினார். மேலும் அநீதிக்கு எதிராக அவர்கள் ஓங்கி நிற்பதையும் எதிர்த்து இயங்குவதையும் பாராட்டினார்.

பேச்சுவார்த்தை, இராஜதந்திரம் போன்றவற்றின் மூலமாகத் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார். ஒட்டுமொத்த பகுதியிலும் அமைதியும் நிலைத் தன்மையும் வளமும் வளர்ந்தோங்குவதற்காக இறைவனிடம் பிரார்த்தித்தார்.

காலையில் ஜமாஅத் உயர்நிலைக் குழு ஈரானிய தூதரகம் சென்றது. அனுதாபச் செய்தியையும் பதிவேட்டில் பதிவு செய்தது. மாலையில் இந்திய வெளிவிவகாரச் செயலாளர் திரு விக்ரம் மிஸ்ரி ஈரானிய தூதரகம் சென்றார். அனுதாபப் பதிவேட்டில் செய்தியைப் பதிவு செய்து கையொப்பமிட்டார்.

தொடர்ந்து காங்கிரஸ் மூத்த தலைவர் சல்மான் குர்ஷித் தலைமையில் உயர்நிலைக் குழு ஒன்றும் தூதரக அலுவலகம் சென்றது. செய்தியைப் பதிவு செய்தது.

**- TAL**

Published by H. Abdur Raqeeb on behalf of Creative Communication Chennai, 138 Perambur High Road, Chennai -12.
Printed by : S. Rajan at Bharani Offset Printers, 77, Venkatathiri Street, Chennai - 12. Editor : H. Abdur Raqeeb.

ST COURIER®
The People's Choice

ISO 9001 : 2015

# WE NOW ACCEPT
# TO PAY & COD
# BOOKINGS

"A NEW GATEWAY FOR YOUR BUSINESS"




An Affiliate Of
WCA
INTER GLOBAL

044-61266666

www.stcourier.com | helpdesk@stcourier.com | Follow Us On -

**Posted at Egmore RMS - Patrika Channel**
SAMARASAM Tamil Fortnightly 16 - 31 MARCH 2026 Registered With the RNI No : 33723/81
Postal Regn. No. TN/CCN/428/2024-2026 WPP No : TN/PMG(CCR)/WPP 450/2024-2026
(Publication Date 1st & 16th of Every Month) Posted on 1-3 & 16-18 of Every Month.

TRADITIONAL TRUST SINCE 1925
LKS
100 YEARS

- யார் சிரமப்படுவோருக்கு உதவி செய்கிறாரோ அவருக்கு அல்லாஹ் இம்மையிலும் மறுமையிலும் உதவி செய்கிறான்.

- ரமளான் மாதம் நோன்பு நோற்று அதைத் தொடர்ந்து ஷவ்வால் மாதத்தில் ஆறு நோன்பு நோற்றவர், காலமெல்லாம் நோன்பு நோற்றவரைப் போன்றவராவார்.

– முஹம்மது நபி(ஸல்) அவர்கள்

கதீட்ரல் ரோடு
L.K.S.
கோல்டு பேரடைஸ்
35, கதீட்ரல் ரோடு, சென்னை - 600 086.
போன் : (044) 2811 3611


If undelivered, please return to : **Samarasam, 138, Perambur High Road, Chennai - 600 012.**